சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

Vol. 13 No. 9 29-3-'42 Price 2 Annas.



இயற்கையான வாஞ்சையுடன்

அடைய விருப்புதல்

குழந்தைக்கு ஆரோக்கியத்தைத்

தரும்

வுட்வார்ட் வைத்தியனின்

"கிரைப் வாட்டர்"

என்னும் மருந்துத் திராவகம்

WOODWARD'S
GRIPE WATER

W. WOODWARD LTD. LONDON. ENGLAND

29-3-'42

சுதேசமித்திரன்

வாரப் பதிப்பு

சென்றவார நிகழ்ச்சிகள்

சர்க்காருக்கு வேண்டுகோள்

மகாத்மாஜி 'ஹரிஜனில்' எழுதியுள்ள கட்டுரையில் பின்வருமாறு கூறுகிறார்.

"இந்தியாவின் நூதன நிலைமையை முன்னிட்டு இத்தேசத்தில் நாசவேலைக் கொள்கையை (அதற்கு என்ருவது அவசியம் ஏற்பட்டாலும்) கையாளுவதில்லையென இந்திய சர்க்கார் திட்டமாகத் தெரிவிப்பார்களாஞல் நிலைமையை வெகுதூரம் சீர்படுத்தி உள்ள கவலையையும் நீக்கியவர்களாவார்கள்"

நாசவேலைக் கொள்கைக்கு எதிராக இந்திய அபிப்பிராயம் திரண்டெழுந்ததைப் பற்றி அவர் திருப்தியும் தெரிவிக்கிருர்.

* * * *

மௌலாஞ ஆஸாத் பதில்

காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டம் முடிந்ததும் வெளியில் காத்திருந்த பத்திரிகை நிருபர்களிடம் மௌலாஞ அபுல் கலாம் ஆஸாத் பின்வருமாறு கூறினுர்:—

"தீர்க்கமாக ஆலோசிக்காமல் ஒரு தீர்மானத்துக்கு வந்துவிட நாங்கள் விரும்பவில்லை. இந்தியா விஷயமாகப் பிரிட்டிஷ் யுத்த மந்திரி சபை எவ்வித முடிவு செய்திருக்கிறதென்பது தெரியவில்லை. ஸர் ஸ்டேபோர்ட் கிரிப்ஸ் என்ன சொல்லப் போகிருர் என்பதும் இப்போது தெரியவில்லை. இந்த நிலையில் சற்று பொறுத்துப் பார்ப்பது நல்லதே. முடிவு தெரியாமல் ஸர் ஸ்டேபோர்ட் விஜயத்தைப் பற்றிக் காங்கிரஸ் கருத்தின்னதெனச் சொல்வது கஷ்டம்.

"ஸர் ஸ்டேபோர்டு கிரிப்ஸை நான் கண்டு பேசியபின் பிரிட்டிஷ் சர்க்கார் திட்டம் ஆலோசனைக்கு பாத்திரமானதெனத் தெரிந்தால் நான் காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டத்தை டில்லியில் கூட்டுவேன். பிரிட்டிஷ் சர்க்கார் முடிவு பயனற்றதெனத் தெரிந்தால் அதை நான் நிராகரித்து விடுவேன். காரியக் கமிட்டிக் கூட்டமும் நடக்காது. ஆகஸ்ட் அறிக்கையைப் பற்றி காங்கிரஸ் முன்னம் செய்த முடிவை மீண்டும் புனராலோசனை செய்யாது. அது மாண்டுமடிந்து விட்டது.

"சர்ச்சில் தமது அறிக்கையில் ஆகஸ்ட் அறிக்கையைத்தானே மேற்கொண்டு விளக்கியிருக்கிருர். ஆகவே, புதிய திட்டமும் அதனைத் தானே அடிப்படையாகக்கொண்டிருக்கும் என்று ஒரு நிருபர் கேட்டதற்கு, மௌலாஞ, "புதிய திட்டம் என்னவெனத் தெரியாமல் நான் முன்னதாக ஒரு முடிவும் சொல்ல விரும்பவில்லை, ஆகவே இது விஷயமாக இப்போது நான் ஒன்றும் சொல்லப்போவதில்லை" என்று கூறினுர்.

* * *

வருமானவரி விதிப்பு

வருமான வரி விதிக்கக்கூடிய குறைந்தபக்ஷத் தொகையை 1000 ரூபாயிலிருந்து 1500 ஆக உயர்த்த வேண்டுமென்ற திருத்தத்தை இந்தியா சட்டசபை கூட்டத்தில் பொக்கிஷ மெம்பர் ஏற்றுக் கொண்டார்.

* * * *

மணியார்டர், வி. பி. இன்ஷ்யூர் கட்டண உயர்வு

1942 ஏப்ரல் முதல் தேதியிலிருந்து உள்நாட்டு மணியார்டர் கட்டணங்கள் திருத்தியமைக்கப்படும் ஒவ்வொரு பத்து ரூபாய்க்கும் அதற்குக் குறைந்த தொகைக்கும் 2 அணு வீதம் வசூலிக்கப்படும் (அதாவது 10 ரூபாய்கக்கு மணியார்டர் கமிஷன் 2 அணு; 20 ரூபாய்க்கு 4 அணு; 30 ரூபாய்க்கு 6 அணு இதுமாதிரி) வி. பி. களுக்கும் இதே கட்டணம் தான், இன்ஷ்யூர் கட்டணங்களும் திருத்தியமைக்கப்படும்.

* * * *

ஸர் எம். விஸவேஸவரய்யா பிரசங்கம்

புஞ திலக் மந்திரத்தில் நடந்த அகில இந்திய உற்பத்தியாளர் சங்கத்துக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் ஸர் எம். விஸ்வேஸ்வரய்யா கூறியதாவது:—

கடந்த காலத்தில் கைத்தொழில்பிவிருத்தியில் கவனம் செலுத்தாததால் நேரிட்டுள்ள நஷ்டத்தை தேசத்தின் இன்றைய நிலைமையிலிருந்து அறிகிறேம். இத்தேசத்தின் சக்தியும் க்ஷேமமும் ஓங்க வேண்டுமாஞல் தேசம் புது முயற்சியிலீடுபட வேண்டும். கைத்தொழில்களை ஆரம்பிக்க வேண்டும். இத்தகைய தேசீயப் பொருளாதார முயற்சியில் தேசத்திலுள்ள மேதாவிகளின் திறமையும் அநுபவமும் இத்தேசத்திற்கு வேண்டியிருக்கிறது. தலைவர்கள்முன் வந்தால் ஜனங்கள் அவர்களைப் பின்பற்ற முன் வருவார்களென்பதற்கு அறிகுறிகள் இருக்கின்றன.

கடந்த காலத்தில் இத்தேசம் தளவாட உற்பத்திக் கைத்தொழில்களில் கவனம் செலுத்தவில்லை. ஜனங்களின் ராணுவ சக்தியை ஓங்கச் செய்வதிலும் கருத்தைச் செலுத்தவில்லை. ஆகையால்தான் படையெடுப்பு அபாயம் தேசத்துக்கு நேர்ந்திருக்கிறது. யுத்தத்துக்கு முன்பு ஆயுத உற்பத்தி யந்திரங்கள் முதலிய இத்தேசத்தில் இறக்கப்பட்டுவந்தன. இதனுல் அந்த யந்திரங்களை உற்பத்தி செய்யும் வசதி இந்தியாவுக்கு இல்லாமல் போய்விட்டது.

கைத்தொழில் முயற்சிக்கு உதவக்கூடிய ஸ்தாபனமேதும் இத்தேசத்திலில்லையென்பது பற்றி வருந்துகிறேன். மாகாண சர்க்கார்கள் இவ்வேலையைச் செய்யலாம். ஆனுல் அவற்றுக்கு இதில் ஈடுபடுவதற்கு வேண்டிய சாதனங்களோ இஷ்டமோ இல்லை.

பொதுமக்கள் தற்போதுள்ள அபாயத்தை உணர்ந்து விழித்தெழ வேண்டும். சிறிய நடுத்தர பெரிய கைத்தொழில்களை ஆரம்பிக்க வேண்டும். ஒவ்வொரு பிராந்தியத்திலும் நல்ல கைத்தொழில்களை ஸ்தாபிக்க வேண்டும். கைத்தொழிலில் ஜனங்களுக்குப் பயிற்சியளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

யுத்தத்திற்குப் பிறகு தேசப் புனரமைப்பு வேலையில் ஈடுபட தேசத்தை இப்பொழுது முதற்கொண்டே தயார் செய்யவேண்டும்.

இப்பொழுதுள்ள முக்கியத்துவத்தை உணர்ந்து ஆங்காங்கு கைத்தொழில்களை ஆரம்பிக்க மாகாண சர்க்கார் ஏற்பாடு செய்ய வேண்டும். இக்காரியத்தைச் செய்ய பொது மக்கள் முன் வராவிட்டால் மாகாண சர்க்கார்களே கைத்தொழில்களை ஆரம்பிக்கலாம். இதற்காக மாகாண சர்க்கார் கடன் வாங்குவதும் நியாயமாகும்.

* * * *

மிஸ்டர் ரூஸ்வெல்ட் கையெழுத்திடுகிருர்

ஜப்பானுடன் அமெரிக்கா யுத்தம் தொடர்ந்து விட்டதாக வெளியிடப்பட்டு அறிக்கையில் அமெரிக்க ஜனுதிபதி மிஸ்டர் ரூஸ்வெல்ட் கையெழுத்து போடுகிருர்

ஐரோப்பியச் செய்திகள்

சீனுவுக்கு சமாதான நிபந்தனை

லண்டனிலுள்ள ராஜதந்திரிகளுக்கு கிடைத்துள்ள தகவல்களிலிருந்து சீனருக்கு ஜப்பான் பின்கண்ட சமாதான நிபந்தனைகளைத் தெரிவிக்குமென்று தெரிகிறது:—

(1) ஆசியாவில் ஜப்பான் ஏற்படுத்த முயலும் புதிய ஏற்பாட்டில் ஒத்துழைப்பதாக சியாங் கே ஷேக் ஒப்புக்கொண்டால் சியாங்கேஷேக்கின் சர்க்காரை ஜப்பான் அங்கீகரிக்கும்.

(2) சில துறைமுகங்கள் நீங்கலாக சீனுவில் ஜப்பானியத் துருப்புகள் பிடித்துக்கொண்ட மாகாணங்களை ஜப்பான் சீனுவுக்குத் திருப்பிக் கொடுக்கும்.

(3) எல்லாக் கைதிகளையும் ஜப்பான் விடுவிக்கும்.

(4) இரு தரப்பினரும் ஒருவருக்கொருவர் யுத்த நஷ்ட ஈடு கொடுத்துக்கொள்ளமாட்டார்கள்.

(5) கடற் சுங்க விஷயத்தில் ஒன்றுபட்டு வேலை செய்ய வேண்டும்.

(6) சீனு-பர்மா சம்மேளனம் ஏற்படுத்தப்படும், சீனு சில துறைமுகங்களை இழப்பதால் அதற்கு நஷ்டஈடு அளிப்பதற்காக ரீங்கூனில் சீனுவுக்கு சுயேச்சைப் படி நடக்க சுதந்தரமளிக்கப்படும்.

(7) இவற்றிற்கு பதிலாக சீனு நேச தேசங்களிலிருந்து பிரிய வேண்டும்.

(8) ரஷ்யாவுடன் ஜப்பான் போர் புரிய நேரிட்டால் சீனு நடு நிலைமை வகிக்க வேண்டும்.

(9) சீனு சபமேளனத்தை ஏற்க வேண்டும். (இது நாங்கிங் சர்க்காரின் கௌரவம் குறையாமல் பாதுகாப்பதற்கான ஏற்படாகும்.)

ஆனுல் இந்த சமாதான நிபந்தனைகளைப் பற்றி சீன விவாதிக்கக் கூடமாட்டாதென்று நம்பப்படுகிறது.

* * * *

மத்தியக் கிழக்கில் புதிய பிரிட்டிஷ் மந்திரி

காப்டன் ஆலிவர் லிட்டில்டனுக்குப் பதிலாக மிஸ்டர் ரிச்சர்ட் கேஸியை கெய்ரோவில் (பூர்ண அதிகாரமுள்ள) பிரிட்டிஷ் மந்திரியாக நியமித்திருப்பதாக மிஸ்டர் சர்ச்சில் இம்மாதம் 19-ந்தேதிகாமன்ஸ் சபையில் அறிவித்தார்.

(28-ம் பக்கம் பார்க்க)



ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் காங்கிரஸ் கமிட்டிக்கூட்டத்தில் கலந்து கொள்ள வருகிருர், மோட்டாரிலிருந்து அவர் உள்ளே இறங்கிப்போகும் காட்சி, வண்டி உள்ளே இருப்பவர் அவரது சகோதரர் பண்டித ஜவஹர்லால் நேரு.

ஸ்திரீகளும் அரசியலும் ★

இரண்டாம் பாகம்

ஸ்ரீமதி

★ ★ **விஜயலக்ஷ்மி பண்டிட்**

எழுதியது

காங்கிரஸ் கட்சி கருத்து

இதே சமயத்தில், 1935-ம் வருஷத்திய இந்தியா கவர்ன்மெண்ட் சட்டம் இந்தியாவில் பல பிரச்னைகளைக் கிளப்பிவிட்டது. 1929-ம் வருஷம் முதற்கொண்டே, இந்தியாவுக்குகந்த அரசியலைத் தயாரிப்பது இந்தியர் உரிமை என்ற அடிப்படையான கொள்கையை காங்கிரஸ் தழுவி வந்திருக்கிறது. இந்தக்காலத்தில் நாடு முழுதும் காங்கிரஸ் பிரசாரம் பரவிவிட்டது: இங்கிலாந்தில் இந்தியாவுக்காக ஒரு அரசியல் திட்டம் தயாராகிக்கொண்டிருந்தபோது, எல்லா ராஜீயக்கட்சிகளும் சங்கங்களும் சேர்ந்து, அதை ஒப்புக்கொள்ள முடியாது என்று தெரிவித்துவிட்டன: இந்த ஏகோபித்த அபிப்பிராயம் தான் இன்றும்! தேசத்திலேயே மிகப் பெரிதும் அதிக சக்தி வாய்ந்ததுமான ராஜீயக்கட்சி காங்கிரஸ் தான்: இந்தக் கட்சி இன்னும் ஒருபடி மேலே போயிற்று: புதிய அரசியலை நிராகரிக்க வேண்டும் என்று முடிவு செய்தது. சமூகம், ராஜீயம் ஆகிய விஷயங்களில் நியாயம் வழங்குவதையே அடிப்படையாகக்கொண்ட ஒரு புதிய திட்டம் தான் நாட்டிற்குத் தேவை என்றும், ஆகவே தயாரிக்கப்பட்டிருந்த புதிய அரசியல் திட்டம் இந்தியாவின் பல முக்கிய பிரச்னைகளைத் தீர்க்கமுடியாது என்றும் காங்கிரஸ் அபிப்பிராயப்பட்டது.

மக்கள் கோரிக்கை

இந்தியா கவர்ன்மெண்ட் சட்டத்திற்குப் பதிலாக, வயது வந்தவர்களுக்கு ஓட்டுரிமை அளித்து, அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபை தயாரிக்கும் அரசியல் திட்டத்தைத்தான் அமுலாக்கவேண்டும் என்று, இந்திய மக்கள் தங்களது பிரதிநிதி ஸ்தாபனமான காங்கிரஸ் மூலம் அபேக்ஷித்தனர். இந்த உத்தேசத்துடன் பொதுத் தேர்தலில் போட்டியிடவும் காங்கிரஸ் தீர்மானித்தது. தங்களது அறிக்கையில் தாங்கள் இந்தியா கவர்ன்மெண்ட் சட்டத்தை உதறித்தள்ளவே போட்டியிடுவதாகவும் அவர்கள் சந்தேகமறத் தெரிவித்துவிட்டனர்.

ஸ்திரீகள் விஷயமாக

ஸ்திரீகள் விஷயமாக காங்கிரஸ் கொண்ட கருத்தும் இதே அறிக்கையில் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது:—சட்ட பூர்வமாகவோ, அல்லது சமூகத்திலோ, அல்லது பொது வாழ்விலோ, ஸ்திரீகளுக் கெதிராகவிருக்கும் தடைகள் யாவற்றையும் நீக்குவதில் காங்கிரஸ் சிரத்தை கொண்டிருக்கிறது. ஸ்திரீ தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பளிப்பதும், பிரசவ காலத்தில் சௌகர்யங்களை அளிப்பதும் அதன் நோக்கமாகும். சுதந்திரப் போராட்டத்தில் இந்திய ஸ்திரீகள் ஏற்கெனவே பிரதான பங்கெடுத்துக்கொண்டிருக்கின்றனர்: காலக்ரமத்தில் சுதந்திர இந்தியாவின் பிரஜைகளாகவிருந்து இந்திய புருஷர்களுக்கு சரிசமமாக பொறுப்புகளையும் கடமைகளையும் அவர்கள் ஸ்வீகரிப்பார்கள் என அது எதிர்பார்க்கிறது.

தேர்தலும் ஸ்திரீகளும்

இந்த பொதுத் தேர்தலில் காங்கிரஸ் போட்டியிடப் போவதையறிந்ததும், அநேக ஸ்திரீகள் பல தொகுதிகளுக்கு அபேக்ஷகர்களாக முன் வந்தனர். காங்கிரஸில் ஸ்தானம் வகித்த

"காலநிலை வெகு விரைவில் மாறிவிட்டது. தற்சமயம் இந்திய ஸ்திரீகள் புருஷர்களுக்கு சமானமாய் இருக்கின்றனர். காங்கிரஸ் தனது வாக்குறுதியை நிறைவேற்றி யிருக்கிறது. காங்கிரஸ் காரியாலயங்களில் ஸ்திரீகள் ஸ்தானம் வஹிக்கின்றனர். பார்லிமெண்டரி காரியதரிசிகளாகவும், சட்டசபைகளின் உபதலைவிகளாகவும், சட்டசபை கக்ஷிக்கொறடாக்களாகவும் இருந்திருக்கின்றனர். நானும் மந்திரியாக நியமிக்கப்பட்டேன், அரசியல் தவிர இதர துறைகளிலும் ஸ்திரீகள் வெகு விரைவில் முன்னேற்றமடைந்து வருகின்றனர். பொருளாதார ஸ்திதி அவர்களை சம்பாதிக்க நிர்ப்பந்தப்படுத்தி யிருக்கிறது: அநேகம் ஸ்திரீகளும் யுவதிகளும் பற்பல உத்தியோகங்களை மேற்கொண்டு அவற்றைத் திறம்பட நிர்வகித்து வருகின்றனர். ஸ்திரீகள் உத்யோகம் ஏற்பதில் குறை காணுவது தற்போது மறைந்து வருகிறது. இவ்வாறு பதவியை ஏற்கும் பெண்மணிகள் தொகை மிகவும் சொற்பம்தான் எனினும், அவர்கள் வெகு விரைவில் முற்போக்கடைந்ததற்கு, முன் வந்து சேவைபுரிய அவர்கள் கொண்ட ஆவல்தான் காரணமாகும்" என்கிறார் ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் இவ்வாரம் வெளியாகும் இரண்டாம் பகுதியில். மற்றொரு விஷயம் இதில் கவனிக்க வேண்டி யிருக்கிறது. நம் பாரத நாட்டின் பண்டைய பெருமை ஸ்திரீயால்தான் பாழடைந்ததாகவும், அது இனி பிரகாசிப்பதும் அவர்களால்தான் முடியும் எனவும் அவர் கூறுகிறார்.

ஸ்திரீகளின் உத்சாகம், காங்கிரஸில் சேராத ஸ்திரீகளிடையேயும் இந்திய ஸ்திரீகள் சங்கத்திலும் பரவியது. ராஜீய சம்பந்தம் கொள்ளாத அகில இந்திய ஸ்திரீகள் மகாநாடு, படித்த ஸ்திரீகள் யாவரும் இத்தேர்தலில் போட்டியிட வேண்டுமென்று கோரியது: இவ்வாறு அபேக்ஷகர்களாக வரும் ஸ்திரீகளுக்கு எல்லா விதமான சகாயத்தையும் செய்ய வேண்டும் என்றும் காங்கிரஸ் தலைவரிடம் முறையிடப்பட்டது. ஆண் பெண் என்ற வித்யாசத்தால் ஏற்படும் தடைகளை நீக்கப் போவதாக காங்கிரஸ் அளித்த உறுதியே இதற்குக் காரணமாகும்.

"விசேஷ சிரத்தை"

பொதுத் தேர்தலில் காங்கிரசுக்குக் கிடைத்த வெற்றி ஆச்சர்யகரமானது: இது இப்போது மிகவும் பிரசித்தமான விஷயம்: ஆகவே இதைப் பற்றி மறுபடியும் பிரஸ்தாபிப்பது அநாவசியம். மாகாண சட்ட சபைகளில் தற்சமயம் 44 ஸ்திரீகள் ஸ்தானம் வஹிக்கின்றனர்: ஒவ்வொரு மாகாணத்திலும் பெரும்பான்மையினர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் தான். தேச க்ஷேமத்தைத் தழுவிய எல்லா விஷயங்களிலும் — முக்கியமாகத் தங்கள் இனத்தாருக்காகவும் - அவர்கள் விசேஷ சிரத்தை கொண்டு உழைக்கின்றனர்.

என் நம்பிக்கை

இந்தியாவில் நடந்த இந்தத் தேர்தலில் வெற்றி பெற உதவிய ஒரு புது உணர்ச்சி எத்தகையது என்பதை தேர்தலின் போது எனக்கேற்பட்ட ஒரு சிறு அனுபவத்திலிருந்து இங்கு எடுத்துக்காட்டுகிறேன். எனக்குப் பலத்த போட்டி இருந்தது: அப்போது கல்வி மந்திரியாயிருந்தவருடைய மனைவி என்னை எதிர்த்தார்: பழைய சட்ட சபையிலும் அவர் ஸ்தானம் வகித்தவர்: அப்போது அவர் ஒருவர் தான் ஸ்திரீ அங்கத்தினர்.



மகாநாட்டுத் திறப்பு விழா

சென்ற ஜனவரி மாதாரம்பத்தில் சென்னையில் நடந்த ஒரு ராஜீய மகாநாட்டை ஸ்ரீமதி விஜயக்ஷ்மி பண்டிட் திறந்து வைத்தார். மகாநாட்டில் பேசுவதற்கு சற்று முன் எடுத்த படம். ஸ்ரீ சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார், ஸ்ரீ எஸ். சத்யமூர்த்தி, ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட், ஸ்ரீமதி அம்மு ஸ்வாமிநாதன் முதலியவர்களை படத்தில் காணலாம்.

38000 ஸ்திரீ புருஷர் அடங்கிய கிராமத் தொகுதிக்குப் பிரதிநிதியாக நான் நின்றேன். கிராமப் புற வேலை பற்றிய அனுபவம் எனக்கிருந்ததாலும், கிராமவாசிகளின் மனப்பான்மை எவ்விதமானது என்பதை நான் உணர்ந்தவளாதலாலும், இந்தத் தொகுதியில் நான் என் கட்சிக்கு வெற்றி சம்பாதித்துக் கொடுக்க முடியும் என்ற தைர்யம் எனக்கு உண்டு. ஆனால் என் நண்பர்கள் மட்டும் நம்பிக்கை கொள்ளவில்லை. நான் அபேக்ஷாபத்திரத்தைத் தாக்கல் செய்யும் முன்னரே, நான் தோல்வியடைவது திண்ணம் என்று அவர்கள் தீர்மானித்து விட்டனர்.

அனுபவத்தால் அறிந்தது

இந்தியாவில் இதற்கு முன் இத்தகைய பொதுத் தேர்தல் நடைபெறாததால, வாக்காளர்களுக்கு அதிகம் சொல்லிக் கொடுக்க வேண்டியதாயிற்று. கிராமப்புறத்து மக்களுக்குப் படிப்பு அதிகம் இராதபோதிலும், நிலைமையின் தன்மையை வெகு விரைவில் உணர்ந்து, ஓட்டுரிமையின் சக்தியை, நகர வாசிகளை விட நன்கறிந்து கொண்டனர் என்பதும், குறுகிய படிப்பு காரணமாக பல சந்தர்ப்பங்களில் நகர வாசிகள் சுயமாகவே சிந்தித்து காரியத்தை நடத்த அசக்தர்களாக விருந்தனர் என்பதும், அப்போது பொது ஜனங்களிடையே பழகியவர்கள் அனுபவத்தால் அறிந்தவையாவன. இந்த விஷயத்திலும் ஸ்திரீகளே முன் நின்றனர். பல கட்சிக் கொள்கைகளையும் அவர்கள் வெகு சீக்கிரத்தில் க்ரஹித்துக் கொண்டனர்: நகரங்களில் வாழ்ந்து வந்த மத்ய வகுப்பு ஸ்திரீகள் மட்டும் சிரத்தை கொள்ளவில்லை: ஆயினும் மற்றவர்கள் தங்களது புருஷர்களையும் தங்கள் பக்கம் இழுத்து, தங்களது கிராமங்களில் பிரசாரம்



இரண்டு மாஜி மந்திரிகள்

சமீபத்தில் ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் சென்னைக்கு வந்திருந்த போது டாக்டர் பி. சுப்பராயனுடன் சம்பாஷிக்கும்போது எடுத்த படம்.

சிங்கப்பூரிலிருந்து வந்தவர் அநுபவம்:

சிங்கப்பூரில் நடந்த குண்டு வீச்சை நேரில் பார்த்த ஸ்ரீ என், ஏ. மலால் என்ற இந்திய பாரிஸ்டர் டில்லி ரேடியோ மூலம் பேசுகையில் தமது அநுபவங்களை வெளியிட்டார்.

ஜப்பானியர் உபயோகித்த குண்டுகளைப்பற்றி விவரிக்கையில் அவர், "சிங்கப்பூர் நகரிலும் சுற்றுப் பிரதேசங்களிலும் ஜப்பானியர் வீசிய குண்டுகள் அவ்வளவாகப் பெரியவை அல்ல; எதிரி எல்லாக் குண்டுகளையும் ஜப்பானிலிருந்தே கொண்டு வர வேண்டியிருந்தது. ஆகவே பெரிய பெரிய குண்டுகளை சாமானிய ஜனங்கள் மீது உபயோகித்து, அவற்றை விரயமாக்கமாட்டார்களென்பது ஆரம்பத்திலிருந்தே தெரிந்தது தான் ஜப்பானியர் இந்தியா மீது குண்டுகள் வீசினால் அவை சிறியனவாகவே இருக்கும்: இதுவே எனது உறுதி. இந்தக் குண்டுகள் அதிகச் சேதமுண்டாக்குவதில்லை" என்கிறார்.

சேதத்தைப்பற்றிப் பிரஸ்தாபிக்கையில் அவர் "மேற்படி குண்டுகள் நல்ல வலுவான இரண்டு மாடிக் கட்டிடத்தின் மீது விழுந்தால் மேலேயே தங்கி விடுகின்றனவே ஒழிய துளைத்துக்கொண்டு கீழே தரை வரையில் போவதில்லை. ஒரே மாடியுடன் கூடிய பல கட்டிடங்கள் பேரில் இக்குண்டுகள் விழுந்ததை நான் பார்த்திருக்கிறேன். இவ்வீடுகளெல்லாம் செங்கல்லால் கட்டப்பட்டவை; ஓட்டுக் கூரைதான் சாதாரணமாக தரை மட்டத்துக்கு 3 அல்லது 4 அடி உயரத்தில் தூக்காகக் கட்டப்பட்டிருக்கும் வீடுகளுக்குச் சொற்ப சேதம் ஏற்படுகிறது. ஆயினும் வீட்டுக்குள் பதுங்கியிருப்பவர்களுக்குத் துளிக் கூடக்காயம் கிடையாது" எனத் தெரிவித்தார்.

குண்டு வீச்சால் சிங்கப்பூரில் ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களை விளக்குகையில் அவர், "பல இடங்களில் டெலிபோன் கம்பிகள் துண்டிக்கப்பட்டன. வாழ்க்கைக்கு அத்யாவசியமான பண்டங்களை விற்கும் வியாபாரிகள் பலர் கடைகளை மூடி விட்டு கிராமங்களுக்குப் போய் விட்டனர். ஹோட்டல்காரர்களும் போய் விட்டனர்: இதனால் ஜனங்கள் ரொம்பவும் கஷ்டப்பட நேர்ந்தது. ஆகவே நெருக்கடி ஏற்படுகையில் சர்க்காரே பண்டங்களை விற்கும் பொறுப்பை ஏற்கவேண்டும்" எனக் குறிப்பிட்டிருக்கிறார்.

கடைசியாக ஸ்ரீமலால் இந்தியருக்கு சில யோசனைகளை விடுத்துள்ளார்: அவற்றைக் கவனிப்பது அவசியம்.

"குண்டுகள் வீசப்படுவதன் நோக்கம் பீதியைக் கிளப்புவதே; மனிதரைக் கொல்வதோ அன்றி அவர்களுடைய சொத்துக்களை அழிப்பதோ அல்ல. குண்டு வீச்சின் போது நீங்கள் வெளியிலிராமல் பதுங்குமிடங்களில் இருப்பீர்களானால் உங்களுக்கு ஆபத்தே இல்லை. விமானப் படையெடுப்பின்போது பிரமாத சத்தம் கிளம்பும்; தலை மீது பறக்கும் விமானங்கள், குண்டுகள், துப்பாக்கிகள் வெடித்தல இவற்றின் சத்தம் எல்லாம் சேர்ந்தால் காதை அடைக்கும்; ஆரம்பத்தில் சற்று பயமாகவே இருக்கும்; ஆனால் சீக்கிரத்தில் சகஜமாகிவிடும். ஆகவே அபாயச் சங்கு ஊதியவுடனே தக்க இடத்தில் பதுங்கிக்கொள்ளுங்கள் என்பதே என்னுடைய யோசனை. அப்படிச் செய்தால் உங்களுக்கு ஆபத்தில்லை."

பண்ணியும் உதவி புரிந்தனர். பொதுக் கூட்டங்கள் மூலமாகவோ. அல்லது துண்டுப் பிரசுரங்கள் வாயிலாகவோ, பொது ஜனங்களிடை கக்ஷிக்கு ஆதரவு தேடி வந்தோம். ஏதோ சில சந்தர்ப்பங்களில் தான் சில தனிப்பட்டவர்களை நாங்கள் சந்தித்துப் பேசினோம்.

நான் நேரில் கேட்டது

நாட்டில் ஜ்வர வேகம் போன்ற நிலைமை ஏற்பட்டது: ஜனங்கள் எங்கு கூடினாலும், பொதுத் தேர்தலைப்பற்றிய பேச்சு தான்! என்னுடைய தொகுதியில் ஒரு நாள் நான் பிரயாணம் பண்ணிக்கொண்டிருந்தேன். ஒரு இந்திய மாணவரும், சுற்றுப் பிரயாணத்திற்காக வந்த ஒரு அமெரிக்கரும் இருந்த ரயில் வண்டியில் நானும் ஏறிக் கொண்டேன்: அவ்விருவரும், அப்போது நடக்க விருந்த தேர்தலைப்பற்றியே பேசிக்கொண்டிருந்தனர்: அந்தத் தொகுதியில் எனக்கு வெற்றி கிடைக்குமா கிடைக்காதா என்பதைப்பற்றி அவ்விருவரும் வாதித்துக்கொண்டிருந்தனர். அவர்கள் இருவரும் என்னை நேரில் பார்த்தறியார்: என்னை அவர்கள் அடையாளம் கண்டு பிடித்துக் கொள்ளவுமில்லை, அந்த மாணவர் என்னை மிகவும் புகழ்ந்தார். அவர் சிறிது காலம் பேசிய பின், என்னை இவ்வளவு பாராட்டிப் பேசுவதற்கு நான் என்ன சாதித்து விட்டேன் என்று அந்த அமெரிக்கப் பிரயாணி கேட்டார். மாணவருக்குக் கோபம் பொங்கி யெழுந்தது. "சாதித்ததா?-அவர் ஒன்றும் சாதிக்கத் தேவையில்லை. அவர் எங்கள் தாயார், எங்கள் சகோதரி. இவர்களுக்கு சமம். ஆகவே அவர் கிட்டாயம் வெற்றியடைவார்" என்று அவர் ரோஷத்துடன் கூச்சல் போட்டார். பாவம், அந்த அமெரிக்கருக்கு என்ன பதில் சொல்வதென்று புரியவில்லை: இதற்கப்புறமும் நான் எதற்காக இதில் வெற்றி பெற வேண்டும் என்ற காரணத்தை அவர் அறிந்து கொள்ளவில்லை என்றே எண்ணுகிறேன. மக்களில் பெரும் பாலர் காங்கிரசிடமும் அதன் பிரதிநிதிகளிடமும் காட்டிய அன்பு இக்கதை மூலம் நன்கு வெளியாகும். ஆச்சரியகரமானதும் பிரமிக்கத் தக்கதுமான இத்த வெற்றி காங்கிரசுக்குக் கிடைத்ததில் விந்தை ஒன்றுமில்லையல்லவா?

நிலைமையின் மாறுதல்

காலநிலை வெகு விரைவில் மாறிவிட்டது. தற்சமயம் இந்திய ஸ்திரீகள் புருஷர்களுக்கு சமானமாய் இருக்கின்றனர். காங்கிரஸ் தனது வாக்குறுதியை நிறைவேற்றியிருக்கிறது. காங்கிரஸ் காரியாலயங்களில் ஸ்திரீகள் ஸ்தானம் வஹிக்கின்றனர்: பார்லிமெண்டரி காரியதரிசிகளாகவும், சட்டசபைகளின் உபதலைவிகளாகவும், சட்டசபை கக்ஷிக் கொறடாக்களாகவும், இருந்திருக்கின்றனர்: நானும் மந்திரியாக நியமிக்கப்பட்டேன். அரசியல் தவிர இதர துறைகளிலும் ஸ்திரீகள் வெகு விரைவில் முன்னேற்றமடைந்து வருகின்றனர்: பொருளாதார ஸ்திதி அவர்களை சம்பாதிக்க நிர்ப்பந்தப் படுத்தியிருக்கிறது: அநேகம் ஸ்திரீகளும், சிறுமிகளும் பற்பல உத்யோகங்களை மேற் கொண்டு அவற்றைத் திறம்பட நிர்வகித்து வருகின்றனர். ஸ்திரீகள் உத்யோகம் ஏற்பதில் குறை காணுவது தற்போது மறைந்து வருகிறது: இவ்வாறு பதவியை நாடும் பெண்மணிகள் தொகை மிகவும் சொற்பம் தான் எனினும், அவர்கள் வெகு விரைவில் முற்போக்கடைந்ததற்கு, முன் வந்து சேவை புரிய அவர்கள் கொண்ட ஆவல் தான் காரணமாகும்.

வருங்காலத்தில்

தீர்த்து வைக்க வேண்டிய் பிரச்னைகள் இன்னும் பல இருக்கின்றன. இந்தியா ஒரு விஸ்தாரமான தேசம். இந்தியாவில் இருக்கும் இடையூறுகளையெல்லாம் அகற்றிவைப்பது அவ்வளவு சுலபமல்ல. நாட்டின் ஸ்திரீகள் விழித்துக்கொண்டிருப்பது நன்னம்பிக்கையளிக்கிறது. பண்டைய நாட்களில் இந்தியாவின் பெருமை பாழடைந்தது ஸ்திரீகளால் தான் என்பதில் சந்தேகமில்லை. சுதந்திர இந்தியாவைக் கனவு கண்டு, அந்தக் கனவு உண்மையாக நிறைவேறுவதற்கு புருஷர்களுடன் தோளுக்கு தோள் நின்று சேவை புரியும் சிறு பெண்களும், கிழவிகளும், நடுத்தர வயதான ஸ்திரீகளும், வருங்காலத்தில் ஏற்படக் கூடிய பெருமையைப் பகிர்ந்துகொள்வார்கள் என்பதும் நிச்சயம்,



அடுத்தவார இதழில் வாழ்க்கையை நாம் எப்படி நடத்த வேண்டும். எத்தகைய லக்ஷியங்களைக் கொண்டு வாழ வேண்டும். எப்படி வாழ்ந்தால் நம் வாழ்க்கை பரிமளிப்பதுடன் நமக்கும் சந்தோஷத்தையும் சுகத்தையும் தரும் என்பதைப் பற்றி ஸ்ரீமதி பண்டிட் எழுதியிருக்கும் கட்டுரைகள் பிரசுரமாகும்.

தராசு

ஸ்ரீ ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன்

★

செல்வத்திலே பிறக்கும் பிள்ளைகள் பெரும்பாலும் செல்லப் பிள்ளைகள்: கஷ்டம் அறியாதவர்கள்: குணம் படியாதவர்கள்; கோணல் மிகுந்தவர்கள். சிரமப்பட்டு படிப்பதில்லை: சிறப்பாகத் தேறுவதில்லை: உத்தியோகம் பெற செல்வாககு உதவவேண்டும். இது கணகூடு! ஆனுல் விதியெதற்கும் விலக்குண்டு. அதற்கு திவான் ஸர் ஸி. பி. ராமஸ்வாமி அய்யரை உதாரணமாகக் குறிப்பிடலாம். பெரிய பரம்பரையில் பிறந்தார் அவர். தகப்பனுர் பிரபல வக்கீல். தகப்பனுக்கு ஒரே பிள்ளை; பிள்ளையும் பெருமைப் படககூடிய பிள்ளை. மன்மத வடிவம்; அகன்ற நெற்றி. அடர்ந்த புருவம்; உருண்ட கண்கள்; மூக்கும் முழியும் வசீகரம் வாய்ந்தவை. செல்லப் பிள்ளைதான்; ஆனுல் சோடை போகவில்லை. நல்ல படிப்பாளி; பரீக்ஷை படிப்போடு நிற்கவில்லை; பரந்த படிப்பு; பல பாஷைகளில் பரிச்சயம்: படிப்பிலே ஒரே ஒரு ஊனம். விசாலத்திற்கேற்ப வேர் விடவில்லை. வினயம வளரவில்லை. வியாபகம் பெறவே உதவிற்று. லௌகீக ஞானமே முதிர்ந்தது. பேசவும் பழகவும் கற்றுக்கொண்டார். நன்ருகப் பேசுவார். சுவை நிறைந்த பேச்சு. சமயோசிதமாகப் பேசுவதில் சமர்த்தர். பேச்சிலே விஷயமிருக்கும்; விளக்கம் காணலாம்; கற்பனை கதிர் விடும்; கேட்க ரஸிக்கும். பேசும்போது நாதம் கட்டும்; பரஸ்பர பந்தம் பிறக்கும். எது எங்கே ஏறும் என்பதை நன்ருய் அறிவார். சந்தேகமோ சங்கோசமோ கிடையாது. தன் நம்பிக்கை கொண்டவர். பிறர் நம்பிக்கைகொள்ள அதுவே அஸ்திவாரம். இயற்கையில் முகவெட்டும் மனோ வசியமும் மிகுந்தவர். வாழ்விலே அதன் பூரா பயனையும பெற வழி தேடிக்கொண்டார். நாடகமேடையிலே ராஜ வேஷம் தரித்தவர் தான் ராஜா என்று நினைத்தால்தான் வேஷம் பலிக்கும். பேச்சும் நடிப்பும் சுபாவமாக இருக்கும். உலகமே அரங்கம்; வாழ்வே நாடகம்; தானே ராஜா என்ற நினைவு அவருக்கு. பிரபஞ்ச நாடக மேடையில் ஆடியாடி வேஷம் வேறு, உரு வேறு என்பதை அவரே மறந்து விட்டார். லோகமே மாயை என்று வேதாந்திகள் சித்தாந்தம் செய்தனர். இகப்பற்றுடன் நிலைறுவிட்டார் ஸி. பி: பரத்தில் கருத்து செல்லும் பார்வம் எட்டவில்லை.

வாழ்விலே ஒரோர் சந்தர்ப்பம் வாய்ப்பதுண்டு. பயன் படுத்திக்கொள்பவருககு பெயரும் பெருமையுமுண்டு. எல்லாருக்கும வாய்ப்பதில்லை. வாய்த்தவர் எல்லாரும் பயன்படுத்திக் கொளவதுமில்லை. ஸி. பி.க்கு அப்படி ஒரு சந்தர்ப்பம் வாய்த்தது. பூராவும பயன்படுத்திக் கொண்டார். சென்னையில் வக்கீல் தொழில் நடத்தி வந்தார். வருவாய்க்கு உடனே வழி காண நிர்ப்பந்தமில்லை. பொருத்துப் பெயர் எடுக்க பிரயாசைப்பட்டார். தொழில் முறையை நன்ருகக் கற்றுக்கொண்டார். மரியாதை காட்டி மதிப்பு பெற்ருர். கட்டுப்படிக்காமல் கேஸ் நடத்தமாட்டார். வெளியே வளைய வந்தும் வேலைக்கு வேலையுண்டு. தளுக்காகப் பேசுவார்: எடுப்பாக இருக்கும். வாதிக்கும் முறையும் வாதத்தின் மிதமும வசியபபடுத்தும். கக்ஷியாடுவது கடமையெனவே கருதினுர். வெற்றியில் விரைப்புக் காணுது. தோல்வியில் வாட்டமுறமாட்டார். அவர் நடத்திய கேஸ் ஒன்று பெரிய பரபரப்பை உண்டாக்கிற்று. விவகாரத்தில் விசேஷமில்லை. விசேஷம் எதிராளிக்கிருநத செல்வாக்கு: பிரம்ம ஞான சங்கத்தின் தலைவி. சங்கத்திற்கு நாடெங்கும் கிளைகள்; உலகெங்கும் அங்கத்தினர்கள். நடத்திய கேஸை ஸி. பி. ஜயித்தது விசேஷமல்ல. மேல் கோர்ட்டில் தீர்ப்பு நிலைக்கவில்லை. எதிராளியை ஜயித்ததுதான் விசேஷம். அன்று முதல் அவருக்கும் பெஸண்டம்மையாருக்கும் பிறந்த தொடர்பு ஆயுளுள்ளளவும் மாறவில்லை. அன்று வரையில் ராஜீய விவகாரங்களில் தலையிடாத டாக்டர் பெஸண்டு இந்திய விடுதலைப் போரில் ஈடுபட்டார். புதிய துறையில் ஸி. பி. யை துணையாக வரித்தார். பிறந்தது யோகம்



ஸர் ஸி. பி. ராமஸ்வாமி அய்யர்.

அதிலிருந்து. ராஜீய சேவை புதிய பக்குவமும பரிமாணமும் பெற்றது. கிளர்ச்சிக்கு கூர் கட்ட 'நவ இந்தியா' என்ற பத்திரிகை வெளிவந்தது. விளம்பர உலகம் இது. சேவை புரிந்தால் போதாது. தமுக்குப் போடவேண்டும். ஸி பி யின் சேவையையும் சாமர்த்தியத்தையும் உலகமறியச் செய்தார் டாக்டர் பெஸண்ட். சுயாட்சி சங்கத்தை ஸ்தாபித்தார் அவர்: ஸி. பி. அதற்கு கார்யதரிசி. காங்கிரஸ் அக்கிராசன பதவி கிடைத்தது அம்மையாருக்கு: ஸி. பி. காங்கிரஸ் காரியதரிசியானுர். 'மாண்ட்போர்டு அரசியல் திட்டம் கர்ப்பத்திலிருந்தது. சாக்ஷியம் சொல்ல சீமைக்குச் சென்ருர் ஸி பி: நொடிப்பொழுதில் பெரிய தலைவராகி விட்டார் பார்ப்பவருக்கும் கேட்பவருக்கும் பிரமை தட்டிற்று. புதிய சகாப்தத்தில் பதவியும் பட்டமும் தொடர ஆரம்பித்தன.

அரசியல் திட்டம அமுலுக்கு வந்தது. காங்கிரஸ் விலகி நின்றது. காங்கிரஸிலிருந்து அவர் விலகிக் கொண்டார். பிராமணரல்லாதார் இயக்கம் அன்று உச்சஸ்தாயியிலிருந்தது சட்டசபையில் பிராமணர் நுழைவதென்ருல் பகீரதப் பிரயத்தனம். தைர்யமாக சட்டசபைக்கு நின்ருர் ஸி. பி: பயமுறுத்திப் பார்த்தனர்: இல்லாததையும பொல்லாததையும் சொல்லத் துணிநதனர். ஸி. பி. அசையவில்லை. துப்பாக்கியும் கையுமாக பிரசங்கம் செய்து வந்தார். வெற்றி கிடைத்தது. தைர்யலக்ஷ்மி ஜயலக்ஷ்மியாக மாறி பாக்கிய லக்ஷ்மியாகவும் தோன்றினுள். ஸி. பி. அட்வொகேட் ஜெனரலாக நியமிக்கப்பட்டார். அடுத்தபடியாக நிர்வாக சபை அங்கததினராக நியமனம் பெற்ருர். அவர் உத்தியோக காலத்தில் தான் பைகாரா திட்டமும், மேட்டூர் தேக்கமும் உருப்பெற்றன. இரண்டையும் அரங்கேற்றிய பெருமை அவருக்குரித்தாகும். இரண்டும் உள்ளளவு அவருக்கு அழியாபபுகழுண்டு. உத்தியோகம் காலவரையுள்ளது: துறக்கும் காலம் வந்ததும் தொழிலுக்குத் திரும்ப நேர்ந்தது. தொழிலில் செழிப்பு கண்டாலும் கவர்ச்சியளிக்க வில்லை. புத்தி பிரவிருத்தி பெரும்போக்கில் படிந்துவிட்டது. ராஜீய சேவைக்கோ துறை காணவில்லை. ஸர்வம் காந்தி மயம் ஜகத். சேவைக்கு தியாகமே உரைகல்லாகிவிட்டது. மிதவாதி

(பின் பக்கம் பார்க்க)

களிடையே தீவிரவாதியாகவும், தீவிரவாதிகளிடையே மிதவாதியாகவும் அவர் இருந்தார். இடைக்கட்சிக்கு இடமில்லாது போய்விட்டது. டாக்டர் பெஸண்டுக்கும் செல்வாக்கு அடங்கி விட்டது. என்ன செய்வார்? 'புத்திக் காலாநுசாரம்' என்று சொல்வார்கள். கால பலம் குறையவில்லை. புதிய துறை யொன்று புலப்பட்டது. சமஸ்தான பிரச்னைகளில் கவனத்தைத் திருப்பினுர். சந்தர்ப்பம் மறு முறை வாய்த்தது. வில்லிங்டன் பிரபு ராஜப்பிரதிநிதியாக பதவி ஏற்ருர். பூர்வாஸ்ரமத்தில் இருவருக்கும் நெருங்கிய தொடர்புண்டு. திருவாங்கூர் சமஸ்தானத்திற்கு உதவ சமயம் வாய்த்தது. சமஸ்தான ஆலோசகராக காலை ஊன்றிக் கொண்டார். இரு முறை இடையிடையே மத்திய நிர்வாக சபை அங்கத்தினராக பொருப்பேற்ருர். முடிவில் சமஸ்தான திவானுக பதவி ஏற்ருர்.

திருவாங்கூர் பெரிய சமஸ்தானங்களில் ஒன்று. 7625 சதுர மைல் விஸ்தீர்ணம்; 50 லக்ஷம் ஜனங்கள் அடங்கியது. இரண்டரை கோடி ரூபாய் வருவாயுள்ளது. ஆணும் பெண்ணும் படிப்பில் ஆர்வ முள்ளவர்கள். சிரமப்பட்டு சம்பாதிக்கவும், சிக்கனமாக வாழவும் தேறியவர்கள். இந்தப் பிரதேசத்தை வளப்படுத்தவும், இந்த ஜனங்களை கைதூக்கிவிடவும் முனைந்தார் ஸர் ஸி. பி: சமஸ்தானங்களில் உருவான வேலை செய்ய சௌகர்யங்கள் இரண்டு தேவை. அரண்மனையின் ஆதரவு முதலாவது; இரண்டாவது பிரிட்டிஷ் கவர்ன்மெண்டிடம் செல்வாக்கு. இரண்டும் ஸி. பி.க்கு இருந்தது. சொந்த அளவில விளம்பர மகிமையை அறிந்தவர் ஊர் அளவில் மறக்கவில்லை; அஸோஸியேடட் பிரஸ் என்ற செய்தி ஸ்தாபனத்தின் கிளையொன்று ஏற்படுத்தப்பட்டது. பத்திரிகைகளில சமஸ்தானத்தைப் பற்றிய செய்திகள் அடிக்கடி வெளிவர ஆரம்பித்தன. செய்திகள் வந்தால போதுமா? பிரியப்பட்டு படிக்க வேண்டுமே! படித்தவர் செய்தியை பரப்பவேண்டுமே! அதற்கும் வழி கண்டார். ஹரிஜனங்களை ஆலயங்களில் விட மகாராஜாவுக்கு யோசனை சொன்னுர். பல காரணங்களை முன்னிட்டு யோசனையும் பக்குவமாகப் பட்டது. கோவில்கள் திறக்கப்பட்டன. பிரத்தியக்ஷ மாகாத்மியம் ஒன்று தெளிவாகக் காணக்கிடந்தது. மூலையில் மறைந்து கிடந்த சமஸ்தானம், யாரும் அறிய, பலர் புகழ, கண்ணைக் கவர்ந்தது. நாட்டிலே வலுவான கட்சி காங்கிரஸ். நாடெங்கும கூட்டம் கூட்டி கொண்டாடிற்று. எங்கும் பொங்கிய மதிப்பை பயன்படுத்திக் கொள்ள முயன்ருர் ஸி. பி: தொழில் செழிக்கவும், வியாபாரம் வலுக்கவும் வழி தேடினுர். தொழிலுக்கு விசைதீட்ட பள்ளிவாசல் மின்சாரத் திட்டம் கைக்கொள்ளப்பட்டது. தனி சர்வகலாசாலை யொன்றும் நிறுவப்பட்டது. கலை வளர்ச்சிக்கு அரண்மனை ஆதரவும் தேடி வைத்தார். நகரை அழகுபடுத்தி, சுற்று வட்டாரங்களுக்குச் செல்லும் பாதைகளை சீர்படுத்தி, பார்ப்பவர் பிரமிக்கச் செய்தார். சமஸ்தானத்தில் அவர் செய்து வரும் சேவையை கோர்த்து கூறவோ குணம் காணவோ சமயம் இதல்ல. காலம் செல்ல வேண்டும்; இடை வாதங்கள் மறைய வேண்டும். இன்று சொல்லக் கூடியது ஒன்றுதான். சமஸ்தானத்திற்கு யோக முண்டானுல் அவர் அங்கே நிலைக்க வேண்டும். தீர்க்க தர்சனம் உள்ளவர்; தைர்யமும் திடமும் படைத்தவர்; வயதேறியும் வாட்டமுறவில்லை; செயலாளர்; சொல்லளவு செயலிலலா விட்டாலும் சொல்லிக் கொள்ளக் கூடிய அளவு உண்டு. தற்புகழ்ச்சியிலும் தவறில்லை; ஆதாரம் இருந்தால் போதும்; ஆதாரம் உண்டு.

ஒரு மாதத்திற்கு மட்டும் சரஸ விலை

100 கார்டுகள் கொண்ட ஸெட் 1-க்கு விலை ரு. 5-12-0

கார்டு படங்கள்

கணவன் மனைவியின் அந்தரங்கமான நிலைகளைக் காட்டும் அழகான தோற்றங்களுடைய அபூர்வமான ஸெட், தபால் சார்ஜ் உள்பட 100 கார்டுகளடங்கிய ஸெட் 1க்கு ரூ 5/12/- பொறுக்கியெடுத்த 25 கார்டுகள் கொண்ட ஸெட் 1-க்கு தபால் சார்ஜ் உள்பட ரூ. 2/10/- ஒரு சமயத்தில் 25 கார்டுகளுக்கு குறைவாக அனுப்புவதில்லை.

AMERICAN CORPORATION (S.M.W)

(B P S) DINA NAGAR (PUNJAB)

இங்கே கவனியுங்கள்

உங்கள் காலத்தையும், பலத்தையும், பணத்தையும் மற்றவர்களுடன் கலந்து பேசி ஏன் வீண் செய்கிறீர்கள். எங்களுடைய மாயக் கண்ணுடியின் உதவியால் நீங்களே எஜமானுகிவிடுவீர்கள். இந்த மாயக் கண்ணுடி கைலாசத்திலுள்ள உயர்ந்த மூலிகையைக் கொண்டு தயார் செய்யப்பட்டது. இதன் சக்தியைக் கண்டால் நீங்கள் ஆச்சரியமடைவீர்கள். நீங்கள் ஆணுயிருந்தாலும் சரி, பெண்ணுயிருந்தாலும் சரி, எத்தனை வயதானவர்களானுலும் சரி, எந்த ஜாதியாயிருந்தாலும் சரி, ஜோதிஷர் உதவியை நாடாமலே நடந்தவைகளையும், நடக்கப்போவதையும் கண்டறியலாம். இதைக் கொண்டு இறந்துபோன பந்துக்களுடனும், சிநேகிதர்களுடனும் கூடப்பேசலாம். உங்களுக்குச் சிநேகமுள்ளவர்கள் எவ்வளவு தூரத்திலிருந்தாலும் பார்க்க முடியும். இதைவைத்துக்கொண்டால் யுத்தத்தில்வெற்றி, வியாபாரம் கலியாணம் முதலியவற்றில் வெற்றியடையலாம். புதையல் இருக்குமிடத்தையும் கெட்டுப்போன சாமான்களும், அதிர்ஷ்டசம்பர்களும் கண்டுபிடிக்கலாம். இது உலகத்திற்கு ஒரு உண்மையான சிநேகிதன். விலை ரூ. 2/8. ஸ்பெஷல் ரூ. 4/8. போஸ்டேஜ் தனி. இன்றேஒன்றுக்குஎழுதுங்கள். பர்மா, சிலோன் வாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும். பலனில்லையேல் பணம் வாபீஸ்.

SHRI MAHAMUNI JYOTISH ASHRAM, (S. M. W) DINA NAGAR. PUNJAB.

(B P S)

"பழனி ஹவுஸ்"

புது மாதிரி பனாரஸ் பட்டு சேலைகள், பெங்களூர் பட்டு சேலைகள், பல அழகிய கரைகளில் வெண்பட்டுகள், துப்பட்டாக்கள் — வேஷ்டிகள்

ரு. பழனியாண்டி பிள்ளை & சன்ஸ்,

"பழனி ஹவுஸ்" (சௌகார்பேட்டை) பி. டி., மதருஸ்.

வைத்திய ரத்னம் பண்டித

எம. துரைஸ்வாமி ஐயங்கார், ஏ. கே. ஏ. ஸி.

ஆயுர்வேத பூஷணம், ஆயுர்வேதாசார்ய அவர்களுடைய மேற்பார்வையில் தயார் செய்யப்படும் சித்தௌஷதங்கள்.

ஸித்தயோக ரஸம்

ஸ்தூல தேஹம், பிளட் பிரெஷர் (High Blood-Pressure) என்னும் வாதரோகம், நீரிழிவு ஆகிய ரோகங்களுக்கு 100 மாத்திரை ரூ. 11. 50 மாத்திரை ரூ. 6.

மாதுலுங்க ரஸாயனம்

பசியின்மை, அரோசகம், பித்தக் கோளாறுகள், கர்ப்பிணிகளின் பித்த விகாரங்கள், குமட்டல் முதலியவைத் தீர்ப்பதில இணையற்றது. குழந்தைகளும்பசிதீபனத்திற்குக் குளிர்ச்சிக்கும் அருந்தக்கூடியது. தேன்போன்றது. 1 பவுண்ட் ரூ. 5. 6 அவுன்ஸ் ரூ. 2.

ஹரீதக்யாதி லேஹ்யம்

எவ்வித மலபந்தத்தையும் நிவ்ருத்திக்கும் ஸங்கடமுமில்லாமல் நாள் தோறும் மலத்தை வெளிப்படுத்தும். இரத்தமூலம், வயிற்றில் உப்பஸம் இவற்றிலும் மிக்க உபயோகமானது. குழந்தைகர்ப்பிணிஅனைவரும்உபயோகிக்கலாம். 1 பவுண்டு புட்டி ரூ. 3.

லோஹாஸவம்

இரத்த சுத்திக்கும் இரத்த விருத்திக்கும் இன்றியமையாத அயத்திராவகம். பாண்டு ரோகம், பலயீனம், சொறி, சிரங்கு முதலிய சர்மரோகங்கள் இவற்ருல்வருந்துபவர் அவச்யம் உபயோகிக்கக்கூடியது. 1 பவுண்டு ரூ. 4.

இராஜாம்ருகாங்கம்

க்ஷயரோகத்தைத் தீர்ப்பதற்குச் சாஸ்திரத்திலும் அனுபவத்திலும் மிகப் பெயர்பெற்றது. பல க்ஷயரோகிகள் வேறு சிகித்ஸைகளால் குணமடையாமல் இதனுல் சுகமடைந்திருக்கிருர்கள். 100-மாத்திரை ரூ. 10. 50 மாத்திரை ரூ. 5—8—0.

ஸித்த மகரத்வஜம்

தாது புஷ்டியை விருத்தி செய்ய ஆண், பெண் இருபாலரும் உபயோகிக்கக் கூடிய சாஸ்திரப் பிரஸித்தமான சித்தௌஷதம், தங்க பஸ்மம் கலந்த ஆர்யன் பார்மஸியாரின் ஸித்த மகரத்வஜமே மிகவும் நம்பிக்கையுள்ளது. 1 தோலா செந்தூரம் ரூ. 25. மாத்திரையுருவாக 100மாத்திரை ரூ. 15. 50 மாத்திரை ரூ. 8. 25மாத்திரை ரூ. 4-8-0

சர்மரோகாந்தக லேபம்

எச்சில் தழும்பு, மேகப்படைகள், சொறி, சிரங்கு முதலிய தோலைப்பற்றிய கடுமையான வியாதிகளை சீக்கிரத்தில் நிச்சயமாகவும், திருப்திகாமாகவும் தீர்க்கக்கூடியது நூற்றுக் கணக்கானபேர்சுகமடைந்திருக்கிருர்கள். பெரிய டப்பி ரூ. 1—4—0 சிறிய டப்பி அணு 12.

குறிப்பு:—எதற்கும் தபால் சார்ஜ் பாக்கிங் சார்ஜ் முதலியது வேறு.

வேறு சாஸ்த்ரீய ஔஷதங்களும் கிடைக்கும்.
(வியாபாரிகளுக்கு விசேஷ கமிஷன்)

"ஆர்யன் பார்மஸி — "ஆர்ய கிருஹம்"

11 ஆதியப்ப முதலித் தெரு :: வேப்பேரி போஸ்டு :: மதராஸ்.

ஜஹனரா

“ஸஸாங்கமணி” எழுதியது

நான்காம் காட்சி

நந்தவனத்தில் மாலைப்பொழுது. ரஸியாவும் ரஹ்மட்டும்,

ரஸியா:—(பிரவேசித்து) ஏன் என் மனம் இவ்வாறு பதறுகிறது? என் கால்கள் அவரைக் காண இழுத்துச் செல்கின்றன. அவர் இவ்வரண்மனையிலுள்ளவர்களுள் எவ்வளவு பெருமையுடனும் மதிப்புடனுமிருக்கிறார். ஆஹா! எங்கள் இருவரையும் கூட்டி வைத்தது அத்தெய்வத்தின் செயல்தான் போலும்! அதோ! அவரும் வருகிறார்.

ரஹ்மட்:—(பிரவேசித்து) நான் நினைத்ததுபோல் ஆயிற்று. என்ன ரஸியா! என்னிடத்தில் பேசக்கூடாதா?

ரஸியா:—உம்மிடத்தில் பேசி என்ன பயன்? மஹராஜ் சத்ரபதி சிறையிலிருக்க அவரை வெளியேற்ற ஓர் மார்க்கமும் புரியவில்லையா?

ரஹ்மட்:—ரஸியா, நான் என்ன செய்வேன். எனக்கு ஓர் மார்க்கமும் புலப்படவில்லையே. அப்படி நான் மார்க்கம் கண்டு பிடித்தாலும் அவர் வெளியேறமாட்டாரே.

ரஸியா:— ஆம், நீர் மாத்திரம் சிறையைக் காத்துக் கொண்டிரும். எல்லாம் சரியாகி விடும்?

ரஹ்மட்:—ரஸியா, இதோ பார்! நீ என்னை என்ன செய்யச் சொன்னாலும் செய்யத் தயார். ஆனால் உன்னைப் பிரிந்திருக்க என் மனம் சகிக்கவில்லை.

ரஸியா:—ஆமாம் வேறொன்றிலும் இல்லாவிட்டாலும், இதில் ஒன்றும் குறைவு இல்லை.

ரஹ்மட்:—கோபிக்காதே ரஸியா, நீயும் ஓர் ஹிந்து, நானும் ஓர் ஹிந்து! அதனால்...

ரஸியா:— அதனால் நான் உம்மை மணந்து கொள்ளவேண்டும். இவ்வளவு தானே.

ரஹ்மட்:—ரஸியா! ப்ரியே!! என்னை ஏளனம் செல்தாலும் செய், உன்னைவிட்டு அகல-அல்லது உன்னை நினையாமலிருக்க - என்னால் முடியாது. நீ சம்மதிக்கா விட்டால் உன்னை நினைந்து வாடி வதங்கி பிறகு படைத்தவனிடம் சேரவேண்டியதே.

ரஸியா:—ஏது, ஏது, பெரிய கவிபோல் பேசுகிறீரே. ஆனால் ஓர் சமாசாரமிருக்கிறது. அதற்கு நீர் சம்மதிக்க வேண்டும்.

ரஹ்மட்:—ஏது வேண்டுமானாலும் சொல், என் தலையை வேண்டுமானாலும் தரத் தயார்.

ரஸியா:—அடடா அப்படி ஒன்றும் செய்து விடாதீர்கள். நாம் இந்நகரை விட்டு வெளியேறி சத்ரபதிக்குத் தொண்டு செய்யவேண்டும்.

ரஹ்மட்:—பேஷ். கரும்பு தின்னக் கூலியா? என்மனதிலிருப்பதை நீ தெரிவித்தாய். இதிலிருந்து நம்மிருவருடைய பொருத்தமும் தெரியவில்லையா? என்ன ரஸியா, எனக்கு ஓர் நல்ல வார்த்தையும் கிடையாதா? என்ன சொல்லமாட்டாயா?

ரஸியா:—சொல்வதற்கு என்ன இருக்கிறது, எல்லாம் நீரே சொல்லிவிட்டீரே.

ரஹ்மட்:—ரஸியா! ஒன்று சொல்ல மீறுந்துவிட்டேனே! சத்ரபதி ஏன் பூஜை செய்கிறார். அவருக்கு ஏன் இவ்வாறு 40 50 கூடைகள் போகவேண்டும். அவர்தம் மனதிற்குள் ஏதோ ஒரு நோக்கத்துடன் தான் இதைச் செய்து வருகிறார்.

ரஸியா:-ஒரு வேளை இச்சிறையிலிருந்து தப்பவே யிருக்கும்.

ரஹ்மட்:—எதற்கும் நாம் அவருக்கு ஏதாவது உதவிபுரிந்து அவருடன் நாமும் தப்பிக்கொள்ளவேண்டும்.

(போகின்றனர்)

ஐந்தாம் காட்சி

சிறைச்சாலை: மாலை நேரம். ஜஹனர் ஓரிடத்திலிருந்து பேச சிவாஜி கேட்டுக் கொண்டே இருக்கிறார்.

ஜஹனர்:—வேறு வழியில்லையா, தாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாதா?

சிவாஜி:—அம்மணி, எவ்வாறு இக்காரியம் முடியும்? தாங்களோ அந்நியர், அதுவுமல்லாமல் வேறு மதத்தவர். இவ்விரண்டைக் காட்டிலும் என் ஜன்ம சத்ருவின் உடன் பிறந்தவர்.

ஜஹனர்:—ஐயோ! என்னை இவ்வாறு அழைக்க வேண்டாமென்று சொல்லவில்லையா? என்னைப் பேரிட்டு அழைக்கலாகாதா?

சிவாஜி:—அம்மா.........

ஜஹனர்:—இதோ பாருங்கள் மறுபடியும், என்னைப் பேரிட்டு அழைக்காவிடில் நான் உங்களுடன் பேசமாட்டேன்.

சிவாஜி:—தாங்கள் சக்ரவர்த்தியின் சகோதரி. நான் சிற்றரசன் சிற்றரசன் தானே?

ஜஹனர்:—பிராணேசா, என்னிடத்தில் உங்களுக்கு ஒருவித அன்புமில்லையா?

சிவாஜி:— அம்மா! நான் ஒன்றும் அப்படிச் சொல்ல முடியாது.

ஜஹனர்:— அப்படியானால் என்னை ஏன் அம்மா என்று அழைக்கிறீர்கள், பெயரிட்டு அழைக்கலாகாதா?

சிவாஜி:— ஜஹனர், உலகத்தில் ஒருவர்மீது ஒருவர் காதல் கொள்வது சகஜமானதே. ஒவ்வொருவரும் காதல் வாழ்க்கையை நாடுகிறார்கள். எவ்வளவோ பேர் காதல் வாழ்க்கையில் ஈடுபடுகிறார்கள். ஆனால் அவர்கள் மனமொத்தவாறு நடக்கிறதா? நீயோ ஓர் மதப் பேய் பிடித்துத் திரியும் அரசனின் சகோதரி. காதலுக்காக நீ என்னுடன் சகலவித போகத்தையும் துறந்து வருவாயா? அல்லது என் மதத்தைத்தான் விரும்புவாயா? இக்காதல் தீ நம் மனதில் கொழுந்துவிட்டெறியு முன்னரே அதை அணைத்துவிடுவது உசிதமானது.

மரணப்படுக்கையில் கிடக்கும் ஷாஜஹான் சக்ரவர்த்திக்கு, அவரது புத்திரர்கள் அவருக்கெதிராக கலகம் புரியத் தொடங்கிவிட்டார்கள் என்ற செய்தி எட்டுகிறது: இந்த மன வருத்தத்துடன் உயிர் துறக்கிறார் அவர்: அவருக்கு ப்ரிய புத்திரி ஜஹனரா: அந்திய காலத்தில் அவளே அவருக்கு சிச்ருஷை புரிந்தாள்: அவுரங்கஜீப் அதிகாரத்தைக் கைப்பற்றி, தன் கொள்கையை ஆக்ஷேபித்த சகோதரி ஜஹனராவைச் சிறைப்படுத்துகிறார்: இதே சமயம் தமது ராஜ்யத்தில் எதிராகப் பலம் திரட்டி வரும் மஹாராஷ்டிர வீரர் சிவாஜியையும் சிறையிலடைக்க அவர் செய்யும் முயற்சி யாவும் விணாகின்றன: சிவாஜி எதற்கும் சித்தமாகவே இருக்கிறார்: கடைசியில் தந்திரத்தால் சிவாஜியை உள்ளே பிடித்தடைக்கிறார்—சிறையில் சிவாஜி - ஜஹனரா சந்திப்பு ஏற்படுகிறது: ஜஹனரா சிவாஜியைக் காதலிக்கிறாள்: தான் மனதில் வரித்த புருஷரின் க்ஷேமத்தைச் கோரி அவள் தியாகம் புரிவதும், சிவாஜி தப்புவதும் மிகவும் ரஸமான சம்பவங்கள்.

ஜஹனர்:—அப்படியானால் என்றைக்கும் கை கூடாதா?

சிவாஜி:—அம்மா!.........ஜஹனர்! கை கூடுமென்று சொல்வது சுலபமானதல்ல.

ஜஹனர்:—தாங்கள் இவ்வளவு திடசித்தர் என்று நான் முன்பே அறியாது போனேன். தாங்களும் ஓர் மனிதரா? இவ்வடியாள் படும் துன்பத்தைப் பார்த்தும் சகித்துக் கொண்டிருக்கிறீர்களே, தங்களுக்கு அன்பு, ஈவு, இரக்கம் ஒன்றுமில்லையா? என்னைச் சொந்தமாகப் பாவித்து, தங்கள் தர்மபத்னியை அழைப்பது போல் அழைக்கலாகாதா? தங்களுக்கு என் மீது ஓர்வித அன்புமில்லையா?

சிவாஜி:— ஜஹனர்! நான் முன்பே சொன்னேன். உன்னைக் கண்டதுமுதல் என் மனதில் ஓர்வித உணர்ச்சி ஏற்பட்டு தான் வருகிறது. ஆனால் அதை நான் அடக்கிக்கொண்டு வருகிறேன். எதுவாயிருந்தாலும், நான் வேறு வேறுதான் ஜஹனர்.

ஜஹனர்:—ஐயா! எங்கள் மொகலாய வம்சத்தில் இவ்வாறு நடந்ததில்லையா, எங்களவர் உங்களை ஏற்றுக்கொள்ள வில்லையா? நாங்கள் உங்கள் வம்சத்தில் உள்ள பெண்களை ஏற்றுக்கொண்டதில்லையா? இதற்கெல்லாம் மனதின் ஒற்றுமையா, அல்லது மதத்தின் ஒற்றுமையா? (ரஸியா பழங்களுடன் வருகிறாள்.)

சிவாஜி:—ஜஹனர்! இதை முதலில் நீ எடுத்துக்கொள். நான் பவானியைத் துதித்துவிட்டு வருகிறேன்.

ஜஹனர்;—தாங்கள் எடுத்துக்கொள்ளுங்கள், எனக்கு அவசரம் ஒன்றுமில்லை, ஆனால் தங்களை நான் நாதராய் அடைய அனுக்ரகியுங்கள்.

சிவாஜி:—(தனிமையில்) ஜகத்ரக்ஷகி! பவானி மாதா!! உன் சோதனையே சோதனை. என் மனதைப் புண்படுத்தி இல்வாழ்க்கையில் ஓர் மாதையும் சிருஷ்டித்து என்னுடன் கலந்து இல்வாழ்க்கையை நடத்த அனுக்ரகித்தாய். இப்பொழுதோ, இவளையும் என் காலில் கட்டிவிட்டாய். ஆனால் நான் பத்னித்ரோகம் செய்வதா, இவளை வெறுப்பதா! இவளைவெறுக்கவோ என் மனம் நாடவில்லை (ரஸியாவைப் பார்த்து) பூஜைக்கெல்லாம் வந்துவிட்டதா?

ஜஹனர்:—உன்னை அந்தக்கரணசுத்தியாய் ஏற்றுக்கொள்ள என் மனம் சம்மதிக்கவில்லை. உன்னை வெறுக்கவும் என்னால் முடியவில்லை. ஆனால் உன்னிஷ்டப்படி என்னை எப்படியாவது அழைக்கலாம். ஒருவேளை இக்கோட்டையை விட்டு நான் வெளியேற நேர்ந்தால் நீ என்னை மறப்பது உசிதம். ஜஹனர், நீ முதலில் இதை எடுத்துக் கொள்.

[ஜஹனர் பழத்தை உட்கொள்கிறாள்]

ரஸியா:—மகாராஜ்! இவ்வடியாளுக்குத் தாங்கள் அபயமளிக்க வேண்டும். தாங்கள் எவ்வாறாயினும் சிறையிலிருந்து வெளியேற வேண்டும். என்னுயிரைக் கொடுத்தாவது தங்களுக்குதவி செய்கிறேன். [ரஹ்மட் ஓடி வருகிறான்]

ரஹ்மட்:—வேண்டாம்,, வேண்டாம், அவள் உயிரைக் கொடுக்க வேண்டாம். நான் என்னுயிரை விடச் சித்தமாய் இருக்கிறேன்.

சிவாஜி:—உங்கள் சச்சரவு அப்புறம் இருக்கட்டும். நாம் எவ்வாறாயினும் இந்த நாற்பது கூடைகளில் ஒன்றில உட்கார்ந்து வெளியேற வேண்டும்.

ரஹ்மட்:—நீ எனக்கு பீர் பக்கீர் உடையை அளித்தால் அதுவே நீ செய்யும் பெரிய பாக்கியம்.

[சிவாஜி ஆகாரத்தை எடுத்து உண்ணும் சமயத்தில் ஜஹனர் அவன் கையை பிடிக்கிறாள்.]

ஜஹனர்:—வேண்டாம்—வேண்டாம்—ஆகாரத்தில்—விஷம்—விஷம் -- [மூர்ச்சையாகிறாள்]

சிவாஜி:—என்ன விஷமா?

ஜஹனர்:—நாதா, நாதா......அல்லா என்னை அவரிடத்திற்கு அழைக்கிறார்... நான் போகிறேன்...நான் இறக்கு முன் ‘ஏற்றுக்கொண்டேன்’ என்று சொன்னால் அதுவே போதுமானது...தங்களை விட்டு இவ்விடத்திலிருப்பதை விட இறப்பதே மேல்.

சிவாஜி:—[கண்ணீர் விட்டு] கண்மணி ஜஹனர்! உனக்கு நான் கடைசி முறையாகச் சொல்கிறேன். உன் மேல் எனக்கு கரைகாணாத காதல் ஏற்பட்டு அதை விடுவிக்க முடியவில்லை. நான் என் மனதை உன்னை ஏற்றுக் கொள்ள சம்மதிக்குமாறு அதைத் திருப்புவதற்குள் உனக்கு இந்தக் கதி ஏற்படவேண்டுமா? கண்மணி ஜஹனர்! என் மனதைக் கொள்ளைக் கொண்டு இந்தக் காதற் தீயை எழுப்பிய ஆருயிர் காதலி! என்னைப் பரிதவிக்கவிட்டுச் சென்றாயே.

ஜஹனர்;—நாதா.......இன்றே......இஜ் ஜஹனர்......ஸத்கதி அடைந்தாள்...... எபபொழுதாவது...தாங்கள் தனிமையாயிருக்கும்போது......ஜஹனர் ஒருவளிருந்தாள்...என்று நினைப்பீரா...(இறக்கிறாள்)

சிவாஜி:—(சோகத்துடன்) சரி, இனி உனக்காக வருந்தி என்ன பயன்? ரஸியா, ரஹமட்.நான் செல்லத் தயார். இச்சிறையிலிருந்து தப்பி, என்னை அவமதித்த ஆலம்கீரைப் பழி வாங்காமல் விடுவதில்லை. இதோ இருக்கும் கூடையில் நான் அமருகிறேன். நீங்களிருவரும் என்னை இச்சிறையிலிருந்து அப்புறப்படுத்திவிடுங்கள்.

[சிவாஜி தன் கத்தியினால் ஜஹனருக்கு மரியாதை செய்துவிட்டு கூடையில் அமருகிறார். ரஸியா, ரஹ்மட், அந்தக் கூடையைத் தூக்கி கொண்டு வெளியேறுகிறார்கள்]

சுபம்:



ருஷ்யப் படை

★

ரஷ்யக் காலாட் படையின் முன்னேற்றம். இப்படைக்கு முன்னர் டாங்கிகள் போகின்றன. எதிர்ப்பு இவ்விதம் தகர்க்கப்படுகிறது.

★

“டார்பிடோ”

★

பிரிட்டனில் டார்பிடோக்கள் உற்பத்தி செய்யப்படும் இடத்தின் தோற்றம் கடற்படையினர் உபயோகிக்கும் இந்த நாசகார பாணம் ஒவ்வொன்றும் 21 அங்குல அகலம் இருக்கிறது.

★



நேரம், ஸ்ரீதரனை மணந்து சுகமேயிருப்பாள்.

இந்:—ஹூம். நீ சொல்வது விந்தையாய் இருக்கின்றது...நேற்று நான் என் கண்களினால் கண்டேன்...

இந்:—இருக்காது—

சங்:—நீ நினைப்பது தவறு, அவள் உயிருடன் இருக்கின்ருள்.

இந்:—ஹூம்! அவள் இறந்து 3 நாட்களாகின்றன...அவளது பிணத்தைக் கூட...

சங்:—நீ சொல்வது சுத்த பொய்...இதற்கடுத்த ஊரில் இருக்கின்ருள்...நீ நேரிட வேண்டுமானுலும் பார்க்கலாம். சந்தோஷமாகவும் சௌக்கியமாகவும் இருக்கின்ருள்.

இந்திரா:—(தனியாக) அந்த அயோக்கியர்கள் ச்யாமளாவை கொன்று விட்டதாக பொய் அடையாளங்களை காட்டி பை நிறைய பணத்தை வாங்கிக் கொண்டு ஏமாற்றி விட்டார்களே! அடி ச்யாமளி! அகமகிழாதே!....உன்னை தொலைத்து, நானே ஸ்ரீதரனை மணந்து, அவனது சொத்துக்களுக்கு எஜமானியாவேன்; இச்சந்திரனையே மணப்பதாக ஆசைகாட்டி காரியத்தைசாதித்துக் கொண்டு, விடுவோம். (வெளிப்படையாக) சந்திரா, உன்னை இதுவரை சோதனை செய்தேன் குணக்குன்ருகிய உன்னை தவிர பறக்குட்டி தீண்டிய ஸ்ரீதரனை, நான் இந்தஜென்மாவில் மணப்பேனு, அது ஒரு போதும் இல்லை. நாமிருவரும், நிர்பயமாய் மாமன் சொத்துக்களை அடைய வழி தேடவேண்டும். ஸ்ரீதரனை முதலில் ஒழிக்கவேண்டும். ஹூம். ச்யாமளாவை தொலைத்து விட்டோமானுல் ஸ்ரீதரன் தானே ஒழிந்து விடுவான். ஊம், அந்த ச்யாமளாவை ஒழிக்க வழி தேடு......

சங்:—இப்பொழுது தான் அதிர்ஷ்ட சந்திரன் ஆனேன். முதலில் நீ விவாகம் செய்து கொண்டு...—

இந்:—சந்திரா, கிணற்று நீரை வெள்ளம் கொண்டு போகாது... எல்லாவற்றையும் முடித்துக் கொண்டு, மனஸு நிம்மதியான பிறகே, கல்யாணம் செய்து கொள்ளுவோம்.

சங்:—சரி, உன்னிஷ்டப்படியே நடக்கின்றேன்...

இந்:—சந்திரா, ச்யாமளா, நிச்சயமாய் இறக்கவில்லையா...

சங்:—இன்னுமென்ன சந்தேகம்? உனக்கு சந்தேகம் தெளிய வேண்டுமானுல் என்னுடன் மாறு உடையுடன் வருவாயானுல் காட்டுகின்றேன்.

இந்திரா:—(தனக்குள்) இன்று சந்திரனுடன் புறப்பட்டுப் போய் ஆச்ரமத்துட் சென்று, ஸ்ரீதரன் முன்பாக, ச்யாமளாவின் பக்கத்திலிருந்து ஆணுடையுடன், வெளிச்செல்பவள் போல போக்கு காட்டுவோம், ச்யாமளா கையில் இருக்கும் மோதிரத்தை நான் எடுத்துவந்தேன் அதனுல் சந்தேகம் ஊர்ஜிதப்பட்டு, ச்யாமளாவை வெறுத்துத் தள்ளுவான், இப்பொழுதே ஆணுடையுடன் புறப்படுகின்றேன் (வெளியே) இதோ வந்தேன் அன்பா எனக்கு ஓர் உபகாரம் செய்வாயா? ஸ்ரீதரன் வீட்டில் ஓர் இரவு தங்கி வருவோம். நான் ஆணுடையில் வருகின்றேன்.

சங்:—ஆகா, உன்னிஷ்டப்படியே செய்...என் காரியம் நிறைவேறினுல் போதும்......

சந்திரன்:—ஸ்ரீதரா, உன்னை தனியே விட்டு நான் அங்கிருப்பதில் எனக்கு மனே வேதனை அதிகரிக்கின்றது.....

ஸ்ரீ:—அந்தோ என்ன அன்பு. உடன் பிறந்தவன் போல சந்திரன் கொண்ட அன்பு...நீ நினைத்து மனமுருகுவதில் பயனில்லை... அன்னை, தந்தை இருவரும் சௌக்கியமா? பிதாவின் கோபம் தணிந்ததா,

சங்:— எல்லாரும் சுகமே, உனது தந்தையின் கோபமா? தணிந்தபாடில்லை...

ஸ்ரீதர:—சந்திரா, வர நேரமாகி விட்டது, உட்சென்று படுத்துக்கொண்டே பேசி, இன்புறுவோம்...

இரவு மணி 12, ஊரோசை அடங்கி விட்டது. மெதுவாய் இந்திரா ஆணுடையுடன் ஸ்ரீதரனை இடறிக் கொண்டு, அவனது தூக்கத்தை கலைத்து, தன்னைப் பார்க்கும்படிக்கும் செய்து தயங்கி தயங்கி, திரும்பி பார்த்துக்கொண்டே, மெதுவான குரலில், "கண்ணே, நாளை வருகின்றேன். மோதிரம்......"என்று சொல்லிக்கொண்டே சென்ருள்

ஸ்ரீதரன், "சந்திரா, யாரோ திருடன் போலிருக்கிறது. என்னை இடறிக் கொண்டும், மோதிரம், மோதிரம் என்று சொல்லிக் கொண்டும் போகின்ருனே...

சங்:—ஆம், நானும் கவனித்தேன்...

ஸ்ரீதர:—ச்யாமளாவை கேட்டால் தெரிகின்றது, ச்யாமளா, ச்யாமளா...

ச்யா:—ஆ, இதோ வந்தேன்.

ஸ்ரீதர:—இப்பொழுது உன் அருகாமையிலிருந்து வெளி வந்தது யாரோ?

ச்யா:—எப்பொழுது?

ஸ்ரீதர:—இப்பொழுதே...

ச்யா:—நான் ஒருவரையும் பார்க்கவில்லையே, என் தோழி நீலாவைத் தவிர நான் யாரோடும்......

ஸ்ரீதர:—நிஜமாகவா,

ச்யா:-ஆம் நிஜமாகத்தான்...

ஸ்ரீதர:—அடி மாயக் கள்ளி. நான் நேரிட அக்கள்வனைப் பார்த்தேனே...முழு பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கின்றனையே

ச்யா:—அன்பரே! எனக்கொன்றும் புரியவில்லையே...

ஸ்ரீதர:—ஆம் ஒன்றும் புரியாது தான்...நான் உனக்களித்த மோதிரம் எங்கே?

ச்யாமளா, தனது கையைப் பார்த்து, ஐயோ மோதிரத்தை காணவில்லையே" என்று அலறுகிருள்.

ஸ்ரீதர:—அடி கள்ளி, உன்னை உயிராக மதித்து ஏமாந்து...

ச்யா:—என் நாதா, நான் என் மனசாக்ஷியறிய ஒருவித குற்றமும் செய்யவில்லையே நீச ஜாதியிற் பிறந்தவள், தங்களைத் தீண்டி; துரோகம் செய்ய நினைத்தவள் அல்ல...எனது பதிஸேவையை பிறர் அறிய வேண்டும்...தங்களது திருக்கைகளினுலேயே, எனக்கு ஓர் முடிவை ஏற்படுத்தி விடுங்கள், இக்கத்தியினுல் என்னை துண்டித்து விடுங்கள்.

ஸ்ரீதரன் கத்தியை ஓங்க, சந்திரன் அதிவிரைவாய் ஸ்ரீதரனது கால்களை பிடித்த வண்ணம் "ஸ்ரீதரா எல்லாத்துக்கும் நானே காரணம். சகலமும் இந்திராவின் சூழ்ச்சியே...... ஒரு பாபமும் அறியாத மகா பதிவ்ரதையான இம்மாதுக்கு விளைவித்த துன்பங்களுக்கு காரணபூதன் நானே"...என்று ஆதியோடந்தமாய் எல்லாவற்றையும் சொல்லி, "ஏ பாரத மாதாவை போன்ற பொறுமையின் குணமணி, என்று ச்யாமளியின் காலில் வீழ்ந்தான்.

நிற்க, அதே சமயத்தில் அங்கு தோன்றிய ஸ்ரீதரனது பெற்ரோர்கள் "ஸ்ரீதரா! மைந்தா! என் அன்பே! உன்னை இம்மட்டுமாவது உயிரோடுபார்த்தோமே, கண்டேன் ஆனந்தம் கொண்டேன்" என்று ஸ்ரீதரனை மார்புற தழுவி உச்சி மோந்தார்கள்.

ஸ்ரீதரன் மாதா பிதாவை நமஸ்கரித்து எழுந்தான்.

ஸ்ரீதரனது தந்தை:"ஸ்ரீதரா, இந்திராவை நல்லவள் என்று எண்ணி மோசம் போனேம். நேற்றே அவளது சமாசாரம் எட்டினது. அவள் கன்னிகையாய் இருந்துகொண்டு நாகரீக பேய் பிடித்து ஒரு சிசுவுக்கு தாயாகி அதை அநாதை ஆச்ரமத்தில் விடுவித்து வளர்க்க செய்ததும் அல்லாமல் இப்பால் பல சிசுஹத்திகளை செய்து கொண்டு இருக்கின்ருளாம். இப்பொழுதும் கர்ப்பிணியாம், அவளது காதலன் மைனர் துரைசாமியாம். அவனே நேற்று நேரிட சொன்னுன். பதிபக்தியில் விளங்கி நிற்கும் ச்யாமளாவை கண்டு களிக்கின்ரேம். எங்கள் மனப்பூர்வமான சம்மதத்தை கொடுக்கின்ரேம். நீ ச்யாமளாவை மணந்துகொண்டு சுகி" என்றனர்.

ஓர் நல்ல சுபமுகூர்த்தத்தில், ச்யாமளாவிற்கும் ஸ்ரீதரனுக்கும், நளினுவிற்கும் சந்திரனுக்கும் விவாகம் ஆடம்பரமின்றி கதர்திருமணமாக நடந்தேறியது.

ச்யாமளாவின் பெற்ரோர்களுக்கு உண்டான சந்தோஷம் அளவிட முடியாமல் இருந்தது. பெற்ரோர்கள் மகிழ ஸ்ரீதரனும் ச்யாமளாவும், கருத்தொருமித்து குடும்பத்தை நடத்தலானுர்கள். அங்கங்கே கதர் கடைகளும், ராட்டின பள்ளிக்கூடமும் ஏற்படுத்தி, ஏழை எளியவர்களுக்கு கற்று கொடுத்து......... அகமகிழ்ந்தார்கள். அன்ன சத்திரங்களும் கட்டி ஆனந்தமடைந்தார்கள்

பெற்ரோர்கள் அகம் பூரித்து ஆனந்தமடைந்தார்கள். ச்யாமளா, "அன்பிற்குண்டோ அடைக்கும் தாழ்" என்றபடி நடந்து கொண்டாள்.

"அழகென்பது மாதர்களுக்கு உத்தமமான வலை—அவ்வலையை குணத்துடன் மாதர்கள் விரிப்பார்களே யானுல் அரசனும் அதற்குள் சிக்குவான்"—

சுபம்

ஹோமியோ புத்தகங்கள்

ஆங்கிலம்: ஹோமியோபதி மருந்துகள். முதல் சிகிச்சை முதலிய புத்தகம் ரூ. 1/-மட்டும்.

ஜாரின்: ஸ்திரீகள், குழந்தைகள் சம்பந்தமான புத்தகம் ரூ. 6/-மட்டும். குடும்ப அனுபவம் ரூ. 3/8/-மட்டும்.

தெலுங்கு: ஹோமியோபதிமுறை ரூ.1/-மட்டும்.

M. Bhattacharyya & Co.
ECONOMIC PHARMACY
84, Clive St., Calcutta

CATARACT

and all Eye diseases cured radically by COCONAUT Brand LOTUS Honey World-wide Reputed and Tested.
½ Dram Re. 1 4.1 Dram Rs. 2

ULCERINE

A sovereign remedy for all sorts of Boils. Piles, Sinus, Fistulls, Carbuncles, Gangrenes, Foul-ulcers operated wounds, etc. Bottle Rs. 1-4 For these products All India Karachi Congress & Lucknow Govt. Exhibitions awarded medals Free details from:

DADHA & Co., P. T. Madras.

சுத்த சவரன்

தங்கத்திலிருந்து

வீகம்ஸீ நகைகள் செய்கிருர்கள்

VEECUMSEE
CHABILDOSS & SONS
JEWELLERS & DIAMOND MERCHANTS
ESTABLISHED 1893
CHINA BAZAAR ROAD, MADRAS

மிஸஸ். ச. கோ. இ.
காதர்மீரா சாயபு,
ஹெட் நர்சரி தோட்டம், சேலம் S.
ஒட்டு மாங்கன்களும், பழச்செடிகளும், இங்கிலீஷ் காய்கறி, புஷ்ப விதைகளுமிருக்கின்றன. கேட்லாக் இனம்.

3 உயர்ந்த

டானிக்குகள்

யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, மதராஸ்.
(உதவி வைத்தியர் Dr. P. S. C. மணி)

கன்னடக் கதை

குடலின் அழைப்பு

ஸ்ரீ எ. என். கிருஷ்ண ராவ்
எழுதியது

நகரத்தின் மேற்குப் புர ஓரத்தில் சில குடிசைகள்: அவை எல்லாம் ஏழ்மைத் தனத்தின் வாழ்க்கையை சுமக்க முடியாமல், அந் நிலையிலிருந்து ஒதுங்கவும் முடியாமல், தத்தளிப்பவர் வீடுகள். பிச்சை யெடுத்து அன்றைய சாப்பாட்டை சம்பாதிப்பது, வீட்டிற்கு வந்து சாப்பிட்டு முடிப்பது, கவலையின்றி படுத்துறங்குவது, மறுநாள் எப்பொழுதும் போலவே ஸிதாரையோ, பிடிலையோ பிடித்துக் கொண்டு புறப்படுவது. மழை காலத்தில் வீட்டுக் கூரையினுள் நுழைந்து நனைந்து போகாமல் உட்கார அவகாசமின்றி உள்ளெங்கும் மழை தேங்குவது, அப்பொழுது யார் வீட்டு திண்ணையையாவது நாடிச் சென்று, தங்கி இருந்து, மழை நின்றவுடன் வீட்டிற்கு வந்து சேருவது.

இவ்விதமான அகம் ஒன்று முகம்மதுக்கும் நேர்ந்திருந்தது. அதை தன் கையினுலேயே கட்டியிருந்தான். பரலோகம் அடைந்த தனது பத்னியின் பெயரில் அதை அன்புடன் "அமீனு மஹால்" என்று அழைத்து வந்தான். தனது உஸ்மான் விவாகமாகி தனது அகத்திற்கு மனைவியை அழைத்து வந்தால் அவர்களுக்காக ஒன்றிரண்டு அறைகளைக் கட்ட வேண்டும். தன்னுடைய நாட்டுப் பெண் என்றென்றைக்கும் இந்த மாதிரி மாமனுரையும், இந்த மாதிரி கணவனையும் அல்லா அருளட்டும் என்று பிரார்த்திக்கும்படி அவளை சொந்தப் பெண்ணைக் காட்டிலும் அதிகப் பரிவுடன் போஷித்து வர வேண்டுமென்று கனவு காண்பான். முகம்மதின் ஆத்மா என்னும் பறவையானது உஸ்மானின் அந்தரங்கத்தில் கூண்டு கட்டிக் கொண்டிருந்தது. ஸிதாரை வாசித்த வாறே உஸ்மானை நினைத்துக் கொண்டு நீண்டதொரு பெருமூச்சு விடுவான்.

'இந்த அஸாவேரி பேட்டா பாடினுல் எவ்வளவு நன்ருகவிருந்தது. இந்த ஹிந்தோளம் பேட்டாவின் குரலுக்கு எவ்வளவு நன்ருக இசையும்......இந்த பைரவி பேட்டாவின் யோக்கியதைக்கு எவ்வளவு நன்ருகத் தோன்றும்' என்று சொல்லிக் கொள்வான். வெளியிலிருந்து வெறுப்புடன் களைத்துப் போய் வீட்டிற்கு வந்து, அடிக்கடி பிற்காலத்தின் வழக்கத்தின் பலத்தால் "ரே பேட்டா...உஸ்மான்" என்று பலமாகக் கூப்பிடுவான். உஸ்மான் தூர தேசமான கல்கத்தாவில் இருப்பதை நினைத்துக் கொண்டு "ஹாய்" என்பான். தன் வீட்டுச் சுவர்களை அலங்கரித்துக்கொண்டிருந்த உஸ்மானின் அபிநய சித்திரங்கள் தான் முகம்மதிற்கு நிழல் கொடுத்தும் பொறுமை யளித்தும் வந்த கல்ப விருக்ஷங்கள். சித்திரங்களின் எதிரே மலர்ந்த கண்களால் பார்த்த வண்ணம், அன்பு...குதூகலம்...... பெருமை...எதிர் பாராதபயம்... முதலிய துன்பங்களால் வியாகூலமடைந்தவனுய், உஸ்மானை அணைத்து முத்தமிட்டுக் கொண்டிருந்த விதமே அவைகளையும் அணைத்து முத்தமிடுவான்.

"எவ்விதமாவது முயற்சி செய்து கல்கத்தாவிற்கு சென்று புத்திரனின் வைபவத்தை பார்த்து வரட்டுமா" என்று யோசிப்பான். அடுத்த விநாடியே ராஜ வைபவத்துடன் கூடிய அலங்காரத்துடன் விலையுயர்ந்த மோட்டார்காரில் புன்முறுவல் பூத்தவண்ணம் வீற்றிருக்கும் தனது புத்திரனின் புகைப்படத்தைப் பார்த்து "சே, இப்பொழுது அவன் சாக்ஷாத் ராஜகுமாரனைப்போல் இருக்கிருன். நானே ஒரு பிச்சைக்காரன், அவனை எதற்கு தொந்திரவு செய்யவேண்டும்?......... நான் யாரென்று அவனுடைய நண்பர்கள் கேட்டால், "என் தகப்பனுர்" என்று சொல்லிக் கொள்வதற்கு அவனுக்கு எவ்வளவு வெட்கமாக இருக்கும்! ......" அதைப் பற்றியே வெகு நேரம் வரை யோசிப்பான். "நான் பிச்சைக்காரன் தான்; நிஜம். கல்கத்தாவிற்கு சென்ருல் என் பிள்ளை என்னை பிச்சை எடுப்பவனென்று திரஸ்கரிப்பானு?" என்று கவலை கொள்வான்.

உஸ்மான் தகப்பனை விட்டுப் பிரிந்து ஆறு வருஷ காலம் முடிந்துகொண்டு வந்தது. கடந்து போன ஒரு வருஷம் வரையிலும் தகப்பனுக்கு தவருமல் கடிதம் எழுதிக் கொண்டிருந்ததுடன் அவ்வப்பொழுது கொஞ்சம் பணத்தையும், அபிநய சித்திரங்களையும் அனுப்பிக்கொண்டிருந்தவன் ஒரு வருஷமாக அதையும் நிறுத்திவிட்டான். 'இன்று வரலாம்......நாளைக்கு வரலாம்" என்று கடிதத்தை எதிர் பார்த்து எதிர் பார்த்து முகம்மத் கவலையில் மூழ்கிப் போனுன். "காயலாகப் படுத்து விட்டானே" என்று யோசிப்பான். எவ்விதம் யோசித்தாலும் வழிதெரியவில்லை. பாரசீக கம்பெனியின் மானேஜருக்கு கடிதம் வரைந்தான். அவரிடமிருந்தும் பதில் கடிதம் வரவில்லை. முகம்மதிற்கு துக்கம் எல்லையைக் கடந்துவிட்டது. எவ்விதமாவது செய்து கல்கத்தாவிற்கு சென்று புத்திரனைப் பார்த்துவிட்டு வர வேண்டுமென்று சங்கல்பம் செய்துகொண்டான்.

கையில் சொற்ப பணம் இருந்தது. உழைத்து உழைத்து சேகரித்தது! நாளைக்கு உஸ்மான் விவாகம் செய்துகொண்டு வீட்டிற்கு வந்தால் அவனது மனைவிக்கு நல்ல புடவையொன்று வாங்கித் தர வேண்டுமென்றும், அகத்தைக் கொஞ்சம் பெரிதாகச் செய்ய வேண்டும் என்றும் சேமித்து வைத்திருந்த நூறு ரூபாயை இப்பொழுது உபயோகித்துக்கொள்ள வேண்டுமே...... உபயோகித்துக் கொள்ளாவிட்டால் வேறு வழியில்லை, என்று 50 ரூபாயை எடுத்துக்கொண்டு வழியில் சாப்பிடுவதற்காக ஏழெட்டு கம்பு மாவு ரொட்டிகளை எடுத்துப் பொட்டளமாக கட்டிக் கொண்டு அன்றைய இரவே ரயிலேறினுன்.

கல்கத்தாவைப்போன்ற விஸ்தாரமான பெரிய நகரில் ஏழை முகம்மதை கேட்பார் யார்? புதிய இடம், புதிய மனிதர்கள், கையில் மிச்சம் இருந்த கொஞ்ச பணத்தையும் யார் திருடிவிடுவார்களோ என்ற திகில்! ஊரைச் சுற்றிச்சுற்றி அலுத்துப் போனுன். உஸ்மானை காண்பிப்பவர்கள் ஒருவருமிலர். கடைசியில் உஸ்மான் சேர்ந்திருந்தது பாரசீகக் கம்பெனி என்று ஞாபகம் வரவே, கல்கத்தாவில் பாரசீகக் கம்பெனிகளனைவற்றிலும் உஸ்மானைத் தேடிக்கொண்டு புறப்பட்டான். மூன்று நாட்கள் பிரயோஜனமற்று அலைந்து திரிந்த பின்னர், உஸ்மானின் "பாரசீக கம்பெனி"யின் அடையாளம் கிடைத்தது. முகம்மதின் மார்பு படபடவென்று அடித்துக் கொண்டது, தன் மைந்தனுக்கு தன் அடையாளம் தெரியுமோ... தெரியாமல் போய் விட்டால் என்ன கதி? கம்பெனியின் காம்பௌண்டிற்குள் செல்வதற்கு முதல் ஒரு மோட்டார் கார் முகம்மதின் எதிர்பக்கமாகப் புறப்பட்டு போயிற்று. மோட்டாரினுள்ளிருந்த புருஷனிடம் உஸ்மான் முகச்சாயல் இருந்தது. அது அவனுகத்தான் இருக்குமோ? உள்ளே சென்று அவ்விடமிருந்த ஒரு சேவகனை விசாரித்தான். அவன் அந்த கிழவனின் அங்க அடையாள சம்போதனையைச் செவியுற்று ஆச்சரியத்துடன் "ஆமாம். அவர் தான் கவாய் உஸ்மான்கான் சாஹேப்" என்று பதிலளித்தான்.

"இப்பொழுது எங்கு செல்ல புறப்பட்டிருக்கிருர்?" என்று கேட்டான் கிழவன்.

"டில்லிக்கு! கம்பெனி அவ்விடத்திற்கு சென்றிருக்கிறது. இன்றைய ரயில் வண்டியில் கான் சாஹேப் அவர்கள் செல்கிருர்" என்று அந்த சேவகன் பதிலளித்தான், முகம்மதிற்கு பூமியும் ஆகாயமும் ஒன்ருக சேர்ந்தாப்போலாயிற்று. ஒரே ஓட்டமாக ரயில்வே ஸ்டேஷனுக்கு ஓடினுன்.

கவாய் உஸ்மான் சாகேப் நாடகமேடையில் உச்ச நிலையை அடைந்தான். அவனது வாழ்க்கை சீர் குலைவதற்கு சத்துருவாக வந்தாள் பியாரி: சிறிது காலம் வரை பிதாவிடம் பரிவுகொண்டிருந்தான்: காலக்ரமத்தில் மனமாற்றம் ஏற்பட்டது - ஆனுல் பெற்ற மனம் பித்தல்லவா? தனயனைப்பற்றியே சதா தந்தைக்கு தீராக்கவலை! அவனைக்காணவே ஆவல்! பாவம் பிதாவின் பிரயத்தினம் பலனற்று வருகிறது: உஸ்மான் நோயுற்று ஆஸ்பத்திரியிலிருக்கிறன். சம்பாதித்த செல்வம் சென்று விட்டது: பழைய ஞாபகம் எல்லாம் முன் வந்தது. தான் பெரியவனுவதற்காக, தன் கஷ்டத்தையும் பாராட்டாது, தன்னை ப்ரீதியுடன் வளர்த்து வந்த பிதாவின் நினைவு மேலெழும்பியது. கடைசியில் இருவரும் ஒருவரையொருவர் சந்தித்தனர்? அது எங்கே? அது எப்பொழுது? அவர்கள் பேசினது என்ன?—இவற்றை நீங்களே இந்த கன்னடக்கதையில் படித்தறியவேண்டும்.

* * * * *

மொழிபெயர்த்தவர் ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி ஸ்ரீநிவாஸன்

டில்லிக்குப் புறப்படும் ரயில் வண்டித் தொடரின் ப்ளாட்பாரத்தை முகம்மத் போய் சேரும் பொழுதும் வண்டித் தொடர் ப்ளாட்பாரத்தை விட்டகலும் பொழுதும் ஒரு மிக்கச் சேர்ந்தது. முகம்மதின் கால்கள் இரண்டும் வலவலத்துப் போயின 'ஹாய்-குதா!" என் மீது கருணை இல்லையா? என்னும் முறையீடு ஆகாயத்தைப் பிளந்தது!

4

டில்லி பிரயாணத்தை முடித்துக்கொண்டு பாரசீக கம்பெனி கம்பெனி கல்கத்தாவிற்கு திரும்பிற்று. அந்த சமயத்திற்கு சரியாக நாடகமேடையில் பியாரியின் மீது உள்ளுக்குள்ளேயே பரவிக் கொண்டிருந்த நெருப்பு கொழுந்துவிட்டு எரிய வாரம்பித்தது. நடிகர்களின் அசமாதானத்தை எவ்விதமாவது சமாதானம் செய்யவேண்டுமென்று கம்பெனியின் முதலாளிகள் கஷ்டப்பட்டனர். பியாரியின், மற்றும் உஸ்மானின், நடத்தை கல்கத்தா பட்டிணம் பூராவையும் ஆச்சரியத்தில் மூழ்கடிக்க வாரம்பித்தது. உஸ்மான் எவ்வளவு காலம் தனது அமானுஷ்யமான சங்கீதத்தினாலும் புத்தி வல்லமையினாலும் முக்கியஸ்தர்களை மயக்கிக்கொண்டிருந்தானோ அதுவரை அவனது துர்நடத்தையை அவர்கள் மறந்திருந்தனர். ஆனால் இப்பொழுது அபிநயத்தில் ஓர் மிதமின்றி, மட்டுமரியாதையுமின்றி பியாரியின் தோள்மீது கைபோட்டுக்கொண்டு தெருக்களில் மோட்டாரில் சுற்றித் திரியவாரம்பித்த பின்னர், அவர்கள் கொண்ட அபிமானமும் மழுங்கிக்கொண்டே வந்தது.

முதன் முதல், எந்த உஸ்மான் பியாரி, பெயர் கம்பெனிக்கு லக்ஷக்கணக்காக ரூபாய்களை சம்பாதித்துகொடுத்ததோ, இப்பொழுது அவர்களது பெயர் காரணமாக கம்பெனியின் சிலவிற்குக் கூட பணம் கிடைக்கவில்லை! முதலாளிகள் இந்த கடுமையான நிலைமையை உணர்ந்து, நாயகன் நாயகி இருவருக்கும் கம்பெனியை விட்டு விடும்படியாக நோடீஸ் அனுப்பிவிட்டார்கள்.

உஸ்மான் இதற்கப்புறம் யாது செய்வது என்பதைப்பற்றி ஆலோசிக்க வேண்டியதாயிற்று. அவன் ஆலோசனை செய்வதற்குள், பியாரி தான் முன்பிலிருந்த கம்பெனிக்கே திரும்பவும் போய் சேர்ந்து கொண்டு, உஸ்மானை முழுக்கவும் மறந்து விட்டாள்.

உஸ்மான் கண் விழித்தான். தன்னுடைய நிலைமை என்னவாயிற்றென்பதின் அறிவு இப்பொழுது உண்டாயிற்று. தான் சம்பாதித்திருந்த ஆயிரக்கணக்கான ரூபாய்களையும் வஞ்சனையில்லாமல் பியாரியின் சுகத்திற்கென்று வாரியிறைத்து விட்டான். இப்பொழுதவள் லக்ஷாதிகாரிணி...தான் பழைய பிச்சைக்காரன், முதலிலிருந்த தேக சௌந்தரிய சம்பத்தையும் இழந்துக்கொண்டிருந்தான். தேகம் துர்நடத்தைகளால் மெலிந்து போய் நாதமில்லாத மூங்கிற் குழாய் போலாயிருந்தது. கண்கள், கன்னங்கள், மார்புக் கூடு குழி விழுந்து சம்ஸ்காரத்திற்கு சித்தமாக விருக்கும் பிணத்தைப் போலாயிருந்தன்.

இந்த சம்பவம் அவனை ஒரு பிழையிலிருந்து இன்னொன்றுக்கு இழுத்துக் கொண்டு சென்றது. சின்ன சின்ன சில்லரைக் கம்பெனிகளில் சேர்ந்து, கண்ட கண்ட பெண்களின் சகவாசத்தினால் கிடைத்த மதுபானங்களைச் சாப்பிட்டுக் கொண்டு தனது அழிவு வாழ்வின் பாட்டை பாடி முடிககலானான். அவன் வாழ்வு, படகோட்டியை இழந்த படகானது புயலில் சிக்கிக் கொண்டு தத்தளிக்கும் ஸ்திதியிலிருந்தது. இது காரணமாக கோரமான சஸ்த்ர சிகித்ஸை ஒன்றை அவன் அனுபவிக்க வேண்டியதாயிற்று.

சஸ்த்ர சிகித்ஸையை முடித்துக்கொண்டு உஸ்மான் ஜனரல் ஆஸ்பத்திரியிலிருந்து வெளிவந்தான் ஆஸ்பத்திரியில் அவனுக்கருகில் ஒரு படுக்கை அதில் படுத்தவன் இளம் வயதினன். அவனது தாயார் தகப்பனார் வந்து அருகில் உட்கார்ந்துக் கொண்டு புத்திரனுக்கு சிசுருஷை செய்யும் காட்சியைக் கண்டான். அது அவனுடைய உள்ளத்தில் அடங்கியிருந்த சில பழைய ஞாபகங்களை நினைப்பூட்டியது. இதற்கு முன்னால் தனது வாழ்வில் நடந்த சம்பவங்களனைத்தையும் ஒவ்வொன்றாக நினைத்துக் கொண்டான். தான் எவ்விதமான சரள, சத்குண சுகுமாரனாய் இருந்ததை ஞாபகப்படுத்திக் கொண்டான். மற்றும் தன் தகப்பனை நினைத்துக் கொண்டான். அவனது கருணை, தாயில்லாக் குழந்தையென்று தன்னை வளர்த்த அன்பின் விதம். தான் கொஞ்ச காரியம் செய்தாலும் கூட களைத்துப் போய் விடுவேனென்று சலிப்பில்லாமல் அந்த வயதான காலத்திலும் எல்லா கஷ்டமான காரியத்தையும் தானே வகித்துக் கொண்ட பெரிய

வெட்டுக்காயத்தால் ரத்தம் விஷமாவதை தடுத்துக்கொள்ளுங்கள்

ஜாம்-பெக் அற்புத கிருமிநாச நிவாரணி.

ரணத்தை அலக்ஷியம் செய்தால், அவை விஷமாகமாறி, பல மணிநேரம் வலி உபத்திரவம் ஏற்படும். உங்கள் வெட்டுக்காயம், ரணத்தை ஜாம்-பெக் மெழுகால் குணப்படுத்தி இவ்வித தொந்திரவைப் போக்கிக் கொள்ளலாம். ஜாம்-பெக்கிலுள்ள சுத்திகரிக்கப்பட்ட மூலிகை ஆயில்கள, சருமத்திற்குள் சென்று, வலியை சமனப்படுத்தி, வீக்கத்தைக் குறைத்து, புண்பட்ட இடத்திலுள்ள சகல விஷத்தையும் போக்கிவிடும். ஜாம்-பெக் தழும்பின்றி குணப்படுத்தும். எல்லா மருந்து வியாபாரிகளாலும் ரூ. 1 அல்லது 2/4 வீதம் விற்கப்படுகின்றது. ஜாம்-பெக் ஸோப் ரூ. 1. ஜாம்-பெக் பவுடர் ரூ. 1. ஏஜண்டுகள்:— மெஸர்ஸ் தாதா அண்டு கம்பெனி, பி. டி., மதராஸ்.

எப்பொழுதும் ஜாம்பேக் உபயோகியுங்கள்.

ZAM-BUK

மிருகக் கொழுப்பற்றது.

BLACK LOCK & MACARTHUR LTD., GLASGOW

வெள்ளை வர்ணத்தில் 541 வெள்ளைதான் உயர்ந்தது. வெண்மை மாறாது. வெடிக்கவும் செய்யாது. அதிக ஸன்னமாதலால் ஆண்டு வரும். 541 ஈய வெள்ளையை வாங்கி உபயோகித்தால் கூலி மிச்சமாகும். அடிக்கடி வர்ணம் கொடுக்க வேண்டிய அவசியமுமிராது. 541 கெக்கின்பேரில் மான் மார்க்கும் இரண்டு ஈய வீல்களும் இருக்கிற கெக்காகப் பார்த்து வாங்குகள். போலிகளை வாங்கி ஏமாறாதீர்கள். செந்தூரத்தில் "மான் மார்க்" செந்தூரம்தான் உயர்ந்தது. இவைகள் எல்லா வர்ண வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும்.

Sole Agents:- M.R.V. AIYER & CO., 49, பந்தர் தெரு, மதராஸ்.

அமிர்தாஞ்சன்

போலிகள் எச்சரிக்கை

"சுதேஹமித்திரன்"

எல்லாவித் நோய்களையும் தீர்க்கும்.

அமிர்தாஞ்சன் லிமிடெட்,

பம்பாய் - சென்னை - கல்கத்தா.

ஆனந்த பற்பொடி

☞ இந்த லேபிலைப்பார்த்து வாங்குங்கள்.

இதுதான் மார்க்கட்டில் சிறந்தது

எங்கும் கிடைக்கும்.

Certified by Rt. Hon. V. S. Srinivasa Sastri, P.C.
Hon. Sir R. K. Shanmukham Chetty, K.C.I.E.
Hon. Sir Md. Habibulla Sahib Bahadur, K.C.S.I.
Hon. Sir K. V. Reddi, Kt. Sir B. N. Sarma, K.C.S.I.
Hon. Sir P. S. Sivaswami Aiyar, K.C.S.I., C.I.E.
Hon. Sir C. P. Ramaswamy Aiyar, K.C.I.E.
Hon. Sir M. Krishnan Nair, Kt. Sir A. P. Patro, Kt.
Hon. A. T. Pannirselvam, Dr. P. Subbaroyan
Hon. Justice K. Sundaram Chetti, Hon. P. T. Rajan

ANANDA TOOTH POWDER
TRADE MARK
REGISTERED

Hon. Justice Sir C. V. Kumaraswami Sastri, Kt.
Hon. Justice Sir V. Ramesam, Kt.
Hon. Justice Sir C. V. Ananthakrishna Aiyar, Kt.
" C. Madhavan Nair, Sir M. D. Devadoss, Kt.
" M. Venkatasubba Rao, Raja of Sivaganga.
Rajas of Kollengode, Bobbili, Ramnad, Mandasa.
Gold medals from Mysore, Pudukkottai Etc. States

MANUFACTURED BY—VAIDYARATNA PANDIT U. RAMANATHA SASTRI, MADRAS.



வைத்திய ஸித்தாச்ரமம்,
39, பஜார் ரோட்,
மைலாப்பூர் — மதராஸ.

மனது, தனது ஸ்ரேயஸிற்காக சகலத்தையும் அர்ப்பித்த இணையற்ற அன்பு!!- எல்லாவற்றையும் நினைத்துக் கொண்டு குழந்தையைப் போல் அழுது விட்டான். நடு நடுவில் அவன் வாயிலிருந்து "தாதா! தாதா! தாதா!" என்னும் பேச்சு மட்டும் வெளி வந்துக் கொண்டிருந்தது. துயரத்தின் எதிரில் தான் எவ்வித பச்சிளங் குழந்தையென்பதை அறிந்தான்! துயரத்தின் ஆவேசத்தில் அழுது அழுது அவனுடைய கண்கள் சிகப்பாகியிருந்தாலும், உள்ளம் தெளிந்திருந்தது.

ஊருக்குத் திரும்பிச் சென்று தகப்பனாரின் பாத தூளியை நெற்றியில் அணிவதென்று இச்சை கொண்டான். ஆனால் தனது ஈனஸ்திதியை கண்டு வெட்கம் கொண்டான். "பையன் பெரிய பணக்காரனாக விருப்பானென்று நம்பியிருக்கும் தகப்பனாருக்கு இந்த முகத்தை எவ்விதம் காண்பிப்பேன்" என்று துயரப்பட்டான். ஆனால்...அவன் "என் தகப்பன்...நான் பச்சிளங் குழந்தையாக விருந்த பொழுதிலிருந்தும் என்னைசீராட்டிப்பாலூட்டி போஷித்து ப்ரீதி காட்டி வந்தார், அன்பிற்கு பணத்தின் போர்வை எதற்காக?" என்று மனதை சமாதானப் படுத்திக் கொண்டு ஊருக்கு புறப்பட்டே விட்டான்.

5

முகம்மத் எப்படி ஊர் வந்து சேர்ந்தானோ அவனுக்குத் தான் தெரியும். ரயில் வண்டியிலிருந்து இறங்கின வுடனேயே பலஹீனத்தால் விழுந்து விட்டான். முன்பே துயரத்தால் மெலிந்து போயிருந்த அவனுடைய உடல் புத்திரனைக் காணாத துயரத்தை தடுத்துக்கொள்ள முடியவில்லை. சில நல்ல மனிதர்கள் அவனைத் தூக்கி வந்து ஜெனரல் ஆஸ்பத்திரியில் விட்டார்கள். அவனது உற்ற நண்பர்கள் அவ்வப்பொழுது வந்து அருகில் உட்கார்ந்துகொண்டு சமாதானம் சொல்லி வந்தனர். முகம்மதின் உடலில் நிற்க இஷ்டமில்லாத ஆத்மா அதை விட்டு செல்லவும் பின் வாங்கி அவனை மிகவும் இம்சித்தது. உள்ளக்கொதிப்பிற்கு அன்பு தான் மருந்து. வைத்தியர்கள் நிராசையுடன் கைவிட்டு விட்டனர்.

தூக்கத்திலும், விழிப்பிலும், முகம்மதிற்கு ஒரே நினைவுதான். "உஸ்மான்—மேரா பேட்டா..." இவ்வித துயரக்கடலில் மூழ்கிக் கிடந்தாலும் கருணை வள்ளலான குதாவை மட்டும் மறக்கவில்லை. "என் அருகில் வா வா என்று அழைக்கிறாயே குதா. மகன் என்னும் மோகத்தை எதற்காகக் கொடுத்தாய்?" என்று கேட்பான்.

ஹிருதயம் பலவீனமாயிருக்கிறதென்று ஒரு வைத்தியர் மொழிந்தார்...சுவாஸப் பைகள் பலஹீனமாக விருக்கிறதென்று மற்றொரு வைத்தியர் கூறினார். கடைசியில் இது ஒடும் க்ஷயம் என்று நிச்சயித்துவிட்டனர்; மருந்தைக் கொடுக்க தாதி வந்தால், அவளுடைய கைகளைப் பிடித்துக்கொண்டு, "மகளே! எனக்கெதற்கு இந்த மருந்து? ஒருதரம் உஸ்மானை வரவழைத்துவிடு. அவனைப்பார்த்து விட்டு கவலை யற்று இந்த யாத்திரையை முடித்துவிடுகிறேன்' என்று கூறி தனது கெஞ்சின பார்வையில் அவள் மனதை கருணைக் கடலில் மூழ்கடித்துவிடுவான். ஒரு நாள் காலை வேளை...ஆகாயத்தில் சந்தோஷ தோற்றம் ஒன்றுமில்லை. ஒருவித காம்பீர்யமான பயங்கர சௌந்தரியம் நிலவியிருந்தது. முகம்மத் துயிலெழுந்து விடியற்காலை நமாஸில் ஆழ்ந்திருந்தான். அவனது மிருதுவான உள்ளத்திலிருந்து வெளியே புறப்படும் பிரார்த்தனையுடன் கலந்துகொண்டு இன்னும் இருவர் எதிரில் உட்கார்ந்திருக்கின்றனர். முகம்மதின் முகத்தில் காம்பீர்யமான ஒளியொன்று தோன்றிற்று. உள்ளத்தின் அமைதியின் பிரதிபிம்பம் முகத்தில் நிலவியிருந்தாற்போல் தோன்றியது. பிரார்த்தனையை முடித்துக்கொண்டு, சேவகர்களின் சகாயத்தை கொண்டு மெதுவாக படுக்கையின் மீது உட்கார்ந்து, பக்கத்தில் உட்கார்ந்திருந்த டாக்டரை குறித்து:—

"ஹகீம்ஜி...இன்று என்குதா சொல்லிஇருக்கிறான் பாருங்கள்"

"என்னது அது?......கான் சாகேப் அவர்களே!"

"என்...என்...உஸ்மானைப் பார்ப்பேனென்று......"

"நிஜம்...கான் சாகேப் அவர்களே"

"நிஜம்தானா ஹகீம்ஜீ, நான் கண்டிப்பாய் உஸ்மானை பார்ப்பேனா?"

"பார்ப்பீர்கள், கான் சாகேப்.. நானாகவே அவரை அழைத்து வந்து காண்பிக்கிறேன்"

"எங்கே...எங்கே... சீக்கிரம் அழைத்து வாருங்கள்?"

"தாங்கள் அவசரப்படக் கூடாது. நான் வார்த்தையை மீறி நடப்பவனல்ல. கொஞ்சம் இந்த டீயை எடுத்துக்கொள்ளுங்கள். அப்புறம் அவரை அழைத்து வருகிறேன்."

தேயிலை பாத்திரத்தை கையில் வாங்கிக் கொண்டு கொஞ்சம் சாப்பிட்டு விட்டு, அப்படியே கொடுத்துக் கொண்டு தலை நிமிர்ந்து பார்த்தான், எதிரே இருப்பவன் ஹகீம் அல்ல... யாரோ புதிய மனிதன். முகம்மத் கண்ணைதேய்த்துக்கொண்டு அந்த மனிதனை உற்று நோக்கி,

"நீ யார்?"

"நான் யாரா?"

தனக்கு பதில் அளித்த மனிதன் பின்னால் தனது நண்பன் நிற்பதைப் பார்த்து "இவன் யாரோ அவன் நண்பனாக விருக்க வேண்டும்" என்று உணர்ந்தான். ஆனால் குடல் மற்றும் என்னவோ சொல்லிக்கொண்டிருந்தது.

மறுபடியும் அந்த புதிய மனிதன்!

"கான் சாகேப்."

"ஜீ"

'தா......தா......"

அந்த குரலின் அடையாளத்தை அறிந்து கொண்டான். உற்றுப் பார்த்தான்.

"பேட்டா...வந்தாயா?" என்னும் அவ்வளவு வார்த்தைகள் மட்டும் அவன் வாயிலிருந்து வெளி வந்தன. தகப்பனும் மகனும் கட்டித் தழுவினர்.

கொஞ்ச நேரம் கழிந்தது. உஸ்மானுடன் வந்திருந்தவன் இருவரையும் விடுவித்து முகம்மதை படுக்கையில் படுக்கவைத்தான், உஸ்மான் தகப்பனின் அருகில் உட்கார்ந்து அவனுடைய தாடியை முத்தமிட்டு முகத்தை மெதுவாக் தடவிக் கொடுத்து கண்ணீரை தனது சட்டையின் நுனியில் துடைத்துக்கொண்டே "தாதா! கடைசிக்கு உன்னை பார்த்தேனே" என்றான்.

"பேட்டா! வந்தாயா! வா! அணைத்துக்கொள்! குதா உன்னை காப்பாற்றுவாராக! என் அமீனா ...அவள்...இருந்திருந்திருந்தால் ...உன்னைப் பார்த்து..." என்று சொல்லிக்கொண்டே புத்திரனை பலமாய் அணைத்துக்கொண்டான். கொஞ்ச நேரம் கழிந்ததும் உஸ்மான் பயந்துபோனவனாய் பார்க்கிறான்...அதே அமைதியான முகம்...அதே மிருதுவான, அளவு கடந்த அன்பின் அவதாரம்......ஆனால் பறவை பறந்து போய்விட்டிருந்தது. "தாதா! தாதா! தாதா!" என்று தகப்பனின் மீது விழுந்தான். எவ்விடமிருந்தோ, "பேட்டா! உஸ்மான்! குதா!" என்னும் அன்பு ததும்பும் வார்த்தைகளின் பிரதித்வனி கேட்டது.

காலையில் எழுந்தவுடன்



காலையில் எழுந்தவுடன் நீங்கள் செய்ய வேண்டிய முதல் காரியம் டீ அருந்துவதே. இரவிலுண்டான அசக்தியை முற்றிலும் போக்கி, சுரு சுருப்புடன் உங்கள் பகல் வேலைகளைக் கவனிக்க தயார் செய்ய வல்ல உயரிய பானம் டீயே ★

எங்கள் புதிய பிரசுரமாகிய "டீ அருந்துவதற்கான சமயங்கள்" என்ற சித்திரங்களுடன் கூடிய புத்தகத்தில், டீ அருந்துவதற்கான சில விசேஷ சமயங்களைப்பற்றி இங்கிலீஷில் சொல்லப் பட்டிருக்கிறது. இந்த விளம்பரத்தைக் கத்தரித்து, உங்கள் பெயர் விலாசத்துடன், கீழ்கண்ட விலாசத்தாருக்கு அனுப்பினால், அவர் இப்புத்தகத்தின் பிரதி ஒன்று இலவசமாக அனுப்புவார்: கமிஷனர் (இந்தியாவுக்கு), இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டு, தபால் பெட்டி நெ. 2172, கல்கத்தா.



இந்தியன் டீ
அருந்துங்கள்
புத்துயிரளிக்கும் உயரிய பானம்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது

IK 156

1942-ம் வருஷத்து புது கியாட்லாக் இனாம். 2 அணா ஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்கு 'முத்தத்தின் ரகஸ்யங்கள்' என்ற புத்தகம் இனாம். எந்த தேசத்து ஸ்டாம்பும் அனுப்பலாம்.

ஒற்றுமை ஆபீஸ், தியாகராயநகர், மதராஸ்.

சிறுவர் கதை

பெரிய சமாராதனை

★

எம். என். கணேசய்யர்



பண்டைக் காலத்தில் பத்மநாப சர்மா என்ற ஓர் அரசன் இருந்தான். அவன் மிகுந்த தர்மிஷ்டன். கேட்டவர்களுக்கு இல்லை என மாட்டான். புத்திசாலிகளிடம் அவனுக்கு வாஞ்சை மிகவும் அதிகம். அவர்களது தப்பிதங்களை அநேகமாய் மன்னித்தே விடும் சுபாவம் வாய்ந்தவன்.

பத்மநாப சர்மாவின் ராஜ்யத்தில் பரமசிவய்யர் என்ற ஒரு பிராம்மணர் இருந்தார். அவர் பரம ஏழை. அன்றன்றைய காலக்ஷேபமே கஷ்டமாக விருந்தது அவருக்கு.

பரமசிவய்யரின் தகப்பனாது சிராத்தம் பங்குனி மாதம் பதினைந்தாம் தேதி செய்ய வேண்டியிருந்தது. கையிலோ காசில்லை. சிராத்தம் செய்ய வேண்டுமென்றால் குறைத்தது பத்து ரூபாயாவது வேண்டும். என்ன செய்வார் பரமசிவய்யர்!

"இன்று தானே முதல் தேதி. இன்னும் பதினன்கு நாட்கள் தான் இருக்கின்றன. சுவாமி ஏதாவது வழிகாட்டுவார்" என்றது அவரது மனது ஒரு சமயம்.

"என்ன வழி ஏற்படப் போகிறது! அப்பா சிராத்தம் அலங்கோலம்தான்" என்றது அதே மனது சில நேரத்திற் கெல்லாம். பரமசிவய்யரின் ஊரில் காத்திருமா சத்திரம் என்ற ஓர் சத்திரம் இருந்தது. அதில் பிரயாணிகள் வந்து இறங்கி தங்கிப் போவது வழக்கம். ஒரு நாள் பரமசிவய்யர் அச் சத்திரத்தில் எதையோ நினைத்துக் கொண்டு புகுந்தார். அங்கிருந்தவர் அரசன் பத்மநாப சர்மாவைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தது அவரது காதில் விழுந்தது.

"இவர்கள் தான் பத்மநாப சர்மா உதார குணமுள்ள அரசன் என்கிறார்களே. தவிர புத்திசாலிகளிடம் அவனுக்குப் பிரியமாமே! நான் ஏன் ஒரு யுக்தி செய்து தணிகன் ஆகப்படாது! சரி! செய்து தான் பார்க்கிறேன்" என்ற ஒரு தீர்மானத்திற்கு வந்தார்.

மறு தினம் பரமசிவய்யர் புறப்பட்டுச் சென்று பத்மநாப சர்மாவினது ஆஸ்தான மண்டபத்தை அடைந்து வணங்கி நின்றார்.

"அந்தணரே! என்னால் ஆக வேண்டியது எதோ?" என்று கேட்டார் அரசர்.

'ஒரு பெரியசமாராதனை செய்து முடிக்கப் பொருள் உதவிக்காக வந்தேன்' என்றார் அந்தணர்.

அரசன்:—எவ்வளவு பெயர்களுக்கு அன்னமளிப்பதாக எண்ணமோ?

அந்தணன்:—ஒரு பன்னிரண்டாயிரம் பெயர்களுக்கு.

அரசன்:—பெரிய சமாராதனையே தான் அது. என்ன தொகை பிடிக்கும் அது நிறைவேற?

அந்தணன்:—இலக்கு குறைந்தது ஒரு ரூபாயாவது வேண்டியிருக்கும்.

அரசன்:—சரி, நான் பதினைந்தாயிரம் ரூபாய் கொடுக்கச் சொல்கிறேன். சிறப்பாக அது நடைபெறட்டும். இடம் எங்கே? எப்பொழுது அது நடைபெறும்? நான் வந்து பிராமணர்கள் போஜனம் செய்வதைப் பார்க்க வேண்டும்!

அந்தணன்:—மஹாராஜாவே! எனக்கு ஒரு அரண்மனை இருக்கிறது. அதில் தான் சமாராதனை நடைபெறும். பங்குனி மாதம் 15-ம் தேதி பகல் 12-மணிக்கு மேல் தாங்கள் வந்து பார்க்கலாம். கொஞ்சமேனும் எனது வார்த்தையில் தவறு ஏற்படாது நிச்சயம்.

* * * *

குறிப்பிட்ட தினத்தில் அந்தணர் கூறியவிடத்திற்கு அரசன் 12-மணிக்கு மேல் வந்து சேர்ந்தான். எங்கும் நிசப்தமாக விருந்தது. பெரிய சமாராதனை நடைபெறும் இடத்தை அங்கு எங்குமே காணேம்!

அந்தணரும் அரசனை யணுகி நமஸ்கரித்து 'மஹாராஜாவே! வரணும்!

வரணும்! பிராமணர்கள் போஜனம் செய்து கொண்டிருக்கிறார்கள். பார்வையிடலாம்' என்றார்.

அரசன்:—அரண்மனை எங்கே காணும்?

அந்தணன்:—இக் குடிசை ஒரு அரண்மனையில் தான் கட்டப்பட்டிருக்கிறது.

அரசனும் எழுந்த கோபத்தை அடக்கிக் கொண்டு "பன்னிரண்டாயிரம் பெயர் வழிகள் எங்கே காணும்?" என்றார்.

"உள்ளே வாருங்கள் மஹாராஜாவே கணக்குப் போட்டுக் காட்டுகிறேன்" என்று கூறி அரசனை உள்ளே அழைத்துச் சென்றார். அங்கு மூவர் போஜனம் செய்து கொண்டிருந்தார்கள். அவர்களுள் ஒருவரைப்பார்த்து, அந்தணர் "சுவாமி நீர் யார்?" என்று கேட்டார். "நான் அஷ்ட ஸஹஸ்ரப் பிராமணன்" என்றார் அவர்.

இன்னொருவரை கேட்க அவர் தாம் தில்லை மூவாயிரத்தார் என்றார். மூன்றாவது பெயர் வழியைக் கேட்க அவர் தாம் தன்னுயிரத்தார் என்றார்.

"மஹாராஜாவே! கேட்டீர்களோ இல்லையோ! ஒருவர் 8 ஆயிரத்தார். இன்னொருவர் மூன்று ஆயிரத்தார். மூன்றாவது பெயர் வழி ஒரு ஆயிரத்தார் ஆச்சோ இல்லையோ கணக்குப் பன்னிரண்டாயிரம்!"

ரூ. 60,000 பெருமானமுள்ள ஆபரணங்கள் வழங்கப்பட்டன

உலகின் எட்டாவது அதிசயம் அமெரிக்கன் நியூ கோல்டு எங்கள் சிருஷ்டி. அது இந்தியா பூராவும் பிரபல்யம் அடைந்துவிட்டது. அதற்கு அறிமுகமே தேவையில்லை. பத்திரிகைகளும், பொது மக்களும் அதை எங்கும் புகழ்கிறார்கள். அதன் கெமிகல் நிறம் எப்பொழுதும் தங்க நிறமாகவே இருக்கிறது. இந்தத் தங்கத்தைக்கொண்டு நீங்கள் சிறந்த ஆபரணங்களை செய்து கொள்ளலாம்.

இந்த அமெரிக்கன் நியூ கோல்டை பிரபலப்படுத்தும் நோக்கத்துடன் ஒரு சாம்பிள் செட் வினியோகம் செய்ய நாங்கள் நிச்சயித்துள்ளோம்.

இந்த செட்டில் உண்மையான அமெரிக்கன் நியூகோல்டு 6 தோலாவும். ஒரு ஜதை புது மோஸ்தர் வளையல்களும் ஒரு ஜதை மூக்குத்திகளும் 2 பம்பாய் மோஸ்தர் மோதிரங்களும், ஒரு ஜதை தோடுகளும் இருக்கும்.

AMERICAN NEW GOLD WORKS, (S.M.W) Dina Nagar (Punjab)

மூன்று அவசிய குடும்ப ஔஷதங்கள்.

இரண்டும் அண 10. ஸ்ரீகா கஸ்தூரி கோரோஜனை மாத்திரை இரண்டும் அண 10.

பாலக்ஸ்—பேதியாக மாத்திரை, — பாட்டில் அண 4.

யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தாதெரு, மதராஸ் (மாடுங்கா)

வந்து விட்டார்

★

ஸ்ரீ ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன் எழுதியது

அக்னிப் பிரவேசத்திற்கு ஆயத்தமாய் விட்டார் பரதர். கெடுப்படி ராமர் வரவில்லை. எங்கும் ஒரே கலக்கமும் கவலையும் காணக் கிடந்தது. திடீரென்று ஆரவாரம் பிறந்தது. மேக மண்டலத்திலிருந்து குதித்தார் ஹநுமார். இதோ வருகிறார் ராமர் சீதா சமேதராய் என்றார். கேட்க வேண்டுமா பிறந்த குதூகலத்திற்கு! இன்றைய செய்தியைக் கேட்டு பாரத நாடு குதூகல மடையுமா? வந்து விட்டார் கிரிப்ஸ்! சுதந்திர வாழ்வுக்கும் சுக வாழ்வுக்கும் சூசனையுண்டா? அவர் வரவு நல்வரவு ஆகுக!

அறிக்கை பிறந்தது முதல் அதைக் குத்திக் கிளறி பலர் பார்த்து வருகின்றனர். ஒவ்வொரு வார்த்தைதையும ஒவ்வொரு வாக்கியத்தையும் பூதக் கண்ணடி கொண்டு பரிசோதித்து வருகின்றனர். வீண் வேலை: மூளைக் கொதிப்புதான் மிச்சம்; அறிக்கையில் ஆறுதலில்லை; இருந்தால் ஆளிடந்தான் இருக்க வேண்டும். கிரிப்ஸின் கூற்றில் தான் குணம் காண வேண்டும். கூடை நிமிர்ந்தால் மாவும் கனியும் காணுமா? சற்று பொறுங்கள். இந்த வாரம் உண்மை வெடித்து விடும்.

கிரிப்ஸைக் காணச் சிலருக்கு அழைப்புக் கிடைத்திருக்கிறது. சகஜமாக எதிர்பார்க்கக்கூடிய சிலருக்குக் கிடைக்கவில்லை. நடை முறையும் தெளிவாகவில்லை. கட்சித் தலைவர்கள் பசையிருந்தால் பிடித்துப் பேசத் தயார் என்பது மாத்திரம் தெளிவு. மஹா கனம் சாஸ்திரிகள் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து விட்டார். இடைப்பதைக் கொண்டு திருப்தியடையுங்கள் என்கிறார். மிதவாத மனப் போக்கை கிரிப்ஸ் அறிந்திருக்க வேண்டும். அதனால்தான் சம்மேளனத்திற்கு இது வரையில் அழைப்பு காணவில்லை போலும்!

ராஜாஜியின் அறிக்கை சமயோசிதமானது. தானம் கொடுக்க வரவில்லை கிரிப்ஸ். தானம் வாங்கி எந்தக் குடியும் நிமிராது. எதிர்கால வாழ்வை நிர்ணயித்து இடைக்கால சூச்னையைக் கோருவது கருத்துடன் தான். யுத்த முயற்சி பலம் பெறவேண்டும்; எதிராளியை வெல்ல வேண்டும்; அதற்கு வழி யொன்றுதான் உண்டு. பொறுப்பு வேண்டும்; காப்பு முறைகளில் ஈடுபடக் கவர்ச்சி வேண்டும். அதிகாரம் மாற வேண்டும். அதற்கு இன்னும் காலப் பிற்பாடாகி விடவில்லை. கிரிப்ஸ் அதை அறிவார் என்றே நம்புகிறோம். அறிவை நிறைவேற்ற அதிகாரம் அவருக்குண்டா? கேள்வியும் விடையும் அதில் அடங்கியிருக்கின்றன. சோர்வுற்ற மக்களைத் தட்டியெழுப்ப ஸஞ்ஜீவி மலை தேவை. கொண்டு வந்திருக்கிறாரா அவர்?



"தீவிர அபேதவாதி"

உயர் லக்ஷியம் கொண்டவர்

இந்தியாவுக்கு வந்து சேர்ந்த ஸர் ஸ்டேபோர்ட் க்ரிப்ஸுக்கு இப்போது வயது 53 தான் ஆகிறது; பிரிட்டனில் நிகரற்ற ராஜ தந்திரி என்ற பிரசித்தியை அடைந்திருக்கிறார் அவர்: தற்போது நடக்கும் மஹத்தான யுத்தத்தில் ருஷ்யாவையும் வலித்திழுத்த பெருமை அவரைச் சேர்ந்தது. ஒருவித எதிர்ப்பின்றி திடீரென்று உச்ச நிலையை அவர் அடைந்துவிட்டார் என்பது பிரிட்டனில் பலரது கருத்து; தமது வாழ்நாள் பூராவும் இதுவரை மாம்சத்தையோ மதுவையோ அவர் உட்கொண்டதில்லை: தமது உணவில் மிகுந்த ஜாக்ரதையாயிருப்பவர், இன்றும் காய்கறியில் தான் அவருக்கு விருப்பம்; இதைப் பற்றி மஹாத்மா கூட சமீபத்தில் குறிப்பிட்டார்: மஹாத்மாஜி இவ்விஷயமாக தாங்கள் இருவரும் அதிக நேரம் சம்பாஷித்ததாகக் கூறியது பலருக்கு ஞாபகமிருக்கும்,

ஒரு விமர்சகர் கருத்து

"லார்ட் லோதியனுக்கப்புறம் தான் ராஜ தந்திரியானார் ஸர் க்ரிப்ஸ். அதற்கு முன்பு அவரை ஒரு அந்நியராகவே இங்கிலாந்தில் கருதினர்: மன்னர் பிரானைப் பற்றி நினைத்தவித மெல்லாம் அவர் பேசி வந்தார்: இப்போது இந்தியாவுக்கும் பிரிட்டனுக்கும் நெருங்கிய நட்பை நிலை நாட்ட அந்த நாட்டுக்கு அவர் புறப்பட்டுப் போகிறார்: தற் சமயம் இந்தியாவுக்கும் யுத்த அபாயம் ஏற்பட்டிருக்கிறது. வாரன் ஹேஸ்டிங்ஸ் போல் அதிகார தோரணையில் அவர் அங்கிருப்பார்: ஆனால் இதே சமயம் மஹாத்மா காந்தி போல் மிகவும் எளிய வாழ்க்கையையும் வினயத்தையும் அவர் மேற் கொண்டவர். சமீபத்தில் ருஷ்யாவிலிருந்து பெருமையுடன் திரும்பியவர் இவர் தான்: இங்கு வந்து நம் உள்ளம் குளிரும் படியான விதத்தில் நம்மிடையே வந்து பேசினர். தேசியத் தலைவர் என்ற பிரசித்தியையும் வெகு விரைவில் சம்பாதித்துக் கொண்டார்" என்கிறார் 'ஸண்டே அப்ஸர்வர்' பத்திரிகையில் ஒரு விமர்சகர் இவரைப்பற்றி எழுதும்போது.

உயர்வை எட்டியது

விஞ்செஸ்டர் கலாசாலையில் படித்தார்: பிறந்ததும் நல்ல செல்வம் நிறைந்த உயர் குடும்பத்தில்: பிரபல விஞ்ஞானியாக விருப்பம் கொண்டார் ராயல் சொஸைடியார் முன்னிலையில் ஒரு வியாசத்தை எழுதிப் படித்தார், தமது இருபதாம் பிராயத்திற்கப்புறம் சில காலம் ஒரு ரஸாயன தொழிற்சாலையையும் நடத்தி நிர்வகித்தார். ஆனால் மனம் இதில் ஈடுபடவில்லை: காரணம் இன்னும் துலங்கவில்லை: சட்டத்தொழிலை மேற்கொண்டார்: நியாயவாதத்தை ஆரம்பித்தார். விரைவில் வருவாயும் வியாபகமும் விஸ்தரித்தன. சம்பாதித்ததற்கு அளவு கிடையாது: பார்ப்பவர் பிரமிக்கும்படியாகவும் இருந்தது. ஒரு சமயம் மாதம் 40,000 ரூபா அவர் சம்பாதித்ததாக விஷயமறிந்தவர் விளக்குகின்றனர். தொழில் நடத்தியதும் சிறப்பாகத்தான். வெறும் பணப் பித்து பிடித்து ஆடவில்லை; எங்கு பணத்தைப் பறிக்க வேண்டுமோ அங்கே இறக்கம் காட்டவில்லை; பெரும் புத்தியைக் காட்டி பல ஏழைகளை சந்தோஷப்படுத்தினார். அவர். பணக்காரர்களிடமிருந்து வாங்கிய பணம் அதிகம்: அதே சமயம் பணமில்லாதார்களுக்காக பணம் வாங்காமலே ஆஜராகி வந்தார். இவ்வாறு இவரது கீர்த்தி வெகு சீக்கிரத்தில் தேசம் முழுதும் பரவிவிட்டது.

அபேதவாதர்

அபாரமாக சம்பாதித்தும் ஆடம்பரம் கிடையாது; வாழ்க்கையில் படாடோபமே இல்லை: மிகவும் சர்வ சாதாரணமான விதமாய் நடந்து கொண்டார்: எல்லோருடனும் சர்வ சகஜமாகப் பழகினர்: வெகு சீக்கிரத்திலேயே அபேதவாதக் கொள்கையில் நம்பிக்கை கொண்டார்: "எல்லோரும் ஓர் குலம்" என்ற கருத்தே அதிகம் மேலிட்டது: தொழிலாளர் பால் அதிக சிரத்தை காட்டினர்: மற்றுமொரு விஷயம்: உள்ளத்தில் இருப்பதை ஒளித்து வைப்பதும் கிடையாது. கிறிஸ்து காட்டிய மதத்தில் இருந்த பற்றுதல் மஹத்தானது: இருந்தும் ஆரம்பத்தில் இவரது வாழ்க்கை முறை சிலருக்குத் திருப்தி தர வில்லை.

1935-ம் வருஷம் தொழிற் கட்சி உப தலைவரானர்: நான்கு வருஷங்களுக்கப்புறம் இவரைக் கக்ஷியை விட்டு வெளியேற்றி விட்டனர். காரணம் இதுதான். பிரிட்டனும் பிரான்ஸும் ருஷ்யாவும் ஒன்று சேர்ந்து நாஸிகளை எதிர்த்து நிற்க வேண்டும் என்றார் ஸர் க்ரிப்ஸ்: கக்ஷியிலிருந்த இதரர் இந்த யோசனையை வெறுத்தனர். ஆனால் என்ன? வெறுப்பு இப்போது விருப்பாக மாறியிருக்கிறது. சுயநலத்தைப் பிர தீக்ஷிக்காமல் மிகுந்த கண்ணியமான முறையை அவர் பின்பற்றியதே தற்சமயம் அவருடைய பெருமை பிரகாசிப்பதற்கு ஹேதுவாகிறது.

ருஷியாவுடன் உறவு

இதுவே இவரிடம் பிறர் மதிப்பு கொள்ள நிர்ப்பந்தப்படுத்துகிறது. 1940-ம் வருஷம் கோடைகாலத்தில் யுத்தத்தின் போக்கு மிகவும் விபரீதமாக இருந்தது. ருஷ்யாவை நேசதேசங்களுடன் சேர்த்துக் கொள்வதன் அவசியம் உதயமாகியது. இதை எப்படி சாதிப்பது? இதுவரை பிரிட்டனில் ருஷ்ய எதிர்ப்பு தான் நீடித்து வந்தது: எதிர்ப்பை மாற்றி

"கே.எஸ்.ஆர்"

சிநேகத்தை சம்பாதித்துத் தர யாரால் முடியும் என்பதே பிரதம மந்திரியை மிகுந்த சிந்தனையிலாழ்த்தியது. இதற்கு பூரண அருகதையுள்ளவர் ஸர் ஸ்டேபோர்ட் க்ரிப்ஸ் தான் என்ற முடிவுக்கு மந்திரி சபையார் வந்தனர்: ருஷ்யாவுக்கு பிரிட்டனின் விசேஷ தூதராகப்போகும்படி இவரை வற்புறுத்தினர்: பரஸ்பர நல்லுறவு ஏற்பட வழி தேடுமாறு இவரைக் கோரினர்: அளிக்கப்பட்ட ஸ்தானத்தை உவப்புடன் ஸ்வீகரித்தார். முன்பே தாம் காட்டிய மார்க்கத்தின் மஹிமையை மந்திரிகள் உணர்ந்தது அவருக்கு மகிழ்ச்சி தந்தது: தமது வேலையில் மிகுந்த உத்சாகத்துடன் முனைந்தார்: ஆரம்பத்தில் மஹத்தான இடையூறுகள் முன் நின்றன: ருஷ்யாவில் அவரை முதலில் மதிப்பார் இல்லை. இந்த வேலை நமக்கெதற்கு என்று வேறு இதரர்கள் வேதனையடைந்திருப்பார்கள்; ஆனால் ஸர் கிரிப்ஸ் நல்ல பொறுமையைக் காட்டினார்! கோபத்தினால் காரியம் தான் கெடும் என்பதை நன்கறிந்தவர்: எனவே ருஷ்ய சர்வாதிகாரி ஸ்டாலின் தம்மிடம் காட்டிய அசிரத்தையையும் பொருட்படுத்தவில்லை: ஒரு வருஷகாலம் மாஸ்கோவில் இருந்து முயற்சி பண்ணினார்: ஸ்டாலின்—ஹிட்லர் நட்பைத் துண்டிக்க ஏற்பாடு செய்தார்.

பல பொய் வதந்திகள்

1941-ம் வருஷம் ஜூன் மாதம் இவர் அவசரம் அவசரமாக லண்டன் திரும்பினார்: வதந்திகள் பலவிதமாகப் பரவின: ஸர் க்ரிப்ஸ் கைவிரித்துவிட்டார் என்றனர் அநேகர்: ஆனால் வெளிநாட்டிலாகா அதிகாரிகள் மட்டும் விஷயத்தைக் கொஞ்சம் வெளியே விட்டனர். ஜெர்மனிக்கும் ருஷ்யாவுக்கும் தகராறு தோன்றி விட்டது; அது விஷயமாக ஆலோசனையைக்கேட்க ஸர் க்ரிப்ஸ் வந்திருக்கிறார் என்றனர் அவர்கள். மாஸ்கோவிலிருந்து கிளம்பிய செய்தி இதை மறுத்தும் கூறியது. தகராறுக்கு இடமே ஏற்படவில்லையே என்றது மற்றொரு செய்தி ஸ்தாபனம்: உண்மை ஸர் க்ரிப்ஸ் ஒருவருக்குத்தான் தெரியும். லண்டன் வந்து சேர்ந்ததும் ரகஸ்யத்தை எடுத்துரைத்தார்; க்ரிப்ஸ் தூது பயன் பெற்றது என்பது இம்மாத முடிவாகு முன்னமே விசதமாகியது: ருஷ்யா மீது ஹிட்லர் யுத்தத்தை ஆரம்பித்தார்: யுத்தத்தின் போக்கும் இதனால் மாறிவிட்டது. இவ்வரிய காரியத்தை நிறைவேற்றிவைத்த பெருமைக்கு உரிமை கொண்டாடக் கூடியவர் ஸர் க்ரிப்ஸ்தான்.

இதற்கப்புறம் சமீபத்தில் ஸர் க்ரிப்ஸ் பிரிட்டனுக்குத் திரும்பினார். பிரிட்டிஷ் யுத்த மந்திரிசபையில் அவருக்கு ஒரு ஸ்தானத்தை மிஸ்டர் சர்ச்சில் அளித்தார்: காமன்ஸ் சபை லீடராகவும் அவரை நியமித்தார்: லார்ட் ப்ரிவி ஸீல் பதவியையும் தந்தார்.

மன்னர் ஆக்ஞை

பதினெட்டு வயதான யுவர்கள் யாவரும் ராணுவத்தில் சேர்ந்து கொள்ள வேண்டும் என்று மன்னர்பிரான் வெளியிட்ட பிரகடனம் லண்டன் 'மான்ஷன் ஹவுஸ்' வெளியே படிக்கப்பட்டது.

- ஆறு ஆண்டுகளுக்கு முன் -

எழுதியது

★

ஸர் க்ரிப்ஸ் "காங்கிரஸ் ஸோஷியலிஸ்ட்" என்ற பத்திரிகைக்கு 1936-ம் வருஷம் ஜனவரி மாதம் ஒரு வியாசம் அனுப்பினர். அதன் முக்கிய பகுதிகள் வருமாறு:—

இந்தியா மசோதா பற்றி சென்ற வருஷம் விவாதம் நடந்து கொண்டிருக்கையிலும், இந்த தேசத்தில் இந்தியாவின் கதி மோக்ஷத்தைப் பிரதானமாகக் கவனிப்பாரில்லை. "பெருமை பொருந்திய பிரிட்டிஷ் சாம்ராஜ்யம்" சீர் குலைகிறது என்றெல்லாம் பேசி, வின்ஸ்டன் சர்ச்சில் இந்நாட்டில் மத்ய வகுப்பாரிடை உணர்ச்சியை உண்டு பண்ணினர். இந்தியாவைப்பற்றி பொது ஜனங்களுக்கு விஷயம் ஒன்றும் தெரியாமையால், அவர்கள் இது ஏதோ ஒரு பெரிய சிக்கலான சாம்ராஜ்ய விவகாரம் என்றும், இது தங்களுக்குப் புரியாதது என்றும் சும்மா இருந்து விட்டனர். தங்களது தினசரிப் பிரச்னைகளும் ஐரோப்பிய நிலைமையும் அவர்களது மனதைக் கவர்ந்ததே தவிர, தூரதேசமான இந்தியாவைப்பற்றிய சிந்தனை உதயமாகவில்லை.

* * * * *

"பூரண அபேதவாதத்தைத் தழுவி, பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் சிதறிப்போவதைப்பற்றி கவலை கொள்ளாதவரை, எந்த பிரிட்டிஷ் ஸர்க்காரும், இந்தியர் தங்கள் உரிமைகளை சுயமாக நிர்ணயம் செய்துகொள்வதற்கு இணங்கமாட்டார்கள் என்பது என் கருத்து. சாம்ராஜ்யம் சிதறிப்போனால் பிரிட்டனின் பொருளாஸ்திதிக்கு பாதகம் நேரும்: இதைத் தீர்த்துவைக்க பூரண அபேதவாதத்திட்டம்தான் உதவும்.

"இந்தியா கோரும் சுய நிர்ணய உரிமை வரையறை விதிக்கப் படாததாகும்: அதற்குத் தடையை அவர்கள் விரும்பவில்லை. இது தான் மக்களின் உரிமை. இந்த உரிமையைத்தான் இங்கிலாந்திலிருக்கும் தொழிற்கட்சியார் பூராவும் ஒப்புக்கொண்டிருக்கின்றனர்.

"இதை காரியத்தில் நடத்த முன்வரும்போது, நியாய புத்தியோ அல்லது பழைய உணர்ச்சியோ மட்டுமே மேல் எழும்பாமல், ஒரு நூற்றாண்டுக்கு மேலாகவே பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் காரணமாகத் தோன்றியுள்ள தீங்கான பொருளாதார உறவு மறைவதால் ஏற்படும் கடினமான பிரச்னையும் தலை தூக்கி நிற்கும். இந்த உறவைக் குலைப்பது மிகவும் அவசியம்: இந்திய நிலைமை காரணமாக கொழுத்து வந்த வகுப்பாருக்காக நாம் கண்ணீர் விட வேண்டியதில்லை. தொழிலாளர் இயக்கத்தைச் சேர்ந்த நாம், இந்திய மக்கள் சுதந்திரம் பெற உதவுவதால் என்ன விளையும் என்பதைக் கவனிப்பது முக்கியமாகும். இந்தியத் தொழிலாளருக்கும் பிரிட்டிஷ் தொழிலாளருக்கும் அதிக கஷ்டம் நேராத விதம் இந்த உறவை ஒழிக்கவும் திட்டம் போட வேண்டும்.

"காலக்கிரமத்தில் இந்திய சுதந்திரத்தினால். உலகத் தொழிலாளர் யாவரும் அதிக நன்மையை அடைவார்கள்: அதற்கிடையில், அதாவது பிரிட்டிஷ் முதலாளித்துவம் மறைந்து, பிரிட்டிஷ் இந்திய அபேதவாதம் தோன்றும்போது, இரு தேசத்து தொழிலாளருக்கும் அதிக சங்கடங்கள் இருக்கும்"

இந்தியாவுக்கு தூது

ஜப்பானும் யுத்தத்தில் இறங்கிவிட்டது கீழ்க்கோடி நிலைமையை விபரீதமாக்கிவிட்டது. ஆகவே இந்த யுத்தத்தில் இந்தியாவின் மனமார்ந்த ஆதரவைப் பெற பிரிட்டிஷ் மந்திரி சபை மிகவும் அபேக்ஷித்தது. இதுவரை இந்தியர்விடுத்த கோரிக்கைகளுக்கு பிரிட்டிஷார் இணங்கிவராததால் இந்தியாவில் உத்சாகம் காணவில்லை: கடைசியில் இந்தியாவுக்கு ஸர் க்ரிப்ஸையே அனுப்ப பிரிட்டிஷ் மந்திரி சபை முடிவு செய்தது: தாமாகவே இந்தப் பொறுப்பை அவர் ஏற்றுக்கொண்டதாகவும் கூறப்பட்டது; காரணம் கண்டு பிடிப்பது கஷ்டமல்ல. 1939-ம் வருஷம் இறுதியில் ஸர் க்ரிப்ஸ் இந்தியாவுக்கும் விஜயம் செய்தார். பல இடங்களைப் போய்ப் பார்த்தார்: முக்கியஸ்தர்களுடன் கலந்தாலோசித்தார்: தலைவர்களுடன் நெருங்கிப் பேசினார்: ஆகவே இவர் உண்மையை உணர்ந்தவர். குற்றம் எங்கிருக்கிறது என்பதைக் கண்டவர்: பரிஹாரம் எது என்பதையும் அறிந்தவர்.

இந்தியா பற்றிய கருத்து

இந்தியாவிலிருந்து இங்கிலாந்து திரும்பியபின் 1940-ம் வருஷம் மே மாதம் 'ட்ரைப்யூன்' பத்திரிகையில், இந்திய நிலைமை சம்பந்தமாகத் தாம் கொண்ட கருத்துகளை வெளியிட்டு அவர் ஒரு வியாசம் எழுதினார்: அதன் முக்கிய பகுதிகள் வருமாறு:—

"காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே பல விஷயங்களிலும் அபிப்பிராய பேதம் இருக்கிறது: ஆனால் ஒரு விஷயத்தில் மட்டும் ஏகோபித்திருக்கின்றனர். அதாவது தனது எதிர்கால அரசியலை ஒருவிதக் கட்டுப்பாடுமின்றி தயாரிக்கும் பூரண அதிகாரம் இந்தியாவுக்கே கொடுக்கப்படவேண்டும் என்பதே அது.

"இந்த நோக்கம் நிறைவேறுவதற்கு எவ்வளவு அளவுக்கு விசையை முடுக்கவேண்டும் என்பதில் பலர் பலவிதமான கருத்தைக்கூறுகின்றனர். நான் இந்தியாவில் இருந்தபோது, மிகவும் பெரிய ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பிக்கவேண்டும் எனச் சிலர் விரும்பினர்: காந்திஜி தலைமையின் கீழ் இருக்கும் பெரும்பான்மையோர், பிரிட்டிஷ் ஸர்க்காருடன் ஏதாவது ஒப்பந்தம் ஏற்படக்கூடுமாதலால், நிதானமாகச் செல்வதே நலம் என்றும் சொல்கின்றனர்.

"இதற்கப்புறம் நிலைமை எவ்வளவோ மாறியிருக்கிறது: நெருக்கடியும் அதிகமாகியிருக்கிறது. அவர்களுக்கு பிரிட்டிஷ்

தொழிலில் சிரத்தை



57 வயதான ஸர் ஜான் பிட்ஸ் கொராஸ்ட் என்ற பிரபலஸ்தர் லண்டனில் வாட்கோர்ட் ஸர்க்கார் தொழில் பயிற்சி ஆலையில் வேலை கற்றுக் கொள்கிறார். பிறகு விமான உற்பத்திஸ்தலத்தில் வேலை செய்ய அவர் எதிர்பார்க்கிறார்.

— தூதர் பேச்சு —

ஸர்க்காரிடம் சிறிதும் நம்பிக்கை இல்லை: ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பிக்க அவர்கள் தயாராகின்றனர்.

"ஸர்க்கார் ஆயிரக்கணக்கில் ஏற்கெனவே கைது செய்திருக்கின்றனர்: ஸத்யாக்ரஹம் ஆரம்பித்தவுடன் பூரண அடக்கு முறை கையாளப்படுவது நிச்சயம். தங்களது உரிமைகளுக்கான போராட்டத்தை ஆரம்பிக்கத் தீர்மானித்ததும் காங்கிரசுக்குள் பிளவு இருக்காது: இதன் விளைவிலிருந்து மகாத்மா பிரிட்டனைப் பாதுகாப்பார் என எதிர்பார்ப்பது பிசகு.

"ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே இருக்கும் வகுப்பு வேற்றுமைதான் கடினமானது என்பதில் சந்தேகம் இல்லை. வகுப்பு வாதிகளின் நோக்கம் பூர்த்தியாவதற்காகவே மதச் சண்டைகள் கிளப்பப்பட்டு, விஷயம் மிகைப்படுத்தப்படுவது நிலைமையை மேலும் மோசமாக்குகிறது. முதலாளிகளாகவும் நிலச்சுவான்தார்களாகவும் இருக்கும் பணக்கார முஸ்லிம்கள் தான் முஸ்லிம் லீக்கில் அதிகாரம் வஹிக்கின்றனர்: முஸ்லிம் பொது மக்களுக்கும் இவர்களுக்கும் உள்ள சிரத்தை வேறுபட்டதாகும். மத உத்வேகத்தை எழுப்பி, இவர்கள் இந்தியாவில் இருக்கும் 8 கோடி முஸ்லிம்களைத் தங்கள் பக்கம் ஆகர்ஷிக்கின்றனர். மறுபடியும் முஸ்லிம் ஆதிக்கம் இந்தியாவில் ஏற்பட அவர்கள் எதிர் பார்க்கின்றனர்: இதில் தான் அவர்களுக்கு ஆசை: ஆனால் இது சாத்தியமில்லை என்பது பற்றி இரண்டு தீமைகளுள் குறைந்ததான பிரிட்டிஷ் ஆட்சியே அங்கு நீடித்திருக்க அவர்கள் விரும்புகின்றனர்.

"அவர்கள் பயப்படும் மற்றொரு தீமை வயது வந்தவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய ஜனநாயகத்தில். தொழிலாளர்களும் விவசாயிகளும் இந்திய அதிகாரத்தை மேற் கொள்வார்கள் என்பதே. பிரிட்டிஷ் ஆட்சியை விட, இதற்கே அவர்கள் அதிகம் பயப்படுகின்றனர். இந்த காரணத்தால் தான் அவர்கள் மத விஷயமாக மைனாரிட்டிகளுக்கு காங்கிரஸ் எவ்வித பாதுகாப்பு அளிக்க உறுதி அளித்த போதிலும் அதன் கோரிக்கையை ஆதரிக்க மறுத்தனர்: நான் இந்தியாவில் இருந்த போதே பிரஸ்தாபத்திலிருந்த ஒரு விஷயத்தை அவர்கள் இப்போதும் வற்புறுத்துகின்றனர். அது சாத்தியமில்லை என்று அப்போதே பலர் முடிவு செய்து விட்டனர்: அயர்லாந்து போல் இந்தியாவையும் பங்கு போட வேண்டும் என்பதே அவ்விஷயம். இரண்டு சுதந்திர முஸ்லிம் ஸர்க்கார்கள் இருக்க வேண்டும் எனக் கூறப்படுகிறது: ஒன்று கராச்சியை துறைமுகமாகக் கொண்ட வடமேற்கு பாகம்: மற்றொன்று கல்கத்தாவை துறைமுகமாகக் கொண்ட வடகிழக்குப் பிரதேசம். இவ்விரண்டு பாகங்களிலும் மைனாரிட்டி ஹிந்துக்கள் தான் அதிகம். இந்த புது கோரிக்கை தான் சமரசம் ஏற்படுவதற்குத் தடையாயிருக்கிறது.

"இந்தியா தனக்குகந்த அரசியலையும் ஸர்க்காரையும் நிர்ணயித்துக் கொள்ளும் உரிமையை பிரிட்டிஷ் ஸர்க்கார் ஒப்புக்கொள்ளுமா என்பதுதான் முக்கிய பிரச்னை. இதுவரை ஒப்புக்கொள்ளவில்லை. எட்டு கோடி முஸ்லிம்கள் பயப்படுகிறார்கள் என்றோ, இந்தியத் தொழிலாளர்களும் விவசாயிகளும் தங்களது தேசத்தின் அதிகாரத்தை ஸ்வீகரிப்பதைத் தடுக்க புதிய திட்டத்தைத் தயாரித்திருக்கிறார்கள் என்றோ, 25 கோடி ஹிந்துக்களுக்கு ஒற்றுமைப்பட்ட இந்தியாவில் சுய ஆட்சியை நாம் மறுக்கலாமா என்பதே கேள்வி.

"உண்மை இதுதான். வகுப்பு வாதத்தைக் கிளப்பாமல், ஒரு கக்ஷித் திட்டத்தை அனுசரிக்கும்படி இந்த 8 கோடி முஸ்லிம்களை கேட்டுக் கொண்டால், அவர்களில் பெரும்பாலோர் காங்கிரஸ் திட்டத்தைத்தான் பின்பற்றுவார்கள்: இப்போது பலர் இவ்வாறு தான் செய்கின்றனர். காங்கிரஸ் மஹாசபைத் தலைவர் ஒரு முஸ்லிம் தான்: முஸ்லிம் லீக்கை ஆக்ஷேபித்து காங்கிரஸ் கொள்கையை பல முஸ்லிம் சங்கங்கள் ஆதரிக்கின்றன. இவர்களது மகாநாடு டில்லியில் நடக்கிறது.

"ஹிந்துக்களும் முஸ்லிம்களும் தங்களது தகராறுகளைத் தீர்த்து கொண்ட பின்னர்தான் ஏதாவது செய்ய முடியும் என்கிறது பிரிட்டிஷ் ஸர்க்கார். இதனால் இந்தியா சுயவாட்சி அடைவதற்கு பிற்போக்கான முஸ்லிம் லீக்காரர்கள் நிரந்தர தடையை விதிக்க முடிகிறது. இது, தான் வாழாவிட்டாலும் பிறர் வாழ விடுவதையும் மறுப்பதற்கு சமமாகும்: இதை நாம் அங்கீகரிக்கக்கூடாது. முஸ்லிம் லீக் தலைவர்கள் கூறுவது இது தான்:—வழக்கம்போல் நாங்கள் ஆள் முடியாவிட்டால், பிரிட்டிஷ் ஆட்சி நீடிப்பதையே நாங்கள் வரவேற்போம். எங்கள் தொகைக்கேற்ப அவர்கள் எங்களுக்கு சலுகை கொடுத்து வருகின்றனர்: பொதுஜன ஆட்சி ஏற்படுவதைவிட இதுவே எங்களுக்குமேல். அந்த ஆட்சி ஏற்பட்டுவிட்டால் எங்கள் நிலைமைக்கு ஆபத்தேற்பட்டு எங்கள் வகுப்பும் மறையும்.

"இந்தமனோபாவத்தைத்தான், பிரிட்டிஷ் சர்க்கார் அறிந்தோ அறியாமலோ, தீவிரமாக வளர்த்து வருகிறது; மதச் சண்டைகளும் கஷ்டங்களும் உண்மையிலேயே இருக்கின்றன: மேலே குறிப்பிடப்பட்ட பொருளாதார அம்சங்கள் இராவிட்டால், விட்டுக் கொடுத்து சமரசம் ஏற்படுத்த முடியும். சுதந்திர இந்தியாவில் ஹிந்து—முஸ்லிம் சண்டை தோன்றலாம். இந்தியா சுதந்திரம் அடைந்துவிட்டால், ராஜீயத்தில் வகுப்புவாதம் தலைகாட்டுமே தவிர மதப் பூசல்கள் மறைந்து விடும் என்பது என் நம்பிக்கை. எப்படியாயினும் அதிகாரப் போட்டி வலுக்கும். சுதந்திர ஜனநாயக முறை கொண்ட நாட்டில் இந்தப் போட்டியும் அதி அவசியமானதே. சண்டை உள்நாட்டுக் கலகமாக மாறாதவிதத்தில் உதவுவதற்கான நல்ல ஜனநாயக முறையை நிறுவ நாம் இந்தியர்களுக்கு சகாயம் செய்யலாம்: அவர்களுக்கு சுதந்திரம் அளிப்பதற்கு அது தடை என்று நாம் மறக்கக்கூடாது"

புது டில்லியில் சமீபத்தில் அகில மத மகாநாடு நடந்தது. ஸர் சுல்தான் ஆமத் தலைமை வகித்தார். அவர் பக்கத்தில் சமஷ்டி நீதிபதி ஸர் ஜாபருல்லாவும் ஸர் மகம்மத் யாகுப்பும் உட்கார்ந்திருக்கின்றனர்

காரியம் நடக்குமா?

இவ்வாறு உள்ளதை உள்ளபடிச் சொல்லிவிட்டார் ஸர் ஸ்டேபோர்ட்: வாய்ப்பேச்சுதானா அல்லது காரியத்தை நிறைவேற்ற சக்தி யுண்டா என்பதை சோதிக்கும் தருணமும் வந்து விட்டது. ஸர் க்ரிப்ஸ் இந்தியாவுக்கு வந்து விட்டார்: புது டில்லி வந்தடைந்திருக்கிறார்: ராஜப்பிரதிநிதியையும் இந்திய சேனாதிபதியையும் கண்டு பேசியாகிவிட்டது. மாகாணக் கவர்னர்களும் பார்க்கக் கூடிவிட்டனர். இந்தியத் தலைவர்களைப் பார்த்துப் பேசவும் நாள் குறிப்பிடப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் மஹாசபைத் தலைவரை அவசரம் அவசரமாக ஸர் க்ரிப்ஸ் அழைத்திருக்கிறார்: இருவரும் 25-ம்தேதி சம்பாஷித்தனர்.

முன்பு வந்தவர்

மிஸ்டர் சர்ச்சிலின் விசேஷ தூதராக க்ரிப்ஸ் விஜயம் செய்திருக்கிறார். இந்தியாவில் பழைய சம்பிரதாயங்களை எப்போதும் புரட்டிப் பார்ப்பது வழக்கம். ஸர் க்ரிப்ஸ் விஜயம் பற்றியும் இதே உணர்ச்சி தோன்றுவது சகஜம்தானே! 25 வருஷங்களுக்குமுன்னர், இதே காரியமாக இந்தியாவுக்கு வேறு ஒருவர் வந்து சேர்ந்தார். இந்திய ராஜீய அபிலாஷையை நிறைவேற்றி வைக்கவே அவர் அப்போது வந்தார்: அப்போது வந்தவர் இந்தியா மந்திரியான மிஸ்டர் மாண்டேகு. மிஸ்டர் மாண்டேகு ராஜப்பிரதிநிதி செம்ஸ்போர்ட் பிரபுவுடன் இந்தியா முழுதும் சுற்றியலைந்தார்: அநேகரைப் போய்ப்பார்த்து விவாதித்தார்: நேரில் நிலைமையைக் கண்டறிய பெரிதும் பாடு பட்டார்: இது காரணமாகத்தான் மாண்டேகு - செம்ஸ்போர்ட் ரிபோர்ட் பிறந்தது: 1919-ம் வருஷத்திய இந்தியா கவர்ன்மெண்ட் சட்டமும் ஏற்பட்டது.

மிஸ்டர் மாண்டேகு

இந்த விஜயத்தைப்பற்றி மிஸ்டர் மாண்டேகு மரணத்திற்கப்புறம் அவரது மனைவி எழுதிய சில வாக்கியங்கள் குறிப்பிடத்தக்கவை; அவரது இந்திய தினசரிக் குறிப்புகளைப் பிரசுரித்தபோது எழுதியவை அவை. "இந்தியாவின் க்ஷேமாபிவிருத்தியே அவர் வாழ்க்கையை முக்கியமாகக் கவர்ந்திருந்தது. இந்தியா மந்திரி பதவியைத் தமக்குத் தர வேண்டும் என்ற நிபந்தனையுடன் தான் அவர் லாயிட் ஜார்ஜ் மந்திரி சபையில்

(28-ம் பக்கம் பார்க்க)

உபயோகமுள்ள சில வைத்தியக் குறிப்புகள்

வைத்தியரத்ன பண்டிட் எம். துரைசாமி அய்யங்கார்

இந்தக் கட்டுரையில் வைத்தியரத்ன பண்டிட் எம். துரைசாமி அய்யங்கார் ஒவ்வொருவரும் அறிந்துகொள்ள வேண்டிய சில முக்கிய விஷயங்களைக் குறிப்பிட்டிருக்கிறார். அவரவர் தேகாரோக்யத்துடன் இருப்பதற்கும், அவ்வப்போது ஏற்படும் நோயைப் பரிஹரிப்பதற்கும் ஸ்ரீமான் துரைசாமி அய்யங்கார் வழிகளை எடுத்துக் காட்டியிருக்கிறார்.

வாலிபவயதிற்காணும் வியாதிகள்:—மனிதர்களுக்கு நடுப்பிராயத்தில் சாமானியமாய் சம்பவிக்கக் கூடிய நோய்கள் புப்புஸங்கள் என்கிற ச்வாஸாசயங்களையும், இருதயத்தையும், வ்ருக்கங்கள் என்கிற மூத்திர குண்டிக் காய்களையும் பற்றியவையாயிருக்கும்.

தேஹத்தின் எடை:—முழுச் சரீரத்தினுடையவும் எடையில் சற்றேறக் குறைய ஆறில் ஒரு பாகம் ரத்தத்தின் கனமாகும்.

வருஷந்தோறும் ஒருவன் உண்ணும் உணவு:-ஆரோக்கிய நிலைமையிலுள்ள ஒரு மனிதன் ஒரு வருஷத்தில் கனமாகவும் திரவமாகவும் மொத்தத்தில் உட்கொள்ளும் உணவின் சராசரி அளவு சுமார் ஐயாயிரம் சேராகும். குழந்தைப் பருவத்திலும் வாலிபப் பருவத்திலும் உட்கொள்ளப்படுவது அதிகமாகவும், வெளியிடப்படுவது (மல-ஜலாதி ரூபமாய்) சிறிது குறைவாகவும் இருக்கும். கிழத்தனத்தில் இந்த நியமம் நேர்மாறுகிறது.

நாடி அசைவு:— அநேகம் ஆரோக்கியசாலிகளுடையவும் நோயாளிகளுடையவும், நாடி நடைகளை நெடு நாட்கள் கருத்துடன் பரிசோதித்து வருபவருக்கே நாடிய சைவுகளின் பேதங்களும் அப்பேதங்களால் ஆரோக்கிய-அநாரோக்கிய நிலைமைகளின் பலவேறு தன்மைகளும் நன்கு விளங்கும். ஆயுர்வேதத்தில் நாடியின் நிலை மாறுபாடுகளைக் கொண்டு ரோகங்களை யறியும் உபாயங்களை கி. மு. 300-ம் நூற்றுண்டில் முதலில் கூறிய அறிஞர் கபிலர் என்பவர். ரோமாபுரியில் இரண்டாம் நூற்றுண்டில் மார்கஸ் ஆரிலியஸ் என்கிற சக்கிரவர்த்திக்கு ஆஸ்தான வைத்தியராயிருந்த காலென் என்பவர் நாடி நடைகளைக் கொண்டு வியாதிகளைப் பரிசீலனை செய்யலாம் என்று மேனுட்டினருக்கு அறிவித்தவராவர். வியாதிகளைப் பரீக்ஷித்தறிய நாடி நடையின் வெவ்வேறு தன்மைகளைப்பற்றிய அறிவு இருப்பது வைத்தியர்களுக்கு அத்யாவச்யம்.

அதிக ரத்த ஓட்டம்:—ரத்தக் குழாய்களில் அதிக ரத்தம் நிரம்பி யோடுவதானது சோம்பல், உறக்கம், மயக்கம். காங்கும்போது குறட்டை, அதிக கனவு காணல் ஆகிய துர்க்குணங்களுக்குக் காரணமாம். ஸ்தூல தேஹிகள் என்கிற மேதோ குணமுள்ளவர்களுக்கு ரத்தம் உடலில் அதிகமாயிருக்குமென்று நினைத்துவிடக்கூடாது. உண்மையில் அவர்கள் ரத்தக் குறைவினுலேயே வருந்த நேரிடுவது வழக்கம்.

ஸ்தூல தேஹம் அல்லது மேதோரோகம்:—ஒல்லியான மனிதரைக் காட்டிலும் மேதோதோஷம் அதிகரித்து அல்லது ஸ்தூல தேஹம் படைத்தவர் அநேக வியாதிகளுக்கு எளிதாக வசப்படுகிறுர்கள்; அவர்கள் மெல்லிய தேஹத்தினரினும் நோய்களைத் தாங்குவதில் பெரிதும் சக்தியற்றவராகவும் ஆகிறுர்கள்.

மேதோரோக (ஸ்தூல தேஹ) சிகித்ஸை:—சுறு சுறுப்பாயிருந்து வருவது, தகுந்த தேஹப் பயிற்சிகளைச் செய்வது, பகலில் தூங்காமலிருப்பது முதலியவற்றைக் கருத்துடன் நிறைவேற்றுவதோடு, 'ஸித்த யோக ரஸம்' என்னும் மாத்திரையையும் சில காலம் தொடர்ந்து உட்கொண்டு வருவது மிகவும் நலம்.

நித்திரை:—நடுப் பிராயத்திலவர் இராப்பகலில் மூன்றில் ஒரு பாகம் நித்திரை செய்வது அவசியம்; இவ்வயதினர் ஸாதாரணமாய் தினத்திற்கு எட்டு மணி நேரத்திற்கு அதிகம் தூங்குவதும் உசிதமல்ல. மூப்பு வந்தவர் தேஹத்தில் முழு ஆஹாரச்சத்தும் சுறு சுறுப்புடன், தேஹ தாதுக்களைப் போஷிக்க வியலாமற் போவது இயல்பாகையால், அவர்கள் வாலிபரைவிட அதிக நேரம் நித்திரை செய்வது அவசியமாகும்.

நித்திரையின் உபயோகம்:—தேஹத்திலுள்ள நரம்பு மண்டலம் முழுமைக்கும் அமைதியையும் ஓய்வையும் அளித்து அதற்குச் சுகம்தருவது நித்திரையே. மேலும் அது தேஹ தாதுக்களில் ஏற்படும் கழிவுகளைச் சரிப்படுத்தவும் தாதுகளைப் போஷிக்கவும் இன்றியமையாதது போஷணை முதலியது தூங்கும்போது தான் நடைபெறுகின்றதில்லை; ஆனல் அதெல்லாம் நன்ருகச் சிறந்த முறையில் நிறைவேற நித்திரை அனுகூலமானது.

நித்திரையின்மையை நிவ்ருத்திக்க:—போஜனம்செய்தவுடன் படுத்துறங்க முயலக்கூடாது. மாலை நேரத்தில் மன்க்கவலையெதற்கும் இடந்தராமல் குளிர்ந்த காற்றில் வெளியில் வியாயாமம் செய்வதும் உல்லாஸமாகக் கூடுமான தூரம் உலாவுவதும் நலம். இதெல்லாம் பயனளிக்காவிடில் ஏழெட்டு நெல்லெடை மௌக்திக பஸ்மத்தை அரை அவ்ன்ஸ் பிராஹ்மீ ரஸாயனத்துடன் தினத்துக்கு நாலைந்து முறை உட்கொண்டு வந்தால் நரம்பு மண்டலத்திலும் மூளையிலும் ஏற்பட்டுள்ள அதிர்ச்சியும் அழற்சியும் தணிவடைந்து இயற்கை நித்திரையுண்டாகும்.

இருதய வேலை:— இருதய கோசம் என்கிற ரத்தாசயம் ஒரு விநாடி ஒரு தடவைக்குமேல் பலமாகத் துடித்துக் கொண்டிருக்கும் தசை நார்களாலான ஓர் யந்திரம். அதுகூட ஒரு முறை துடித்து மறு முறை துடிப்பதற்குள் ஒரு சிறிது ஓய்வு எடுத்துக் கொள்கிறது. அவ்வோய்வு சொற்பமென்ருலும் இருபத்தி நான்கு மணி நேரத்தில் அவ்வோய்வுகளைக் கணக்கிட்டால் அது பெரிதாகவே தோன்றும்.

இருதயத் தளர்ச்சி:—இருதயம் பலஹீனப்பட்டுத் தளர்வடைவதற்கு காரணங்கள் அநேகம். பொதுவாக இருதயம் பலஹீனப்பட்டவர்கள் ஆயுஷ்ய ரஸாயனம், ச்யவனப் பிராசம் இவ்விரண்டில் எதையேனும் நீடித்து உட்கொண்டு வருவதால் இருதய பலத்தைப் பெற்று, உடல் சுறுசுறுப்பையும் அடைவார்கள்.

ரத்தக் கட்டிகள்:—தகாத உணவுகள், மிதமிஞ்சிய தேஹ-மனே வேலைகள், மனே வேதனை, அசுத்த நீர், வெய்யில் முதலியவற்ருல் ரத்தம் தோஷமடைந்து ரத்தக் கட்டிகளும், மேஹ பிடகைகள் என்கிற ராஜ பிளவை முதலியவை உண்டாகின்றன. ரத்தக் கட்டிகளும் சீழ்க் கட்டிகளும் ஸாதாரணமாய் ஒன்றன் பின்னென்ருகப் பல அல்லது ஒரே தடவையில் பலதோன்றும்; மேஹ பிடகை (பிரமேஹப் பிளவை) ஒற்றையாகத்தான் கிளம்புவது வழக்கம்.

கட்டிகளுக்குப் பரிஹாரம்:—காரணம் அறிய முடியாமல் கட்டிகள் ஒன்றன் பின் ஒன்ருக உண்டாகிக்கொண்டே இருந்தால் வேறோர் ஊருக்கு வாஸத்தை மாற்றுவதைப் போல் அனுகூலம்தருவது வேறென்றில்லை. வேறிடத்திற்குப் போக முடியாதவர்கள் லோஹ ரஸாயனத்தையும் சாரிபாத்யரிஷ்டம் என்னும் திராவகத்தையும் கலந்து உட்கொண்டு வருவது அடுத்தபடியாக ஸௌக்கியமுண்டு பண்ணும் சிறந்த மருந்து.

பெரியகட்டிகளைஉடைப்பது:-ஆளிவிதைப் போட்டலிகை (போல்டீஸ்) முதலியதைப் போட்டு பழுக்கச் செய்து காலவளவில் கட்டிகளை உடையச் செய்வதே சரியான பரிஹாரமாகும்; கத்தியினுல் அறுத்துச் சஸ்திர சிகித்ஸை செய்வது அவ்வளவு சிறந்த முறையாகாது. சஸ்திர சிகித்ஸை செய்த பின்பு அவ்வித கட்டிகள் வேறிடங்களில் கிளம்பும்; போட்டலிகை முதலியதால் தானே பழுத்து உடையும் கட்டிகள் முழு விஷத்தையும் வெளியிடுவதால் இவ்விரண்டாம் முறையினுல் வேறிடங்களில் பெரும்பாலும் புதிய கட்டிகள் உண்டாவதில்லை.

ஸிரோத்பாதம் (காரி ரத்தக் குழாய்களின் அதைப்பு):—சிலருக்குக் கால்களில் காரிரத்தக் குழாய்கள் மிகவும் பருத்துத் தடித்துப்போகும். இது ஆயுர்வேதத்தில் ஸிரோத்பாதம் என்றும், ஆங்கிலத்தில் வெரிகோஸி வைன் என்றும் வழக்கப்படும். அதிக குழந்தைகளைப் பெற்றெடுத்தத் தாய்மார்களுக்கு இது ஏற்படுவது வழக்கம். அதிக பளுவான சுமைகளைச் சுமப்பவர்களுக்கும், கனமான வண்டி முதலியதை இழுப்பவர்களுக்கும் இவ்விதம் கால் ரத்தக்

(18-ம் பக்கம் பார்க்க)

காந்தி ஜோஸியர்

ஒரு வருஷப் பலன் மாதவாரி ரூ. 3.
ஆருடம் 5 கேள்விகளுக்குப் பதில் ரூ. 1.
வி. பி. செலவு அணு 5.
ஜனனகால விவரம் or எழுதும்நேரம். சுமார் வயது தேவை.
ஹநுமான் ஆச்ரமம், திருத்தணி S.I.

பாலர் நட்பு

சிறு கதை - "வாணீசரணன்"

சிறுவர் உள்ளத்தை இக் கதை வெளிப்படுத்துகிறது. இந்திராவும் மாலதியும் இணைபிரியாத சிநேகிதிகள். எந்தச்காரியத்தையும் இருவரும் சேர்ந்துதான் செய்வார்கள். இதில் ஒருத்தி கெட்டிக்காரி. மற்ருெருத்தி அவ்வளவு இல்லை. இருவருக்கும் இதனுல் பொருமை ஏற்படுகிறதா? சிநேக பான்மை குறையாமல் இருக்கிறதா? கதையில் கருத்தைக்காணலாம்.

வகுப்பில் உபாத்யாயருடைய கவனத்தைக் கவர்ந்த குழந்தைகள் இரண்டு. படிப்பில் முதன்மையாக இருந்ததற்காக இந்திராவும், கடைசியாக இருந்தற்காக மாலதியும் முக்கிய ஸ்தானம் வகித்தார்கள்.

அவர்கள் இருவருக்கும் பிராணஸ்நேகிதம். அவர்களுடைய வீடுகள் அடுத்து அடுத்து இருந்ததால் அவர்கள் எப்பொழுதும் ஒன்ருகவே தான் இருப்பார்கள். சனி-ஞாயிறு விடுமுறை வந்து விட்டால் இருவரையும் கண்டு பிடிக்கவே முடியாது. காயும் வெய்யில் முழுதும் அவர்கள் தலைமேல் தான். ஊர் முழுதும் சுற்றி அலைந்து விட்டு, முகம் கருத்து, உடல் இளைத்து, சட்டைகளை அழுக்காக்கிக் கொண்டு சாயங்காலமாக வீட்டிற்கு வந்து நிற்பார்கள். அன்று அவர்களுக்கு நல்ல 'அர்ச்சனை' கிடைக்கும். ஒருத்திக்குக் கொடுக்கும் தின்பண்டத்தை மற்றவளுக்குக் கொடுக்காமல் தின்ன அவர்களில் ஒருவருக்கும் மனம் வராது. பள்ளிக்கூடம் போகும் வரையில் அதைப் பத்திரமாக வைத்திருந்து, போகும் வழியில் இரண்டு பேருமாகத் தின்று கொண்டே போவார்கள். அவர்களுடைய குழந்தையுள்ளத்திற்கு இந்த உலகமே லக்ஷியமில்லை. தங்களுடைய ஏற்றத் தாழ்வுகளை களங்கமற்ற அவர்களுடைய அறிவு ஆராயவில்லை. இந்திரா இல்லாவிட்டால் மாலதிக்கு ஒன்றுமே செய்யத் தோன்ருது. மாலதி இல்லாவிட்டால் இந்திராவுக்கும் அப்படியே! ஏதாவது ஒரு சிறிய காரியம் செய்வதானுல் கூட அவர்கள் இருவரும் ஒன்ருய் உட்கார்ந்து, இரண்டு பெரிய சேனுபதிகள் ஒரு ராஜ்யத்தைப் பிடிப்பதற்குத் திட்டம் போடுவதுபோல யோசனை செய்வார்கள். பெரிய பெரிய மனக் கோட்டைகள் கட்டுவார்கள். அவர்களுடைய கவலையற்ற காலம் இப்படியே போய்க் கொண்டிருந்தது.

* * * *

ஒரு நாள் சாயங்காலம் மாலதியின் 'ப்ரைவேட்' உபாத்தியாயர் அவளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துக்கொண்டிருந்தார். அப்பொழுது இந்திரா அங்கு வந்தாள். மாலதி ஒரு கூட்டல் கணக்கைச் செய்யத் தெரியாமல் விழித்துக்கொண்டிருந்தாள். இந்திரா ரகஸியமாக விடையைச் சொல்லிக் கொடுத்தாள். உபாத்தியாயர் இதைக் கவனித்துவிட்டுப் பேசாமல் இருந்தார். மாலதி விடையைச் சரியாகப் போட்டுக்கொண்டு வந்து உபாத்தியாயரிடம் காட்டினுள். "சரி, இதை எப்படிப் போட்டாய்?" என்று அவர் மாலதியைக் கேட்டார். அவள் பதில் சொல்லத் தெரியாமல் இந்திராவைப் பார்த்தாள். அவள் மாலதியைப் பார்த்து விட்டு உபாத்தியாயரையும் பார்த்து ஒரு குறும்புச் சிரிப்பு சிரித்தாள்.

"அவள் தானே சொல்லிக் கொடுத்தாள்?" என்று அவர் மறுபடியும் கேட்டார். மாலதி, "ஆமாம்" என்று தலையை ஆட்டினுள். அவர் இந்திராவைப் பார்த்து, "உன் பெயர் என்ன அம்மா?" என்ருர்.

"என் பெயர் இந்திரா!" என்ருள் அவள். அவளுடைய கணீரென்ற குரலும் பளிச் சென்று அவள் பதில் சொன்ன முறையும் அவரை வசீகரித்தன.

"ஒருவர் கணக்கை இன்னெருவர் போடலாமா?"

"கூடாது ஸார்"

"பின் நீ ஏன் அவளுக்குச் சொல்லிக் கொடுத்தாய்?"

"அவளுக்கு அந்தக் கணக்கைச் செய்யத் தெரியலெ; பாவமா இருந்தது; அதனுலெ தான் சொல்லிக் கொடுத்தேன் ஸார்."

"இனிமேல் அப்படியெல்லாம் சொல்லிக் கொடுக்கப்படாது; தெரிஞ்சுதா?"

"சொல்லிக் கொடுக்காமெப் போனு அவளுக்குக் கணக்கு எப்படி ஸார் வரும்?"

"நான் சொல்லிக் கொடுப்பேன்."

"சரி ஸார்."

"உனக்கு என்ன பாடம் நன்ருத் தெரியும்?"

"எல்லாப் பாடமும்தான்!"

"கணக்கிலெ உனக்கு எத்தனை மார்க்கு?"

"பத்துக்குப் பத்து!"

"மாலதிக்கு?"

"பாவம்! அவளுக்கு ரண்டே ரண்டு தான்."

"இங்கிலீஷிலே?"

"எனக்கு இருவதுக்குப் பதினெட்டு; அவளுக்கு மூணு; டிக்டேஷன்லெ எனக்கு ஒரு தப்புக்கூட இல்லை; அவளுக்கு இருவத்தி மூணு தப்பு."

"உனக்கு இன்னும் என்ன தெரியும்?"

"தமிழ் தெரியும். அதிலெ எனக்கு நூறுக்கு நூறு மார்க்!"

"மாலதிக்கு?"

"நூறுக்குப் பன்னன்டு."

"அப்பரம்?"

"எனக்கு ஹிந்தியிலே பேசத் தெரியும்."

"ஓஹோ! மாலதியைப் பார்த்து, 'உன் பெயர் என்ன' என்று ஹிந்தியிலெ கேளு!"

"மாலதி, துமாரி நாம் க்யா?"

மாலதி சிரித்தாள். "இதற்கு நான் என்ன ஸார் பதில் சொல்லறது?"

"இந்திரா, நீயே 'ஆன்ஸர்' சொல்லிக் கொடு."

"மேரீ நாம் மாலதி ஹை!"

மாலதி மறுபடியும்சிரித்தாள்.

"உனக்கு ஹிந்தி யார் சொல்லிக் கொடுத்தா?"

"எங்க அப்பா கல்கத்தாவிலே வேலையா இருந்தா ஸார்; அப்போ நானும் அவரோட இருந்தேன். அங்கெ எனக்கு ஹிந்தி தெரிஞ்சது; எனக்கு ஓத்தரும் சொல்லித்தரவே யில்லை."

"அப்படியா? உனக்கு வேறே என்ன தெரியும்?"

"கன்னடம் தெரியும்"?

"அது எப்படித் தெரிஞ்சுது"?

"எங்க வீட்டிலெ எல்லாரும் கன்னடத்திலெதான் பேசுவோம். அதனுலே தெரிஞ்சுது?"

"இன்னம் ஏதாவது தெரியுமா?"

"பள்ளிக் கூடத்துப் பாட்டு, டான்ஸ், எல்லாம் தெரியும்; அதெல்லாம் மாலதிக்குக் கூடத் தெரியும்"

"சரி. இப்போ மாலதியைச் சில கேள்வி கேழ்க்கிறேன்; அவளுக்கு 'ஆன்ஸர்' தெரியாமப் போனு நீ சொல்லு."

"ம்......"

அன்று அவர் கேட்ட கேள்விகளில் பலவற்றிற்கு மாலதியால் பதில் சொல்ல முடியவில்லை. இந்திரா சரியாக பதில் சொல்லி வந்தாள். அப்பொழுதெல்லாம் அவர் இந்திராவைப் புகழ்ந்தார். அதைக் கேட்டு மாலதி இந்திராவை ஒரு மாதிரியாகப் பார்த்தாள். உபாத்தியார் புதிய பாடம் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தார் "இந்தப் பாடம் எனக்குத் தெரியும் ஸார்; இதை நான் முன்னுடியே படிச்சு வைச்சிருக்கேன்" என்று மேஜையின் மேல் சாய்ந்தபடியே இந்திரா சொன்னுள். "நீ ரொம்ப கெட்டிக்காரி; அதனுலெ எல்லாப் பாடத்தையும் முன்னுடியே படிச்சு வைச்சிருக்கே; மாலதி அப்படி இல்லையேல் அவள் மக்கு. இனிமேல் தான் இந்த பாடத்தை யெல்லாம் சொல்லிக் கொடுக்கணும்" என்று அவர் பதில் சொன்னுர், அப்பொழுது மாலதி அவரை வருத்தமும் பரிதாபமும் கலந்த பார்வையில் பார்த்தாள்.

* * * *

அன்றைய பாடம் முடிந்தது. உபாத்தியாயர் போன பின், "நீ ஏன் இதை யெல்லாம் வாத்தியார் கிட்டெ சொன்னெ?" என்று மாலதி இந்திராவைக் கேட்டாள்.

"அவர் கேழ்க்கிறபோது நான் பேசாமெ இருந்தா என்னை 'மக்கு'ன்னு நினைச்சுக்கமாட்டாரா? அதுக்காகத்தான் சொன்னேன்!"

"எனக்கு மார்க்கை யெல்லாம் நிறையச் சொல்றது தானே?"

"ஐயோ! பொய்யா சொல்றது? நேத்திக்கி ஸ்கூல்லெ நம்ம டீச்சர் என்ன சொன்னு? 'பொய் சொல்லறவா வாயிலெ புண் வரும்'னு சொல்லையா? நான் பொய்யே சொல்ல மாட்டேம்மா?"

"சரி சரி: நாம் இனிமே விளையாடப் போகலாம் வா." இருவரும் ஒரே ஓட்டமாக மேல் மாடிக்கு ஓடினுர்கள்.

அன்று முதல் ஒவ்வொரு நாளும் மாலதி படிக்கும் பொழுது இந்திராவும் அங்கு வந்து விடுவாள். இது மாலதிக்குப் பிடிக்கவில்லை. உபாத்தியாயர் அடிக்கடி, "இந்திரா எவ்வளவு கெட்டிக்காரியா இருக்கா பார். உனக்கு ஒண்ணுமே தெரியல்லையே! நீ சுத்த அசடு" என்று சொல்லுவார். வீட்டுக் கணக்குகளை அவளே செய்து சரியான விடை எழுதி வைத்திருந்தால்கூட "இதை இந்திரா சொல்லிக் கொடுத்தாளா?" என்று கேட்பார். அவள் எவ்வளவு சொன்னுலும் அவர் நம்பமாட்டார். இதனுலெல்லாம் அவளுக்கு இந்திராவின் மேல் இருந்து வந்த அன்பு சிறிது சிறிதாகக் குறைந்தது. அவள்

பல முறை இந்திராவிடம் "நான் பாடம் படிக்கிறபோது நீ என் வீட்டிற்கு வராதே! படிச்சானவுடனே நானே உன் வீட்டிற்கு வரேன்; அப்பரம் விளையாடப் போகலாம்" என்று சொல்லிப் பார்த்தாள். இந்திரா கேட்கவில்லை. தன் திறமை முழுவதையும் உபாத்தியாயரிடம் காட்டி நல்ல பெயர் வாங்க வேண்டும் என்பது அவள் ஆசை. ஆகையினால் அவள் ஒவ்வொரு நாளும் அவருடைய வருகைக்கு மாலதியை விட அதிக ஆவலுடன் காத்திருப்பாள். இது மாலதியின் விகல்ப எண்ணத்தை வளர்த்தது.

* * * *

ஒரு சனிக்கிழமை காலை. மாலதி அப்பொழுதுதான் படுக்கையை விட்டு எழுந்து பல் தேய்க்கப் போயிருந்தாள். இந்திரா தெருவில் நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தாள். உபாத்தியாயர் தெருக் கோடியில் வரும்பொழுதே அவள் பார்த்துவிட்டாள். அவர் மாலதி வீட்டருகில் வந்தவுடன் இந்திரா ஓடிப் போய் அவர் கையைப் பிடித்துக்கொண்டு உள்ளே நுழைந்தாள். "போய் மாலதியைக் கூப்பிட்டுக் கொண்டு வா" என்றார் உபாத்தியாயர். இந்திரா அவளைத் தேடிக்கொண்டு உள்ளே ஓடினாள்.

"மாலதி, வாத்தியார் வந்திருக்கார்; உன்னைச் சீக்கிரம் வரச் சொல்றார்"

"சரிதான் போ. நான் காப்பி குடிச்சுட்டுத்தான் வருவேன்"

"இன்னும் நீ காபி குடிக்கல்லே? இத்தனை நேரம் நீ என்ன பண்ணினே? தூங்கினையா? ஐயையோ!" என்று வழக்கம்போல் இந்திரா விளையாட்டாகப் பரிகஸித்தாள்.

"இருந்தா இருக்கட்டும்; நான் உன்னை ஒண்ணும் கேழ்க்கல்லெ. நீ வீட்டுக்குப் போ; நான் பாடம் படிச்சப்புரம் வரேன்" என்று கடுகடுப்பாகச் சொன்னாள் மாலதி. இதைக் கேட்டவுடன் இந்திராவின் களங்கமற்ற முகத்தில் ஏமாற்றத்தின் நிழல் படர்ந்தது. ஒன்றும் பேசாமல் உபாத்தியாயர் இருந்த இடத்திற்குப் போய் விட்டாள். சிறிது நேரத்திற்கெல்லாம் மாலதியும் அங்கு வந்தாள்.

"இன்னைக்குக் காபி குடிக்க ஏன் இத்தனை நாழி?"

மாலதி பேசாமல் நின்றாள்.

"இவ்வளவு நேரம் தூங்கினாளாம் ஸார்."

"தூங்கவா செய்தே? அட தூங்கு மூஞ்சி!"

"நேத்திக்கி க்ளாஸிலே கூட அவள் தூங்கினா ஸார். டீசர் பெஞ்சி மேலே நிக்க வைச்சா; நின்னுண்டு கொஞ்ச நாழிக்கு அப்பரமும் தூங்கினா; டீசர் ஒரு அடி குடுத்தா; அப்பரம் தான் தூங்காமெ இருந்தாள்."

"அப்படியா மாலதி? நீ இப்படித் தூங்கினா உனக்குப் படிப்பு எங்கிருந்து வரும்?"

"அதனாலெதானே அவளுக்கு மார்க்கே வரதில்லெ ஸார்?"

"ஆமாம்."

"நான் தூங்கவே மாட்டேன்; காலம்பர அஞ்சு மணிக்கே எழுந்துடுவேன். காப்பி குடிச்சுட்டு இத்தனை நேரம் நான் படிச்சுண்டு இருந்தேன் ஸார்; கணக்கெல்லாம் கூடப்போட்டு வைச்சுட்டேன். எனக்குப் 'பிரைவேட்' வாத்தியாரே கிடையாது; எல்லாத்தையும் நானே தான் படிக்கணும். ஏதானும் தெரியாமெப்போனா அம்மா சொல்லித் தருவா; அதான்!"

இந்திராவின் இந்த வார்த்தைகள் மாலதிக்கு எரிச்சலூட்டின. ஆனால் உபாத்தியார் எதிரில் அவளைத்திட்டி வீட்டிற்கு அனுப்ப அவள் துணியவில்லை. ஆகையினால் இந்திராவை பார்த்து முகத்தைச் சுளித்துக் கொண்டாள்.

"நீயும் இந்திரா மாதிரி இருக்கணும். இல்லையானா பரிக்ஷையிலே ஸைபர் தான் வரும். இந்திரா மாத்திரம் மூணாவது க்ளாஸுக்கு போயிடுவா; நான் உங்க டீசர் கிட்டச் சொல்லி உன்னை முதல் க்ளாஸுக்கு அனுப்பிவிடச் சொல்லுவேன் தெரிஞ்சுதா?" என்று உபாத்தியாயர் மாலதியைப் பார்த்துக் கேட்டார்.

"போனப் போகட்டும் ஸார்" என்றாள் அவள் அலக்ஷியமாகத் தலையை ஆட்டிக்கொண்டே.

"அப்படீன்னா நீ படிக்க மாட்டையாக்கும்!"

"போங்கோ ஸார்; எல்லாம் படிப்பேன்!"

"சரி, நீ எட்டாம் வாய்ப்பாடு சொல்லு!"

"எட்டோணெட்டு; எட்ரண்டு பதினாலு!"

"இந்திரா, இது ரைட்டா?"

"இல்லை ஸார்: தப்பு."

"என்ன சொல்லணும்?"

"எட்ரண்டு பதினாறு?

"மாலதி, ஏன் வாய்ப்பாடு வாசிக்கல்லெ?"

"அவள் நேத்தியெல்லாம் சினிமாவுக்குப் போகணும்னு அழுதுண்டிருந்தா ஸார்; அதனாலே தான் வாசிக்கல்லெ!"

"ஒண்ணும் இல்லே ஸார்; இந்திரா பொய் சொல்லரா."

"நீங்களே பாருங்கோ ஸார்; நான் பொய் சொல்லுவேனா?"

"மாலதி, பின் நீ ஏன் வாய்ப்பாடு வாசிக்கல்லே?"

"படிச்சேன் ஸார்; அது வரல்லே!"

"படிச்சா வராமெ கூட இருக்குமா? இன்னும் நன்னாப் படிக்கணும்! நாளைக்கு ஒப்பிக்கிறையா?"

"ம்......"

"சரி, காக்கையைப் பார்த்து நரி என்ன சொல்லியது?"

"வடை கொண்டுவா! சாப்டரேன்" அப்படீன்னு சொல்லித்து ஸார்."

"தப்பு! இந்திரா, நீ சரியா சொல்லிக் கொடு."

"சிநேகிதனே நீ மிகவும் அழகாக இருக்கிறாய்; உன் பாட்டைக் கேழ்க்கவேண்டும் என்று எனக்கு ரொம்பவும் ஆசையாக இருக்கிறது; ஒரு பாட்டுப் பாடேன், என்று சொல்லிற்று ஸார்."

"மாலதீ, இது ஏன் உனக்குத் தெரியல்லே?"

"இந்தப் பாடத்தை யெல்லாம் அவள் படிக்கிறதே இல்லை ஸார்."

"சரி சரி; நீ ஒண்ணும் ஸாருக்குச் 'கோழ்ச் சொல்லிக் கொடுக்க வேண்டாம்; பேசாமெ உன் வீட்டுக்குப் போ! உன்னை யாரடி இங்கெ வரச்சொன்னா?"

இந்திராவுக்குக் கோபம் வந்து விட்டது. வருத்தத்தோடு, "நான் போயிட்டு வரேன் ஸார்" என்று சொல்லி விட்டுப் போய் விட்டாள்,

* * * *

அடுத்த நாள் பாடம் நடந்த பொழுது அங்கு இந்திரா வரவில்லை. "இன்னைக்கி இந்திரா ஏன் வரல்லெ?" என்று மாலதியைக் கேட்டார் உபாத்தியாயர். "நான் அவள் பேச்சு 'காய்' விட்டுட்டேன் ஸார்" என்றாள் மாலதி.

"ஏன்?"

"எனக்கு அவளைப் பிடிக்கல்லெ; அவள் நன்னாவே இல்லெ!"

"பொய் பொய்! அவள் தான் ரொம்ப அழகா இருக்காளே!

"அவள் கோழ் சொல்றாள் ஸார்!"

"இனிமேல் உனக்குக் கணக்கெல்லாம் யார் சொல்லித் தருவா? நீ எல்லாத்தையும் தப்பாப் போட்டு வைப்பையே!"

"நாளைக்குப் பழம் விட்டுடரேன் ஸார்"

அடுத்த நாள் பாடத்தின் போது இந்திரா மறுபடியும் வந்து விட்டாள்.

உபயோகமுள்ள சில வைத்தியக் குறிப்புகள்

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

குழாய்கள் மிகவும் பருத்துத் தடித்துப்போகும். அவை முறுக்கிக்கொண்டவைபோல் தோன்றும். நிறத்தில் கரு நீலமாகவும் காணப்படும்.

ஸிரோத்பாத பரிஹாரம்:—ஸித்தாஞ்ஜநம் என்னும் மருந்தை கனமான நீண்ட வஸ்திரத்தில் தடவி, அந்தத் துணியினால் காலை பாதம் முதல் முழங்கால் வரையில் அழுத்திக்கட்டிக் கொண்டு படுக்கையில் படுத்துக்கொண்டு, கால்களைக் கூடுமான உயரத்தில் தூக்கி வைத்துக்கொண்டு நித்திரை செய்விதுதான் இதைப் பரிஹரிக்கும் சிறந்த உபாயமாகும்.

சிரோவேதனை:—பெரும்பான்யோருக்கு மல பந்தத்தினாலும், யக்ருத் என்னும் கல்லீரல் நன்கு வேலை செய்யாமையாலும் தலை வலி ஏற்படும். இதற்கு ஹரிதக்யாதி லேஹியத்தை தினத்துக்கு இரண்டு மூன்று முறை உட்கொள்வது நலம். 'அர்த்தாவபேதம்' என்கிற ஒற்றைத் தலை நோய்க்கு பிராஹ்மீரஸாயனமும், சீதாம் சுரஸமும் சிறந்த ஔஷதங்களாகும்.

PARASURAM'S
சித்த எண்ணெய்.

இந்த எண்ணெயில் பதினெட்டு சித்தர்களால், அடி, நடு, முடி, என்ற முப்பு குரு பஸ்பம் சேர்ந்திருக்கிறபடியாலும், டி எண்ணெயிலுள்ள மூலிகைகளுக்கு நூறு மடங்கு சக்தி ஏற்பட்டு இருக்கிறபடியாலும் மூலிகை சத்துக்கள், ஆல்கலிஸ், ஆல்கலாய்ட்ஸ் (Alkalis, Alkaloids) களாக மாற்றப்பட்டு இருக்கின்றன.

குணமாகும் வியாதிகள்:- அஷ்ட குன்மங்கள், வாயு கட்டிகள், பாண்டு ரோகம், மூல வியாதி. சூலைகள், சர்ம ரோகம், மூத்திர தோஷம், பெரும்பாடு, தலை நோய், வயிற்றுப் புண், கீல்வாயு பிடிப்பு, பித்த பாண்டுகள், சொறி ரெணங்கள், ஸ்திரீகளுக்கு மாத விடாய்களில் உள்ள எவ்வகை தோஷங்களையும் நிவர்த்தி செய்யக் கூடியது. சிறு குழந்தைகளும் உட்கொள்ளலாம்.

விலை ½ அவுன்ஸ் ரூ. 1.

பரசுராம் சித்த ஔஷத ஆச்ரமம்
திருவண்ணாமலை.

(பிராஞ்சு: 59-A, லாயிட்ஸ் ரோட், ராயப்பேட்டை மதராஸ்)

ஏஜண்டுகள்:—
மதராஸ்: அப்பா & கம்பெனி.
மதுரை: டி. என். சொக்கலிங்கம் பிள்ளை & ஸன்ஸ்.
காரைக்குடி: சாரதா ஸ்டோர்ஸ்.

கவலைவேண்டாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானால், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினால் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசாமி
வைத்தியசாலை,
பழனி. S. I.

மாருதி

ஜன்ம நக்ஷத்திர பலன், தினசரிக் குறிப்பு-அதிருஷ்ட எண், ரேஸ், பஞ்சு, நூல், பொன், கோதுமை ஷேர் மற்றும் எல்லா வஸ்துக்களின் மார்க்கெட் எதிர்காலம், இதில் வெளி வரும். மாதப் பதிப்பு பிரதி 1 அணா. எல்லா ஊர்களுக்கும் ஏஜண்டு தேவை.

மாருதி ஆபீஸ், திருத்தணி.

மிஸஸ் ச. கோ. இ.
காதர்மீரா சாயபு,
ஹெட் நர்சரி தோட்டம், சேலம் S.

ஒட்டு மாங்கன்களும், பழச்செடிகளும், இங்கிலீஷ் காய்கறி, புஷ்ப விதைகளுமிருக்கின்றன. கேட்லாக் இனும்.

3 உயர்தர டானிக்குகள்

யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, மதராஸ்.
(உதவி வைத்தியர் Dr. P. S. C. மணி)

த்யாகராஜ கீர்த்தனம்

[காபிலரட்].

(சங்கீத வித்வான் துறையூர் எம். ராஜகோபால சர்மா)

பல்லவி

ஜானகி நாயக! நீகு ஜயமங்களம் ந்ருப-
ஸூன! ஸுந்தர முனகு சுபமங்களம் ஹரே!

சரணம்

பாலமுனகு நீது க-போலமுனகு மங்களம்
நீலவர்ண நீபலு வஜ்-ராலமுனகு மங்களம்
யௌவன முனகு சிரு-நவ்வுனகு மங்களம்
துவ்விந யலகல மீதி-புவ்வுலகு மங்களம்
மாடலகு ரத்னல கி-ரீடமுனகு மங்களம்
நாடக ஸூத்ரதார! நீ-தேடகண்ட்லகு மங்களம்
பாணமுனகு குஸும-பாண ஜனக! மங்களம்
ஜாண தனமுனகு லோக-த்ராணமுனகு மங்களம்
உங்க ரமுனகு நீ த்ருஷ்டாங்கமுனகு மங்களம்
பொங்குசு பதமுல னுண்டு கங்ககுனு மங்களம்
நீகுண ஜாலமுனகு-நித்ய சுபமங்களம்
நாகசயன! பாலித-த்யாகராஜ! மங்களம்

II

ஜானகி நாயக!	—சீதா பிராட்டியின் நாயகனே!
நீகு	—உனக்கு
ஜய மங்களம்	—மங்களம் உண்டாகுக
ந்ருபஸூன!	—அரச குமாரனே!
ஹரே	—ஸ்ரீ மஹா விஷ்ணு ஸ்வரூபனே!
ஸுந்தர முனகு	—உன் ரூபலாவண்யங்களுக்கு
ஜய மங்களம்	—திருஷ்டி தோஷம் ஏற்படாதிருக்க மங்கள ஹாரத்தி எடுக்கிறேன்
நீது பாலமுனகு	—அழகிய உன் நெற்றிப் பிரதேசத்திற்கும்
கபோல முனகு	—கன்னங்களுக்கும்
நீலவர்ண!	—கருத்த திருமேனியை உடையவனே!
நீ பலு வஜ்ரால முனகு	—நீ அணிந்துள்ள பலவித வஜ்ராபரணங்களுக்கும்
யௌவன முனகு	—உனது யௌவன பிராயத்தின் அழகிற்கும்
சிரு நவ்வுனகு	—உன் புன்சிரிப்பின் அழகிற்கும்
துவ்வின	—அழகாக வாரி முடிந்துள்ள
அலகல மீதி புவ்வுலகு	—சுருண்ட தலை மயிர்களின் மேலுள்ள வாசனை மிகுந்த புஷ்பங்களுக்கும்
மாடலகு	—உன் பேச்சின் வன்மைக்கும்
ரத்னல கிரீடமுனகு	—நீ அணிந்துள்ள நவரத்ன மயமான கிரீடத்திற்கும்
நாடக ஸூத்ரதார!	—அனைத்துயிரையும் நடிக்க வைக்கும் ஸூத்ரதாரியாய் விளங்குபவனே!
நீ தேட கண்ட்லகு	—உன் தெளிவான கண்களுக்கும்
பாண முனகு	—உன் கையில் விளங்கும் பாணத்திற்கும்
குஸும பாண ஜனக!	—மன்மதனைப் பெற்றவனே!
ஜாண தன முனகு	—உன் சாமர்த்தியமான செய்கைகளுக்கும்
லோகாத்ராண முனகு	—லோக சம்ரக்ஷணம் செய்யும் உன் சக்திக்கும்
உங்கர முனகு	—உன் கை விரலில் அணியப்பட்டு விளங்கும் கணையாழி மோதிரத்திற்கும்
நீ த்ருஷ்ட அங்கமுனகு	—கண் கவரும் அழகு வாய்ந்த உன் திருமேனிக்கும்
பொங்குசு	—அலைகளோடு, கொந்தளிப்புடன்
நீ பதமுலன் உண்டு	—உன் திருவடிகளினின்றும் வெளிக்கிளம்பிய
கங்ககுனு	—புண்ணிய நதியான கங்கா தேவிக்கும் (கங்கையை பிரவகிக்கச் செய்த உன் திருவடிக்கும்)
நீ குண ஜால முனகு	—உன் குண விசேஷங்களுக்கும்
நாகசயன!	—பாம்பணையின் மேல் பள்ளி கொண்டவனே!
பாலித த்யாகராஜ!	—த்யாகராஜனை ரக்ஷித்தருள்பவனே!
மங்களம்	—மங்களம் உண்டாகுக (திருஷ்டி தோஷம் ஏற்படாதிருக்க உனக்கு மங்கள ஹாரத்தி எடுக்கிறேன்)

III

ஸ்வாமிகள் தன் பூஜா மூர்த்திகளான ஸ்ரீ ராம. பஞ்சாயதன விக்ரஹங்களுக்கு விதிப்படி பூஜை முதலானவை செய்து அவ்வப்போது செய்ய வேண்டிய உத்ஸவங்களைக் கிரமமாக நட

ஜம்மி வெங்கட்ரமணய்யாவின் "லிவர்க்யூர்" தான் இக்குழந்தையை ரக்ஷிக்க முடியும்.

ஜம்மி'ஸ் லிவர் க்யூர்

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளுக்கு "லிவர்க்யூர்" சிறந்த நிவாரணியென பிரக்யாதி பெற்ற டாக்டர்களால் கருதப் படுகிறது. சென்ற 36 வருஷ காலமாக இக்கொடிய வியாதியினின்றும் ஆயிரக்கணக்கான குழந்தைகளைக் காப்பாற்றியிருக்கிறது.

அபாயகரமான போலி மருந்துகளைக்கண்டு ஏமாறாதீர்கள்.

ஜம்மி வெங்கட்ரமணய்யா & சன்ஸ்.
1/1, பிராடீஸ் ரோட், மைலாப்பூர், மதராஸ்.
மற்றும்:-பம்பாய், கல்கத்தா, லக்ஷ்மணபுரி, பெங்களூர், திருச்சினாப்பள்ளி.

உண்மை உறுதிக்கும் உத்திரவாதம்.

—:—

"ஷண்முகம் பிராண்டு" ஸ்டீல் டிரங்கு & ஸூட்கேஸ்கள்

தேவைக்கு வேண்டிய புது மாதிரி தினுசுகளில் கிடைக்கும்.

ஷண்முகம்பிராண்டு ஸ்டீல்டிரங்குவர்க்ஸ்
தயாரிப்பவர்:- சி. ஞானசுந்தர நாயகர், P. 3094. 341, எஸ்பிளனேட், மதராஸ்.

நமது தொடர் கதை

ஸ்ரீகாந்தன்

சரத்சந்திரர் எழுதியது.

(ஸ்ரீ.கு.ப.ராஜகோபாலன் மொழிபெயர்த்தது)

முன் கதைச் சுருக்கம்

சிறுபிராயத்தில் இந்திரநாதனுடன் சேர்ந்து ஸ்ரீ காந்தன் தனது இளமைப் பருவத்தை மிகவும் துணிகரமாகவும் நிர்ப்பயமாகவும் கழித்ததுடன் சமூகத்தை விரோதிக்கும் விதமாகவும் நடந்து கொள்கிறான். இதற்கப்புறம் ஸ்ரீகாந்தன் ஓர் நாள் தனது பழைய நண்பனான ஜமீன்தாரின் வீட்டில் பியாரியைச் சந்திக்கிறான். பியாரிக்கு ஸ்ரீ காந்தனிடம் விசேஷ ப்ரீதி: பிறகு அவன் வேறு இடம் கிளம்பி வழியில் ஒரு சந்யாஸியை அடைந்து சில காலம் தங்கி விட்டு அவரிடமிருந்து பிரிகிறான். ஸ்ரீ காந்தனுக்கு தேக அசௌக்யம் ஏற்படுகிறது. இந்தச் செய்தியை யறிந்து பியாரி அவனது உதவிக்கு வருகிறாள். பியாரி வீட்டிற்குப் போன அவன் அங்கு குதூஹலத்தைப் பார்க்கிறான். பிறகு அவன் பியாரிடம் தன் விவாகம், ரங்கூன் பிரயாணம் இவற்றைப் பற்றி சம்பாஷித்து விடை பெற்று கப்பலேறிக் கிளம்புகிறான். கப்பலில் அவனுக்குப் பலருடன் பழக்க மேற்படுகிறது. ரங்கூன் போய்ச் சேர்ந்ததும் அவனுக்கு ஏற்படும் அனுபவம் விநோதமாக இருக்கிறது. அங்கு அவன் உத்யோகத்திற்காக அலைந்த பின் அதை சம்பாதிக்கிறான். இதனுடன் தான் கப்பலில் சந்தித்த அபயாவின் புருஷனைக் கண்டு பிடித்து, அவன் அபயாவை ஏற்கும்படி வழி தேடுகிறான். பிறகு அபயாவை ஸ்ரீகாந்தன் சந்தித்தபோது அவள் அவனிடம் பல சீரிய கருத்துகளை வெளியிடுகிறாள். ராஜலக்ஷ்மியிடமிருந்து ஒரு கடிதம் வர ஸ்ரீகாந்தன் ரங்கூனைவிட்டு புறப்பட்டு அவளிடமே வந்து சேருகிறான். சில தினங்களுக்கப்பால் இருவரும் யாத்திரை கிளம்புகின்றனர். ஸ்ரீகாந்தன் மனோநிலை வேறுபடுகிறது. ஸ்ரீகாந்தன் தனியே புறப்பட்டுப் போய், ஊரில் தேக அசௌக்கியமடைகிறான். அந்நிலையில் அவன் ராஜலக்ஷ்மிக்குக் கடிதம் எழுத, அவள் அவனுக்கு சகாயம் புரிய உடனே அங்கு வந்து சேருகிறாள். ராஜலக்ஷ்மி அவனிடம் காட்டும் ப்ரீதி மிகவும் அபாரமானது. ஒருநாள் தன்னையே தான் அவனுக்கு அளித்து விட்டிருப்பதாகவும் அவள் சொல்கிறாள் இருவரும் இதற்கப்புறம் கங்காமாடி கிராமத்திற்குப் போக, வழியில் ஒரு சாதுவை சந்தித்து அவரையும் தங்களுடன் அழைத்துப்போகின்றனர். பிறகு அவர் பிரிந்து போகிறார்.

5

சாதுஜி என்னமோ கவலையற்றுப் புறப்பட்டுப் போய்விட்டான். அவரை விட்டுப் பிரிந்ததால் ரதன் எவ்வளவு சிரமப்பட்டான் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. ஆனால் ஒருத்தி தான் கொஞ்சம் அழுது கொண்டு அறையில் கிடந்தாள். மூன்றாவது பேர் வழி நான்! ஆசாமியோடு முழுக்க முழுக்க ஒரு இரவு பகல் ஸ்நேகம்கூட முழுதும் வலுக்கவில்லை. அப்படியிருந்தும் குடும்பம் சரியாகக் கூடக் குதிராத எங்களிடையே ஒரு பெரிய வெரிப்பை உண்டாக்கிவிட்டுப் போய்விட்டான். இந்தத் தொல்லை எங்களிடமிருந்து ஒரு வாறாகப் போய் விடுமா அல்லது திரும்ப ஒரு நாள் திடீரென்று அந்தப் பெரிய மருந்துப் பெட்டியுடன் வந்து சேருவானோ என்பதைப் பற்றிப் போகும்போது அவன் ஒன்றும் நிச்சயமாகச் சொல்லவில்லை, ஆனால் அதைப்பற்றி எனக்குப் பெருத்த உணர்ச்சிப் பெருக்கு ஏற்பட்டது என்பதல்ல, பல காரணங்களால் சிறிது காலமாகக் கொஞ்சம் விசேஷமாக ஜுரத்தால் தேகமும் மனமும் தளர்ந்து எனக்கோர் ஆதரவற்ற உணர்ச்சி ஏற்பட்டது முதல் நான் ராஜலக்ஷ்மியின் கையில் என்னை ஆத்ம சமர்ப்பணம் செய்துகொண்டுவிட்டு, வாழ்க்கையினுடைய எல்லா நல்லது கெட்டதுகளையும் புறக்கணித்து விட்டேன். ஆகையால் எந்தக் காரணத்தாலும சுதந்திரமாக நான் ஆலோசனை செய்வதற்கோ, கவலைப்படுவதற்கோ அவசியமும் இருக்கவில்லை—சக்தியும் இருக்கவில்லை! அப்படியிருந்தும் மனிதனுடைய மனதில் சஞ்சலத்திற்கு ஓய்வில்லை; ஆதலால் வெளி அறையில் உட்கார்ந்து கொண்டு தனியாக ஜன நடமாட்டத்தைக் கவனித்துக் கொண்டிருந்தேன். போகிறவரும் வருபவரும்கணக்கே கிடையாது. எதிரே தாழ்வாரத்தில் வெளிச்சம் கொஞ்சம் கொஞ்சமாகக் குன்றி, வரப்போகும் இரவைப்பற்றி எச்சரித்து வேறெங்கோ அலைந்த மனத்தில் ஒரு திடுக்கிடுதலை ஏற்படுத்தி விட்டுச் சென்றது. வாழ்க்கையில் எவ்வளவு இரவுகள் வந்து போயின; அவற்றுடன்சேர்ந்தது தான என்றும் வராத அந்த இரவின் அறிமுகமாகாத தோற்றம், ஏதோ முன்னால்பார்த்திராத ஒரு பெண்ணினுடைய முக்காடிட்ட முகம்போல ரகசியம் நிறைந்ததாக இருந்தது. அப்படி அறிமுகமாகாத அந்த இரவு எப்பேர்ப்பட்டது என்று கூட அறியாமல் அதன் முடிவுவரைக் காலத்தைப் கழித்தாக வேண்டும். நடுவில் கூட யாதொரு விசாரணையும் செய்யக் கூடாது. மறு நிமிஷமே இந்தத் தாங்க முடியாத நினைப்பின் தொடர்பு பூராவும் அறுபட்டு மறைந்து போய் விட்டது. மனம் இப்படி அவஸ்தைப்பட்டுக் கொண்டு இருந்தபொழுது ராஜலக்ஷ்மி அதே பக்கமாகக் கதவைத் திறந்து கொண்டு வந்தாள். அவளுடைய கண்கள் கொஞ்சம் சிவந்தும் கனத்தும் இருந்தன. மெதுவாக என் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டு "தூங்கிப் போய் விட்டேன்!" என்றாள்.

"அதில் ஆச்சரியப்படுவதற்கு என்ன இருக்கிறது? நீ பட்ட, கவலைக்கும் சிரமத்திற்கும் வேறு யாராவதாக இருந்தால் படுத்த படுக்கையாகி இருப்பார்கள். நானாக இருந்தால் இரவும் பகலும் கண்ணையே திறக்கமாட்டேன். கும்ப கர்ணன் போலத் தூங்குவேன்" என்றேன் நான்.

ராஜலக்ஷ்மி சிரித்துக்கொண்டு "ஆனால் கும்ப கர்ணனுக்கு மலேரியா கிடையாதே! கிடக்கட்டும், நீ இன்று பகலில் தூங்கினாயா?" என்றாள்.

"இல்லை. ஆனால் இப்பொழுது தூக்கம் வருகிறது. தூங்கப் போகிறேன். ஏனென்றால் கும்ப கர்ணனுக்கு மலேரியா கிடையாது என்று வால்மீகி எங்கும் குறிப்பிடவில்லை."

அவள் பயந்து போய் "இந்த அகாலத்திலா தூங்குகிறாய்? என்னை மன்னித்து விடு. ஒரு வேளை ஜுரம் தான் இன்னும் கொஞ்சம் பாக்கி யிருக்கிறதோ–அதெல்லாம் இருக்காது. நல்லது, போகிற போது ஆனந்தன் இன்னும் ஏதாவது சொல்லி விட்டுப் போனானா?" என்றாள்.

"எந்த மாதிரி அவன் சொல்லி இருக்க வேண்டும் என்று நீ விரும்புகிறாய்?" என்று கேட்டேன்.

"எங்கெங்கே போகிறான்–அல்லது–" இந்த 'அல்லது' தான் முக்கியமான கேள்வி.

"எங்கெங்கே போகப்போகிறான் என்பதை ஒருவாறாகத் தெரிவித்தான். ஆனால் இந்த 'அல்லது' சம்பந்தமாக அவன் ஒன்றும சொல்லி விட்டுப்போகவில்லை. அவன் திரும்பி வருவான் என்பதற்கு அடையாளம் விசேஷமாக ஒன்றும் தெரியவில்லை".

ராஜலக்ஷ்மி மௌனமாக இருந்தாள். ஆனால் என்னால்



பிரிட்டிஷ் படையைச் சேர்ந்த இருவர் டொப்ருக்குக்கருகாமையில் ஒரு பாறைக்குப் பின் மறைந்து கொண்டு இத்தாலியர்களது நடவடிக்கைகளைக் கண்காணிக்கின்றனர்.

என் ஆவலைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

"நல்லது, இந்த ஆசாமியை உண்மையாகவே அடையாளம் கண்டு கொண்டு விட்டாயா—என்னை ஒரு நாள் அடையாளம் கண்டு பிடித்தாயே அந்த மாதிரி?" என்று நான் கேட்டேன்,

அவள் என் முகத்தைச் சிறிது நேரம் பார்த்துக்கொண்டு இருந்து விட்டு "இல்லை!" என்றாள்.

"நிஜமாகச் சொல்லு? எங்கும், ஒரு நாளும் அவனைப் பார்த்ததே இல்லையா?"

இந்தத்தடவை ராஜலக்ஷ்மி சிரித்துக்கொண்டே "உன்னிடம் என்னால் சத்தியம் செய்து சொல்ல முடியாது. அநேக சமயங்களில் எனக்கு ஞாபக மறதி ஏற்பட்டு விடுகிறது. பல அறிமுகமாகாத மனிதர்கள் முகம் மனதில் இருக்கிறது. எங்கே பார்த்தோம்; அந்த முகம் நமக்கு அடையாளம் தெரிகிறதா, அல்லது எங்காவது பார்த்திருக்கிறோமா என்பதைக்கூட நினைத்துப் பார்க்க முடியவில்லை! ஆனந்தனைக் கூட எங்காவது பார்த்திருக்கலாம்!" என்றாள்.

சிறிது நேரம் மௌனமாக உட்கார்ந்திருந்து விட்டு அவள் பரபரப்புடன் "இன்று ஆனந்தன் புறப்பட்டு போய்விட்டான்; ஆனால் அவன் என்றாவது திரும்பி வந்தால் அவனுடைய தாய் தகப்பனாரிடம் அவனைத் திருப்பி அனுப்புவேன் என்பதை உனக்கு நிச்சயமாகச் சொல்லுகிறேன்" என்றாள்.

"அதில் என்ன உனக்கு அவ்வளவு அக்கறை?"

"இப்பேர்ப்பட்ட சிறுவன் ஆயுள் பூராவும் அலைந்து திரிந்து கொண்டிருக்க வேண்டும் என்பதை நினைத்துப் பார்த்தால் கூட என் மனத்தில் சூலம் தைக்கிறது போலிருக்கிறது. நல்லது நீ கூடத் தான் குடும்பத்தைத் துறந்தாய், சன்னியாசி ஆகிறதில் உண்மையாக ஆனந்த மிருக்கிறதா?"

"நான் உண்மையாகவே சன்னியாசி ஆகவில்லை. ஆகையால் எனக்குப் புறம்பான உண்மையைப் பற்றி உனக்குத் தகவல் கொடுக்க என்னால் முடியவில்லை, அவன் என்றாவது திரும்பி வந்தால் அவனையே கேள்!"

"ஆமாம் வீட்டிலேயே இருப்பதால் நல்லது செய்ய முடியதா? வீட்டை விட்டுப் போகா விட்டால் பகவானை அடைய முடியாதா?" என்று ராஜலக்ஷ்மி கேட்டாள்.

கேள்வியைக் கேட்டு நான் கை கூப்பி "அவர்களைப் பற்றியெல்லாம் எனக்குக் கவலையில்லை. லக்ஷ்மி! இந்தப் பயங்கரமான கேள்விகளெல்லாம் என்னைக் கேட்காதே? மறுபடியும் எனக்கு ஜுரம் வந்தாலும் வந்து விடும்!" என்றேன.

ராஜலக்ஷ்மி சிரித்து விட்டு இரங்கிய குரலில் "ஆனால் வாழ்க்கையில் ஆனந்தனுக்கு எல்லாம் இருக்கிறது போலிருக்கிறது. அப்படியிருந்தும் தர்மப் பிரசாரத்திற்காக இந்த வயதிலேயே எல்லாவற்றையும் துறந்து விட்டான். ஆனால் உன்னால் அப்படிச் செய்ய முடியுமா?" என்றாள்.

"முடியாது, இனி மேலும் முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை."

"ஏன் தோன்றவில்லை?"

முக்கியமான காரணம், நான் எவளைக் கைவிட வேண்டுமோ அவளுடைய வாழ்க்கை,எனக்கு, எங்கே, எப்படி ஆகப்போகிறதென்று தெரியாது. மேலும் யாருக்காக துறக்க வேண்டுமோ அந்தப் பரமாத்மாவிடம் எனக்குக் கொஞ்சங்கூட பக்தி இல்லை. இவ்வளவு நாட்களை அப்படியே கழித்து விட்டேன். பாக்கி நாட்களையும்அதே விதம் கழித்து விட வேண்டும் என்று நினைககிறேன். அதைத் தவிர உன்னுடைய ஆனந்தன் காவி அணிந்து கொண்டு கடவுளை அணுகிவிடலாம் என்று கிளம்பியிருக்கிறானே, அதில்எனக்கு நம்பிக்கையில்லை. அதன் காரணம், சில சந்தர்ப்பங்களில் ஸாதுக்களுடன் பழகியிருக்கிறேன், அவர்கள் யாரும் இது வரை மருந்துப் பெட்டியை எடுத்துத் தலையில் வைத்துக் கொண்டு கடவுளைத் தேடிப் புறப்படும்படிச் சொல்லவில்லை, இன்னும் அவனுடைய சாப்பாடு வகையறாவை என்னால் கண்ணால் பார்க்க முடியவில்லை!"

ராஜலக்ஷ்மி சிறிது நேரம் மௌனமாக இருந்து விட்டுப் பிறகு, "அப்படியானால் அவன் வீணாகவா வீடு வாசலை விட்டு விட்டு கஷ்டத்தை அனுபவிக்க வெளிக் கிளம்பியிருக்கிறான்? எல்லோரும் உன் போலிருப்பார்கள் என்று எண்ணி விட்டாயா?' என்றாள்.

"இல்லை. நிரம்ப வித்தியாசம் இருக்கிறது. அவர்கள் பகவானைக் கண்டு பிடிக்கக் கிளம்பா விட்டாலும் அவர்கள் யாருக்காக வெளிக் கிளம்பினார்களோ அது கிட்டத்தான் இருக்கிறது—அதாவது அவர்கள் தேசம்! ஆகையால் அவர்கள் வீடு வாசலை விட்டு விட்டு வந்து விட்டது என்பது உண்மையில் வாழ்க்கையைத் துறந்து விட்ட தாகாது. ஸாது சிறியதொரு வாழ்க்கையைத் துறந்து விட்டுப் பெருத்த வாழ்க்கையில் ஈடுபட்டு விட்டான். அவ்வளவு தான்!"

ராஜலக்ஷ்மி என் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள், நான் சொன்னது அவளுக்குச் சரியாக விளங்கவில்லை போலிருக்கிறது. பிறகு அவள் "போகும் பொழுது அவன் ஏதாவது சொல்லி விட்டுப் போனானா?" என்று கேட்டாள்.

நான் தலையை அசைத்து "இல்லை, அப்படி யொன்றுமில்லை" என்றேன்.

நான் ஏன் ஒரு சிறு உண்மையை மறைத்தேன் என்பது எனக்கே தெரியாது, ஆனால் போகும் பொழுது ஸாது சொன்ன கடைசி வார்த்தை என் காதில் அப்பொழுதும் அப்படியே ஒலித்துக் கொண்டிருந்தது: போகும் பொழுது அவன் பெரு மூச்சு விட்டு விட்டு இந்த வங்காள தேசம் விசித்திரமான பிரதேசம் தான் இங்கே வழியிலெல்லாம் தாயாரும் சகோதரியும் கிடைக்கிறார்கள். அவர்களைத் திரஸ்கரித்து விட்டுப் போக முடியுமா ?

வாடின முகத்துடன் ராஜலக்ஷ்மி மௌனமாக உட்கார்ந்திருந்தாள்; என்னுடைய மனத்திலும் அநேக நாட்களுக்கு முன் நடைபெற்று மறந்து போன சம்பவங்கள ஒவ்வொன்றாக நினைவிற்கு வந்தன. 'அப்படித்தான் இருக்க வேண்டும்!' அப்படித்தான் இருக்க வேண்டும்! என்று எனக்குள்ளேயே சொல்லிக்கொண்டேன்.'ஸாதுஜி, நீ இந்தச் சிறு வயதிலேயே இந்தத் துர்ப்பாக்கிய நாட்டை மேன்மைப் படுத்தப்பார்க்கிறாய் இல்லாவிட்டால் இந்த உண்மையான நிலைமையைப் பற்றின செய்தியை இன்று இவ்வளவு இயற்கையாக யார் சொல்ல முடியும்? பல காலமாகப் பல தவறுகளும் தப்பிதங்களும் தாய் நாட்டின் அங்கத்தில் சேற்றைப் பூசியிருக்கிறது. ஆனால் இந்த உண்மையைப் பரிசோதிக்கக் கிளம்பிய ஒருவன், அது எவ்வளவு மறுக்க முடியாதது என்று எண்ணுகிறான்!'

இந்த நிலைமையில் சிறிது நேரம் கழிநததும் ராஜலக்ஷ்மி தலை நிமிர்ந்து "இந்த உத்தேசம் அவன் மனதில் இருந்தால் நிச்சயம் அவன் ஒரு நாள் வீட்டுக்குத் திரும்பியே ஆக வேண்டும். இந்தத் தேசத்தில் பிறருக்கு நன்மை செய்யப் புறப்படுபவனுக்கு அது தீமையைத்தான் விளைவிக்கும் என்று அவன் இன்னும் அறியவில்லை. அதை நான் கொஞ்சம் அனுபவித்திருக்கிறேன். என்னைப் போல ஒரு நாள் அவன் மனமும் சந்தேகத்தாலும், வேதனையாலும், வெறுப்பாலும் நிரம்பும் போது அவனும் அந்த வழி போகமாட்டான்" என்றாள்.

"ஒரு வேளை அப்படியும் நடக்கலாம். ஆனால் இந்தச் சங்கடங்களெல்லாம் 'உண்டு' என்று அவனுக்கு நன்றாகத் தெரியும் என்று எண்ணுகிறேன்."

ராஜலக்ஷ்மி திரும்பத் திரும்பத் தலையை அசைத்து "இருக்கவே இருக்காது. இருக்கவே இருக்காது தெரிந்திருந்தால் யாரும் அந்த வழியில் போகவே மாட்டார்கள், நான் நிச்சயமாய்ச் சொல்லுவேன்" என்றாள்.

அதற்கு நான் ஒன்றும் பதில் சொல்லவில்லை. ஒரு சமயம் இவள் செய்துகொண்ட நல்ல

டோங்ரேயின்
பாலாமிருதம்
பிரசித்தி பெற்ற
குழந்தைகளின் டானிக்

வீதிகளிலும் நம்பிக்கையற்ற கடைகளிலும் வாங்காதீர்கள்
நஞ்சன்கூட பல்பொடி
I. D. L. G. மெடிகேட்ட
பல வியாதிகளைத்தடுக்கவும், குணப்படுத்தவும்
ஊக்கம், உற்சாகம் ஊட்ட | ஜீர்சு | அஜீர்ண, பித்த சமனி
உஷ்ண சமனி | கூலாயில் | ஸ்நான தைலம்
கவனிக்க போலிகளால் பற்களுக்கே அபாயம்
சோல் ஏஜண்ட்ஸ்: யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, மதருஸ்
(உதவி வைத்தியர் Dr. P. S. C. மணி) (தபால் மூலம் சிகிச்சை பெறுக)

தீர்மானங்களும் காரியங்களும் பங்குவினுடைய மாமனார் ஊரில் பரிகாசத்திற்கு இடமாயின என்று பங்கு என்னிடம் சொல்லியிருந்தான். பிரதிப் பிரயோசனத்தை எதிர்பாராமல் அவள் அவ்வாறு செய்ய முயன்ற பரோபகாரம் வீணானதைப் பற்றி அவள் பல நாள் மனவருத்தப்பட்டுக்கொண்டிருந்தாள். மேலும் அவள் அவஸ்தையை அதிகப்படுத்த எனக்கிஷ்டமில்லை. ஆகையால் நான் மௌனமாக இருந்துவிட்டேன், ஆனாலும ராஜலக்ஷ்மி சொன்னது பொய்யல்ல. 'ஏன் இப்படி, ஒருவர் நல்லது செய்யப் போனால் அதைப்பற்றி பிறர் சந்தேகப்படுகிறார்கள்? ஏன் இவர்கள் அப்படிக் காரியத்தை வீணாக்கி மனிதவாழ்க்கையின் துக்கச் சுமைக் குறைவதைத் தடுக்கிறார்கள்?' என்று எண்ணலானேன். ஸாதுஜி இருந்தாலும், எப்பொழுதாவது திரும்பி வந்தாலும், அந்தக் கடினமான பிரச்னையைத் தீர்க்கும் பொறுப்பை அவருக்குக் கொடுத்துவிடுவது என்று தீர்மானித்தேன். இன்று காலையிலிருந்தே அருகில் எங்கிருந்தோ அடிக்கடித் தப்பட்டைச் சப்தம கேட்டுக்கொண்டிருந்தது, இப்பொழுது சிலர் ரதனை முன்னிட்டுக்கொண்டு தாழ்வாரத்தின் நடுவில் வந்து நின்றார்கள். ரதன் அருகில் வந்து "அம்மா, இவர்கள் உங்களை ராஜ வரணம் செய்ய வந்திருக்கிறார்கள், வந்து அனுமதி கொடுக்க வேண்டும்" என்று சொல்லி அவன் அங்கே நின்ற முக்கியஸ்தன் ஒருவனுக்கு ஜாடை காட்டினான். (ஜமீந்தாரிகளுள் கலியாணம் நடந்தால் ஜமீனுக்குத் தலைமை வகிக்கும் புருஷனைப் பாக்கு வெற்றிலை வைத்து அனுமதிகேட்டு அழைப்பது வழக்கம். தென்னாட்டில்கூட அது சில இடங்களில் இருக்கிறது.)

அவன் மஞ்சள் உடை உடுத்திருந்தான். கழுத்தில் புதுப் பூமாலை ஒன்றிருந்தது. அவன் வெகு தயக்கத்துடன் முன்னால் வந்து தாழ்வாரத்திலேயே நின்றுகொண்டு புது வெற்றிலை மேல் ஒரு பாக்கும, ஒரு ரூபாயும் வைத்து, ராஜலக்ஷ்மியின் காலடியில் மரியாதையாக வைத்துத் தலை வணங்கி "எஜமானி அம்மா, இன்று என் பெண்ணுக்குக் கலியாணம" என்றான்.

ராஜலக்ஷ்மி எழுந்து அதை எடுத்துக்கொண்டு, உள்ளப் பூரிப்புடன், "பெண்ணின் கலியாணத்தின்போது இதைத்தானா கொடுக்கிறது?" என்று கேட்டாள்.

ரதன் உடனே, "இல்லை அம்மா அப்படி யொன்றுமில்லை. யாருக்கு எது சாத்தியமோ அதை ஜமீன்தாருக்குக் கொடுப்பது வழக்கம். இவர்கள் மிகவும் ஏழை. ஜாதியில்—கூடை முறம் பின்னுகிறவன்! வேறென்ன இவனுக்குக் கிடைக்கும? வெகு கஷ்டப்பட்டு—" என்று சொல்லி முடிப்பதற்குள், ரூபாய் வந்தவனுடையது என்று கேள்விப்பட்டதும் ராஜலக்ஷ்மி வெகு அவசரமாக அதைக் கீழே வைத்துவிட்டு "அப்படியானால் இருக்கட்டும இருக்கட்டும். இதுகூடக் கொடுக்க வேண்டாம். நீங்கள் அப்படியே பெண்ணுக்குக் கலியாணம் செய்யுங்கள்" என்றாள்.

இந்தப் பதிலைக் கேட்டுப் பெண்ணினுடைய தகப்பனாரைக் காட்டிலும் ரதன் இன்னும் அதிகமாகச் சங்கடத்தில் மாட்டிக்கொண்டான். அவன் பல தினுசுகளாக ராஜ வர்ணத்தில் கொடுத்த சன்மானத்தை ஏற்றுக் கொள்ளாமலிருக்கக்கூடாது என்று சொல்லப் பார்த்தான். ராஜலக்ஷ்மி ஏன் அந்தப் பாக்கு வெற்றிலையை எடுத்துக்கொள்ளவில்லை என்பது எனக்குத் தெரிந்து விட்டது. ரதன் எதற்காக அவள் அதை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று பலவந்தப்படுத்திக்கொண்டிருந்தான் என்பதும தெரியும்!

கொடுத்த ரூபாயைக் காட்டிலும் அதிகமாகக் குமாஸ்தா குசாரி மஹாசயரிடம் வாங்குவதற்காகத்தான் அவன் அவ்வளவு தந்திரம் செய்தான். ரதன் 'ஹுஜூர்' முதலான வார்த்தைகளை உபயோகித்து வந்தவனுக்குப் பதிலாக விண்ணப்பம் செய்து கொண்டான். ரதன் அவனை நல்ல நம்பிக்கை ஊட்டிக் கூட்டிக் கொண்டு வந்திருந்தான் என்பதில் சந்தேகமில்லை. அவனுடைய சங்கடத்தைக் கடைசியில் நான் தான் தீர்த்துவிட்டேன். எழுந்து வந்து ரூபாயைக் கையில் எடுத்துக்கொண்டு "சரி நான் எடுத்துக்கொண்டுவிட்டேன். நீங்கள் வீட்டிற்குப் போய் கலியாண விஷயத்தைக் கவனியுங்கள்" என்றேன்.

ரதனுடைய முகம் கர்வத்தால் பிரகாசமடைந்தது ராஜலக்ஷ்மியும் தீண்டக்கூடாதவன் கொடுத்த சன்மானத்திலிருந்து தப்பித்ததற்காகச் சந்தோஷமடைந்தாள். உற்சாகமாக அவள் "ரொம்ப நன்றாகப் போய்விட்டது. யாருக்குச் சொந்தமோ அவனே தன் கைப்பட எடுத்துக் கொண்டான்" என்று சொல்லிச் சிரித்தாள். 'மது' வென்ற அந்தக் கூடை முறக்காரன் நன்றி அறிதலுடன் கை கூப்பி "ஹுஜூர் இரவு பனிரண்டு மணிக்கு லக்னம், உங்கள் பாத தூளி அங்கே பட வேண்டும்" என்று சொல்லி ஒரு முறை என்னையும் மற்றொரு முறை ராஜலக்ஷ்மியையும் பார்த்து, தயவு வேண்டும் கண்களோடு நின்றான்.

நான் சம்மதித்தேன். ராஜலக்ஷ்மியும் தப்பட்டைச் சப்தத்தைக் கொஞ்சம் கேட்டு விட்டு "அது தானா உன் வீடு மது? நல்லது. சாத்தியப் பட்டால் நானும் ஒரு தடவை வரப் பார்க்கிறேன்" என்று சொல்லி ரதனைப் பார்த்து "என்னுடைய பெரிய பெட்டி இருக்கிறதல்லவா ரதன், என் புதுப் புடவைகளைக் கொண்டு வந்தோமே அது? போய் அதிலிருந்து பெண்ணுக்கு ஒரு புடவை கொண்டு வா. பட்சணம் ஒன்றும் இங்கே கிடைக்காது போலிருக்கிறது. சக்கரை மிட்டாய் கிடைக்குமல்லவா அதுவே போதும்: அதையும கொஞ்சம் கொண்டு போக வேண்டும். மது, உன் பெண்ணுக்கு வயதென்ன? பையன் எந்த ஊர்? எத்தனை பேர் சாப்பிடுவார்கள்? இந்தக் கிராமத்தில் உங்களுடைய இனத்தவர்களது எத்தனை வீடு?" என்று கேட்டாள்.

ஜமீன்தாரிணி அம்மாள் ஒரே அடியாகக் கேட்ட இவ்வளவு கேள்விகளுக்கும் பதிலாக மது பரபரப்புடனும் வணக்கத்துடனும சொன்னது பின்வருமாறு என்று ஒருவாறாகத் தெரிந்தது. பெண்ணினுடைய வயது ஒன்பதுக்குள்தான். மாப்பிள்ளை நல்ல யௌவன புருஷன்-வயது முப்பது நாற்பதிற்கு மேல் இராது! அவன் கிராமம் வடக்கே பத்து பதினைந்து மைல்களில் உள்ளது. அங்கே அவர்கள் கூட்டம் வலுத்தது. அங்கே ஜாதி வித்தியாசம் கிடையாது. எல்லோரும் விவசாயிகள். பெண்

இலவசம்! இலவசம்!! இலவசம்!!!



படத்திலுள்ளதுபோன்ற அமைப்பு. உண்மை ரிவால்வரைப்போ விருப்பதுடன் 15 அவு. எடை 7" நீளம். 6 ரவைகளை சேர்ந்தாற்போல் சுடலாம். இதன் சப்தத்தால் அனைவரையும் விரட்டலாம். திருடர்கள், விரோதிகளிடமிருந்து பாதுகாத்துக்கொள்ள சிறந்தது. நெ. 7777, 30 ரவைகளுடன் ரூ. 4/8 நெ. 8888, 45 ரவைகளுடன் ரூ. 5/13. நெ.1111, 55 ரவைகளுடன் ரூ. 6/8. அதிகப்படி 1000 ரவைகள் ரூ. 3/- பெல்டுடன் கேஸ் ரூ. 1/8. பிஸ்டல் ஆயில் அணா 6. இலவசம்: ஒரு அழகிய மியூட்கை கடியாரம், ஒரு தோலா "பாரிஸ் நியூகோல்ட்" ஒவ்வொரு பிஸ்டலுடனும் இனமாகக் கொடுக்கப்படும். இவை உண்மை தங்கத்தைப்போ விருப்பதுமட்டுமின்றி, கம்பிகளாகவும் இழுக்கலாம், பிளேட்டுகளாகவும் அடிக்கலாம், எல்லாவித நகைகளும் செய்யலாம். குறிப்பு:—அங்கீகரிக்கப்படாவிடில் பணம் வாபீஸ் என்ற உத்திரவாதத்தின் கீழ் விற்கப்படுவன. 2 பிஸ்டல் வாங்குவோருக்கு 2 அழகிய மியூட் கை கடியாரமும், 2 தோலா "பாரீஸ் நியூ கோல்ட்"டும் கொடுக்கப்படும். தபால் சார்ஜ் இலவசம். இந்த குறைந்த கட்டணங்கள் வாபீஸ் பெறுமுன் எழுதுங்கள்.

AMERICAN CORPORATION
(S. M. W.) DINA NAGAR (PUNJAB)
(B. P. S.)

41 வருடம் அனுபவம் உள்ளது; ஞாபகம் இருக்கட்டும்.

சூதக வயிற்றுவலி இருக்கும்வரை கெர்ப்பம் தரிக்காது.
ஷி வயிற்று வலியை எடுத்து 6 வித மலட்டையும் நீக்கி
புத்திரசந்தானம் உண்டாகவேண்டுமானால் R.M.K.
கெர்ப்ப சஞ்சீவி எண்ணெயை சாப்பிடுங்கள்.

ஸ்திரீகளுக்கு மாதாந்திரத்தில் வரும் பொறுக்கமுடியாத வயிற்று வலியை அந்தக்ஷணமே நிறுத்தும். எந்த மருந்திலும் தீராத எவ்வளவு நாட்பட்ட சூதக வயிற்று வலியும் இதில் அவசியம் தீரும். சூதகம் கண்டும் காணாமலும், துப்பரவாகாமலும் டயப்படி ஆகாமலுமுள்ள சூதகபந்தமானாலுஞ்சரி, இதில் சுகமாகிவிடும். காலா காலத்தில் கிரமப்படி பஹிஷ்டை ஆகும். இன்னும் கெர்ப்பரோக சம்மந்தமான சகல வியாதிகளும் தீர்ந்து கெர்ப்பம் தரித்துவிடும்! குணம் இல்லையேல் பணம் வாபீஸ்.

1 புட்டி ரூ. 2. செலவு வேறு. ஒரு நபருக்கு 3 புட்டி வேண்டும். ஒரே தடவையில் 3 புட்டி ரூ. 5.

வைத்திய ஆசிரியர் **ஆர். எம். கே. வேலுசாமி,**
சித்த வைத்திய சாலை, பழனி. **PALNI.** (S. I. R.)

பிராஞ்சுகள்:— 16, திருவல்லிக்கேணி ஹைரோடு, மதராஸ்,
,, :— 68, செட்டியார் தெரு, கொழும்பு.

ரொம்பச் சௌக்கியமாக இருக்கும். ஆனால் அன்றிரவைப்பற்றித்தான் வெகு கவலையாக இருந்தது. மாப்பிள்ளை வீட்டார் எவர்கள் என்றும் அவர்களை எல்லாம் எங்கே இறக்குவது என்றும் பிரச்னை காலையிலிருந்து ஒருவிதமாகவும் தீர்ந்தபாடில்லை. அவர்கள் எல்லோரும் பணக்காரர்கள். அவர்களுக்கெல்லாம் சரியாக மரியாதை நடந்து காரியம் எப்படிப் பூர்த்தியாகப்போகிறது என்று தத்தளித்துக் கொண்டிருந்தானும். இதையெல்லாம் சவிஸ்தாரமாகச் சொல்லிவிட்டுக் கடைசியில் ஆவலுடன் பொரி, வெல்லம், தயிர் எல்லாம் ஏற்பாடாகிவிட்டது. கடைசியாக ஆளுக்கு இரண்டு சக்கரை மிட்டாயும் கொடுத்து விடலாம். ஆனால் அப்படியிருந்தும் ஏதாவது ரகளை ஏற்பட்டு விட்டால் காப்பாற்ற வேண்டும் என்றும் சொன்னான்.

ராஜலக்ஷ்மி உற்சாகத்துடன் "ரகளை ஒன்றும் நடக்காது. மது, உன் பெண்ணின் விவாகம் நிர்விக்கினமாக நடைபெறும்.

நான் ஆசிர்வாதம் செய்கிறேன். சாப்பாட்டிற்காக நீ இவ்வளவு பதார்த்தங்கள் தயார் செய்திருப்பதால் சம்பந்திகள் உற்சாகமாகச் சாப்பிட்டு விட்டு ஊர் போய்ச் சேர்வார்கள்" என்றாள்.

மது பூமியில் விழுந்து நமஸ்காரம் செய்து விட்டு கூட வந்த இரண்டு ஆட்களையும் கூப்பிட்டுக்கொண்டு புறப்பட்டான். ஆனால் ராஜலக்ஷ்மி அளித்த ஆசிர்வாதத்தால் அவன் அவ்வளவாகச் சமாதானமடையவில்லை என்று அவன் முகத்திலிருந்து தெரிந்தது. அன்றிரவைப்பற்றி பெண்ணின் தகப்பனான அவன் மனதில் பெருத்த கவலை ஏற்பட்டிருந்தது.

கலியாணத்திற்கு வருவதாக மதுவுக்கு ஆசை வார்த்தை சொன்னோம். ஆனால் உண்மையில் யாருக்கும் அங்கே போவதாக உத்தேசமில்லை. சாயங்காலத்திற்குப் பிறகு விளக்குக்கு முன்னால் உட்கார்ந்து கொண்டு வரவு செலவு கணக்கைப்படிக்கச் சொல்லிக் கேட்டுககொண்டிருந்தாள் ராஜலக்ஷ்மி. நான் படுக்கையில் படுத்துக்கொண்டு கண்களை மூடிய வண்ணம் சிலவற்றைக் கேட்டும் சிலவற்றை கேட்காமலுமிருந்தேன். ஆனால் அருகில் கலியாண வீட்டில் நடந்த கலவரம் சிறிது நேரத்திற்குள் அசாத்தியமாகிக் காதைத் துளைத்துக்கொண்டிருந்தது. திடீரென்று ராஜலக்ஷ்மி தலை நிமிர்ந்து "கலியாண விட்டில் சண்டை ஒரு முக்கியமான அங்கம்தானே?" என்று சிரித்துக் கொண்டே சொன்னாள்.

"உயர்ந்த ஜாதியிலேயே அது ஏற்படும் பொழுது இங்கே நடப்பது என்ன ஆச்சரியம். அதெல்லாம் ஞாபகமிருக்கிறதா?" என்றேன் நான்.

ராஜலக்ஷ்மி "ஹும்" என்று சொல்லிச் சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டுப் பிறகு பெருமூச்சுடன், "வாஸ்தவம் தான். இந்தப் பாழாய்ப்போன தேசத்தில் பெண்களுக்குக் கலியாணம் செய்கிற மட்டில் எல்லோரும் ஒன்று தான். அவர்கள் போன பிறகு காலையில் அந்தத் துர் அதிர்ஷ்டம் பிடித்த ஒன்பது வயது குழந்தையை யாரோ அறிமுகமாகாத மாமியார் கூட்டிக்கொண்டு போய்விட்டாள் என்று கேள்விப்பட்டப் போகிறேன். திரும்ப எப்பொழுது கொண்டு வந்து விடப் போகிறார்கள்? அவர்களுடைய வழக்கமே இதுதான். தகப்பனார் ஒரு நாலு ரூபாய்க்குத் தன் பெண்ணை விக்கிரயம் செய்துவிடப் போகிறான் ஒரு தரம் அனுப்புங்கள்' என்று வாய் திறந்துகூடச் சொல்லமுடியாது. ஆஹா, பெண் அங்கே எவ்வளவு அழப்போகிறாள்! கலியாணம் என்பது என்ன என்றாவது அவளுக்கு இப்பொழுது தெரியுமா? சொல்!" என்றாள்.

இதையெல்லாம் நான் பிறந்தது முதல் பார்த்திருக்கிறேன். ஒரு விதத்தில் அனுபவித்தும் இருக்கிறேன். ஆனால் என்னுடைய அனுதாபத்தைத் தெரிவிக்க எனக்கு எண்ணம் ஏற்படவில்லை. ஆகையால் மௌனமாகவே இருந்துவிட்டேன். பதில் கிடைக்காததால் அவள் மறுபடியும், "நம்ம தேசத்தில் கீழோர் மேலோர் எல்லா ஜாதிகளுக்கும் கலியாணம் என்பது வெறும் கலியாணமல்ல அது ஒரு தர்மம். அதனால்தான், இல்லாவிட்டால்—" என்று இழுத்தாள்.

'அது தர்மமென்று எண்ணினால் பின் ஏன் இவ்வளவு சலிப்பு? மேலும், அந்தத் தர்ம விஷயத்தில் மனம் சந்தோஷப்படாமல் துக்கப்படுவதால் அதைத் தர்மம் என்று ஏற்றுகொள்வதில் தான் என்ன பிரயோஜனம்?' என்று நான் கேட்கலாம் என்று நினைத்தேன். ஆனால் நான் பேச வாயெடுக்கு முன் அவளே மறுபடியும் 'ஆனால் இந்த விதிகளைச் செய்த பெரியார்கள் த்ரிகால ஞானிகளான ரிஷிகள். சாஸ்திர வாக்கியம் ஒருக்காலும் பொய்யில்லை: தீமை செய்வதுமில்லை. நமக்கு என்ன தெரிகிறது? எவ்வளவு தான் அறிந்திருக்கிறோம்?' என்றாள்.

அவ்வளவு தான்! நான் சொல்ல வாயெடுத்ததைப் பிறகு சொல்லவில்லை. வாழ்க்கையில் யோசனை செய்து முடிவு கட்ட வேண்டிய விஷயங்கள் ஏதாவது இருந்திருந்தால் அவற்றையெல்லாம் திரிகால ஞானிகளான ரிஷிகணங்கள் சென்ற காலம் எதிர்காலம், நிகழ் காலம் இந்த மூன்று காலங்களுக்காகத் தாமே யோசனை செய்து முடிவு கட்டி வைத்து விட்டுப் போய்விட்டார்கள். உலகத்தில் இப்பொழுது யோசனை செய்ய வேண்டிய விஷயம் ஒன்றுமேபாக்கி கிடையாது. இந்தப் பேச்சை ராஜலக்ஷ்மி வாயிலிருந்து நான் புதிதாகக் கேட்கவில்லை. இன்னும் பல பேர் சொல்லியும் கேட்டிருக்கிறேன். ஆனால் அப்பொழுதெல்லாம் நான் மௌனமாக இருந்து விடுவது வழக்கம். இதற்கு நான் பதில் சொல்லப் போனால் முதலில் உஷ்ணமும், பிறகு கலகமும் முடிவில் அசாத்தியமான வெறுப்பும் தான் ஏற்படும் என்று எனக்குத் தெரியும். த்ரிகாலஞர்களைப் பற்றி நான் குறைவாக எண்ணவில்லை. ராஜலக்ஷ்மியைப் போல எனக்கும் அவர்களிடம மகத்தான பக்தி உண்டு. ஆனால் அவர்கள் தயவு செய்து நமது இந்த ஆங்கில அரசாட்சி காலத்திற்கு மட்டும் யோசனை கூறாமல் இருந்திருந்தால் பல சிக்கலான பிரச்னைகள் தீர்ந்து போயிருக்கும். நாமும் இன்று உண்மையிலேயே உயிருடன் இருக்கலாம்.

ராஜலக்ஷ்மி என் மனத்தில் நடை பெறுவதைக் கண்ணாடியில் காண்பதைப் போலக்கண்டுவிடுவாள் என்று நான் முன்பே சொல்லி இருக்கிறேன். எப்படித் தான் கண்டு பிடிக்கிறாளோ அது எனக்குத் தெரியாது. ஆனால் இப்பொழுது அந்த மங்கலான விளக்கொளியில் என் முகத் தோற்றத்தை அவள் கவனிக்காவிட்டாலும் என்னுடைய யோசனையில் சென்ற திக்கை அவள் சட்டென்று கண்டு பிடித்துவிட்டாள்.

"இது மிகவும் அநாவசியம். எதிர்காலத்திற்காக முன் கூட்டியே விதி விதிப்பது முடியாது' என்று நீ எண்ணுகிறாய். ஆனால் நான் 'முடியும்' என்கிறேன். என்னுடைய குருதேவர் சொல்லியிருக்கிறார். இந்த வேலை அவர்களால் முடியாவிட்டால் அவர்கள் சுருதிகளையும் கண்டிருக்க முடியாது. நான் கேட்கிறேன். நமது சுருதிஸ்மிருதி வாக்கியங்களில் உயிர் இருக்கிறது என்று நம்புகிறாயா இல்லையா?" என்று கேட்டாள்.

"நம்புகிறேன்!" என்றேன் நான்.

"நீ நம்பாமலிருக்கலாம். ஆனால் அது எப்பொழுதும் உண்மைதான்! இல்லாவிட்டால் நமது தேசத்தில் நடைபெறும் இந்த மாதிரியான பொம்மைக் கலியாணமே உலகத்திலேயே சர்வ ஸ்ரேஷ்டமான விவாக சம்பந்தமாக இருக்க முடியாது. அதெல்லாம் சிரஞ்சீவி உயிர்பெற்ற அந்த மந்திரங்களின் வேகத்தால்தான். அந்த மகாத்மாக்களான ரிஷிகளுடைய கிருபையால்தான்! அநாசாரமும் பாபமும் எங்கு தான் இல்லை? இங்கேயும் இருக்கிறது! ஆனால் நம்முடைய தேசத்திலிருப்பதைப் போல பதிவிரதா தர்மத்தை நீ வேறு எங்கே பார்க்க முடியும்?"

நான் "காண முடியாது!" என்றேன்.

ஏனென்றால் இது அவளுடைய யுக்திவாதமல்ல. அவளுடைய மனப்பூர்வமான நம்பிக்கை. சரித்திர சம்பந்தமான சர்ச்சையாக இருந்தால் அப்பொழுது உயிர் பெற்ற மந்திரங்களில்லாத தேசங்களும் உலகத்தில் இருக்கின்றன என்றும் அங்கும் பதிவ்ரதா தர்மம் இதே மாதிரி உச்ச நிலையில் இன்றும் இருக்கின்றது என்றும் என்னால் அவளுக்கு எடுத்துக்காட்ட முடியும். அபயாவைச் சுட்டிக்காட்டி நீ சொல்லுவது உண்மையானால் அந்த ஜீவன் பெற்ற மந்திரம் அந்தப் புருஷன் மனைவிகளை ஒரேலட்சியத்தில் ஏன்கட்டு படுத்தவில்லை' என்று கேட்டிருப்பேன். ஆனால் அதற்கெல்லாம் அவசியம் இருக்கவில்லை. சில நாளாகவே அவளுடைய மனோ விருத்தி ஏதோ ஒரு திக்கில்போய் கொண்டிருந்ததை நான் அறிந்திருந்தேன். கெட்ட செய்கையால் ஏற்படும் வேதனையை அவள் நன்றாக அறிந்திருந்தாள். அவள் முழு உள்ளத்துடன் அன்பு செலுத்திய விஷயத்தை, அழுக்குப் பிடித்தாமல், இந்த வாழ்க்கையில் எப்படி அடைவது என்பதைப்பற்றி கொஞ்சமும் யோசித்ததில்லை. அவளுடைய கட்டற்ற உள்ளமும், புதிதாகத் தோன்றின தர்மச் சிந்தனையும் நேர்மாறான தன்மைகளுடன் பிரசண்ட வேகத்துடன், பிரவாகம் போலப் பெருகுவது எப்படி ஓர் இடத்தில் ஒன்று சேர்ந்து, இந்தத் துக்க மயமான வாழ்க்கையில் அதனுடைய புண்ணிய கட்டம போல மாறிவிடும் என்பது போன்றதற்கு அவள் யாதொரு கரையையும் காணவில்லை. ஆனால் நான் கண்டுவிட்டேன்! (தொடரும்.)

ஹிந்தி ஆசான்

உபாத்தியாயர் உதவியில்லாமல் தமிழ் உச்சரிப்பைக்கொண்டே நாலே வாரத்தில் நல்ல ஹிந்தி பாஷையை சுலபமாகக் கற்றுக்கொள்ளலாம். விலை 12 அணா. ஒரு காபி அனுப்ப அணா 14 மணியார்டர் செய்யவம்.

எம். எஸ் ராமுலு கம்பெனி,
286, எஸ்பிளனேட் மதராஸ்.

குழந்தைகளின் ஈரல் குலைக் கட்டிகளுக்கு
பிரபல டாக்டர்கள் ஜம்மி வெங்கட்டரமணய்யாவின் "லிவர்க்யூரை"யே சிபார்சு செய்கிறார்கள்

ஜம்மி'ஸ்
லிவர் க்யூர்
போலிகளைக் கண்டு மோசம் போகாதீர்கள்

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும் அல்லது
ஜம்மி வெங்கட்ரமணய்யா & சன்ஸ்.
1/1, பீரைடன் ரோட், மைலாப்பூர், மதராஸ்.
மதுரை, கல்கத்தா, ... பெங்களூர், திருச்சிராப்பள்ளி.

கர்ப்பத்தைத்தடுக்க "ரஹாத்"

நிச்சயமான மருந்தாகும். மூன்று நாட்கள் உபயோகித்தால் கர்ப்பம் தரிக்காது. ஆர்டருடன் உத்திரவாத பாரமும் அனுப்பப்படும். விலை ரூபா 5/8. அல்லது 10 ஷில்லிங். மாதவிடாய் தவறாமல் ஏற்படும்.

Dr. S. H. KHAN, (S.M.) 42,
Churchgate St., Fort, Bombay.
Phone 21343.

புதிய பதிப்பு! மலிந்த விலை!!

பாரதி நூல்கள்

(நேர்த்தியான காலிகோ பைண்டு)

1.	கவிதைகள்	Vol I	ரூ.	3 0 0
2.	வசனங்கள்	Vol II	,,	3 0 0
3.	கட்டுரைகள்	Vol III	,,	3 0 0
4.	பகவத்கீதை (காலிகோ)		,,	0 8 0
5.	Agni & other Poems & Translations		,,	1 0 0
6.	Essays & other Prose Fragments		,,	1 0 0
7.	சரித்திரம்		,,	0 4 0

பாரதி பிரசுராலயம்,
567, ஹைரோடு, திருவல்லிக்கேணி, மதராஸ்.

அபார சக்திவாய்ந்த டானிக்!

Dr. N. V. ஸ்ரீராமாச்சார்லுவின்

S.K.M.

—ஸித்தகல்ப—
மகரத்வஜம்

60 மாத்திரை ரூ. 10.
30 மாத்திரை ரூ. 5.

விவரத்திற்கு எழுதவும்:
மதராஸ் ஆயுர்வேதிக் பார்மஸி லிமிடெட்.,
த, பெ. நெ. 151. (ஸ்தாபனம் 1915௵) 289, எஸ்பிளனேட், மதராஸ்.

த்யாகராஜ கீர்த்தனம்

[காபிரைட்]

(சங்கீத வித்வான் துறையூர் எம். ராஜகோபால சர்மா)

I

பல்லவி

வராலந்து கொம்மனி நாயந்து
வஞ்சன ஸேய ந்யாயமா

அனுபல்லவி

ஸுரா ஸுரவினுத! ராம! நா மனஸு
ஸுபக்தினி கோரியுண்டக நனு

சரணம்

1. மனமுன நிஜமுக நம்மின வாரி
மனஸு கொன்ச பலமாஸிஞ்சக ரா-
தனுசு கனுனி ஜேஸின நீ பிருதுகு
கனக கசிபு ஸுதுடு ஸாக்ஷி காதா

2. அவிவேகமுதோ தெலிஸி தெலியகனு
பவ ஸுகமுல காஸிஞ்சின கானி
த்ருவ மைன பலமொஸகு நீ சக்திகி
த்ருவுடு ஸாக்ஷி காதா ராம! நனு

3. சராசராத்மக! ஸுர பூஜித! இக
பராகு லேகனு ஸததமு நீத-
யராவலெனனுசு கோரின ஸ்ரீத்யா-
கராஜுனிபை க்ருபலேக நனு

II

ஸுராஸுரவினுத!	—தேவாஸுரர்களாலும் துதிக்கப்பட்டவனே;
ராம!	—ஸ்ரீராமா!
நாமனஸு	—என் மனது
ஸுபக்தினி கோரியுண்டக	—உனது பக்தியிலீடுபட்டு, அதையே விரும்பி நிற்கும் போது
நனு	—என்னை
வராலு அந்து கொம்மு அனி	—வேண்டும் வரன்களைப் பெற்றுக்கொள் என்று சொல்லி
நாயந்து	—என்னிடத்தில்
வஞ்சன ஸேய ந்யாயமா	—வஞ்சனை செய்வது உனக்கு நியாயமாயிருக்கிறதா
மனமுன	—மனதில்
நிஜமுக	—உள்ளன்போடு உண்மையாய்
நம்மினவாரி	—உன்னை நம்பினவர்களின்
மனஸு	—ஹிருதயம்
கொன்ச பலமு	—சிறிதான பலனை
ஆஸிஞ்சகராது அனுசு	—எதிர்பார்க்கக்கூடாதென்று எண்ணம் கொண்டு அவ்விதம் உன்னை உள்ளன்போடு நம்பியபக்தனை
கனுனி ஜேஸின	—மேன்மை பொருந்தியவனாய் செய்த
நீ பிருதுகு	—உன் புகழுக்கு
கனக கசிபுஸுதுடு	—ஹிரண்ய கசிபுவின் பிள்ளையான பிரஹ்லாதன்
ஸாக்ஷி காதா	—ஸாக்ஷியாக விளங்கவில்லையா
அவிவேகமுதோ	—பேதமைக் குணத்தால்
தெலிஸி தெலியகனு	—தெரிந்தும் தெரியாமலும்
பவஸுகமுலகு	—அநித்யமான இஹலோக வாழ்க்கையின் இன்பங்களுக்கு
ஆஸிஞ்சின கானி	—அபேக்ஷை கொண்டாலும்
த்ருவமைன பலமு	—ஸ்திரமானதும் அழிவில்லாததுமான பலனை
ஒஸகு நீ சக்திகி	—அளித்தருளும் உன்சக்திக்கு
த்ருவுடு ஸாக்ஷி காதா	—பாலனை துருவன் ஸாக்ஷியாக விளங்கவில்லையா
ராம!	—ஸ்ரீராமா!
நனு	—என்னை மட்டும்
வராலந்து கொம்மனி	—வேண்டும் வரன்களைப் பெற்றுக்கொள் என்று சொல்லி ஏமாற்றி
வஞ்சனஸேய ந்யாயமா	—வஞ்சனை செய்வது நியாயமாகுமா.
சராசராத்மக!	—எங்கும் நிறைந்த பொருளே!
ஸுரபூஜித!	—தேவர்களால் பூஜிக்கப்பட்டவனே!
இக	—இனிமேலாவது
பராகு லேகனு	—அலக்ஷ்யமாயிராமல்
ஸததமு	—எப்போதும்
நீ தய ராவலெனு அனுசு	—உன் தயவு கிட்ட வேண்டுமென்று
கோரின	—பிரார்த்தித்து வேண்டிக்கொண்ட
ஸ்ரீத்யாகராஜுனிபை	—த்யாகராஜன் என்று பெயர்கொண்ட என்னிடம்
க்ருபலேக	—தயை கொள்ளாமல்
நனு	—என்னை
வராலந்து கொம்மு அனி	—வேண்டும் வரன்களைப் பெற்றுக்கொள் என்று சொல்லி ஏமாற்றி
வஞ்சன ஸேய ந்யாயமா	—வஞ்சனை செய்வது நியாயமானதா

IMMEDIATE VASHIKARAN

On contract basis we undertake to influence or subjugate like spellbound anyone or more persons (male or female) instantly and surely cause them entirely at your own grasp quite easily. Particulars against Stamps. SANTI ASRAM, Dacca (Bengal)

கேஸ்ரின் ரிஜிஸ்டர்டு
அழகாகவும்
அடர்த்தியாகவும்
புஷ்டியாகவும்
கூந்தலை
வளர் விக்கும்
விலை 12 அணா
விக்டோரியா டிபோ,
மைலாப்பூர், மதராஸ்.

உண்மை
உறுதிக்கும்
உத்திர
வாதம்.

"ஷண்முகம்
பிராண்டு"
ஸ்டீல் டிரங்கு
& சூட்கேஸ்கள்
தேவைக்கு வேண்டிய புது மாதிரி தினுசுகளில் கிடைக்கும்.

ஷண்முகம்பிராண்டு ஸ்டீல்டிரங்குஒர்க்ஸ்
தயாரிப்பவர்:- சி. ஞானசுந்திர நாயகர்,
P. 3094, 341. எஸ்பிளனேட், மதராஸ்

உங்களுக்கு
மலச்சிக்கலோ அல்லது
ரத்தக்கொதிப்போ அல்லது
மண்டை கனமோ அல்லது
தலைவலியோ அல்லது
மயக்கமோ அல்லது
வாய்துர்நாற்றமோ அல்லது
சருமப்படுவனோ இருந்தாலும்
உடனே பரீக்ஷியுங்கள்
காஸ்டபீன்

ருசி மிகுந்த சாக்லட் மலவிரோசனி. மலச்சிக்கலை ஒழிக்க பத்திரமும் நிச்சயமுமான வழி.

குழந்தைகள், நடுவயதினருக்கும், ஆரோக்யம், பலத்தை அளித்திருக்கின்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் 2 சாக்லட் உள்ள பாகெட் ஒரு அணா. ஒவ்வொன்றும் 25, 50, 100 கொண்ட பாட்டில்களிலும் கிடைக்கும்.

CASTOPHENE
CASTOR OIL CHOCOLATES
ஏஜண்டுகள் :—
மெஸர்ஸ்:
சிவராம் & ஸ்வாமி லிமிடெட்.
154, தைனியப்ப நாயக்கன் தெரு,
பி. டி., மதராஸ்.

III

ஸ்ரீராமன் தன் மனோ நிலையை சோதிப்பதாக உணர்ந்த ஸ்வாமிகள், தனக்கு ஒன்றிலும் விருப்பமில்லை என்றும், பகவத் பக்தி ஒன்றையே தன் மனம் நாடுவதாகவும் தெரிவித்துக் கொண்டு, மற்ற பக்தர்களை ரக்ஷித்தருளிய தன்மையில் தன்னையும் ஏற்று ரக்ஷித்தருளாமல் வஞ்சனை செய்து வருவது நியாயமில்லை என்றும் இக் கீர்த்தனத்தால் பகவானிடம் முறையிட்டுக் கொள்கிறார்.

வராலந்து:—ஸ்வாமிகள் பகவத் ஸ்வரூபத்திலீடுபட்டு அவரை ஸதா பஜனம் செய்து வந்து இறுதியில் தன்னை பிறவிக் கடலினின்று மீட்டு, நித்யமான பதவியை அளித்து அனுக்ரஹிக்குமாறு பகவானை வேண்டினார். அத் தருணம் பகவான் காக்ஷியளித்து ஸ்வாமிகளுக்கு மற்றோர் பிறவி உண்டென்றும், அப்பிறப்பின் முடிவில் முக்தி ஏற்படும் என்றும் அருளி மறைந்தார். அச் சந்தர்ப்பத்தில் ஸ்வாமிகளால் பாடப்பட்ட கீர்த்தனங்களில் இதுவும் ஒன்று என்பது சிலர் கருத்து. இங்கு ஸ்வாமிகள் மற்ற பக்தர்களை ரக்ஷித்து அருளியது போன்று தன்னை ரக்ஷித்தருளாமல் வஞ்சனை செய்வது சரியல்ல என்று பகவானிடம் சொல்லி முறையிட்டுக் கொள்கிறார். இதே போன்று 'அருட்ப்ரகாச வள்ளல்'

பிட்டுக்கும் வந்து மூண் மண் சுமந்தாயென்பர் பித்தனென்ற
திட்டுக் குஞ்சிரருள் செய்தளித்தாயென்பர் தீ விறகுக்
கட்டுக்கும் பொன் முடி காட்டி நின்றாயென்பர் கண்டிடவென்
மட்டுக்கும் வஞ்சகத் தெய்வமென் கோமுக் கண் மாணிக்கமே—என்ற பாடலில் தெரிவித்திருப்பது கவனிக்க தக்கது.

ஸுராஸுர:—திருமங்கையாழ்வார் அருளிய
பச்சைமா மலை போல் மேனி பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா! அமரரேறே! ஆயர்தம் கொழுந்தே யென்னும்
இச்சுவை தவிரயான் போயிந்திர லோகமாளும்
அச்சுவை பெறினும் வேண்டேனரங்கமாநகருளானே

என்ற பாசுரத்தில் தெரிவித்துள்ளது போன்று ஸ்வாமிகள் பகவத் பக்தியைத் தவிர தன் மனது வேறு ஒன்றையும் விரும்பி நிற்கவில்லை என்ற உண்மையை வெளியிட்டுள்ளார். அவ்விதம் பகவத் பக்தியை கோரி நிற்கும் தன்னை பகவான் இஹலோக சௌக்யங்களை அனுக்ரஹிப்பதாக சொல்லி ஏமாற்றுவது சரியல்ல என்று குறிப்பிடுகிறார்.

மனமுன:—இந்தச் சரணத்தால் ஸ்வாமிகள் 'ப்ரஹ்லாதனுக்கு' 'பகவான்' அருள் புரிந்த வரலாற்றை பகவத்கருணைக்கு உதாரணமாக எடுத்துக் காட்டியுள்ளார். ஸ்ரீமத் பாகவதம் 7-வது ஸ்கந்தத்தில் இக்கதை விவரிக்கப் பட்டுள்ளது.

அவிவேகமுதோ:—பகவான் துருவனுக்கு அருள் புரிந்த வரலாற்றை இந்தச் சரணத்தால் விவரிக்கிறார். இக்கதை ஸ்ரீமத்பாகவதம் 4-வது ஸ்கந்தத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

சராசராத்மக:—இந்தச் சரணத்தால் ஸ்வாமிகள் தன்னையும் மற்ற பக்தர்களுக்கு சமானமாகக் கொண்டு அவர்களை ரக்ஷித்தருளியது போன்றே தன்னையும் ரக்ஷித்தருளுமாறு பகவானிடம் வேண்டிக் கொள்கிறார்.

IV

ராகம் குர்ஜரீ — ஆதி தாளம்

(15-வது மேள ஜன்யம் ஆ. ஸம்பூர்ணம் அவ. ஸ்தநிபதப மகரிஸ)

பல்லவி

1.	கா கா ; கா	; மா கா மா	பா தா	பா மா	கா மா	கா ரி
	வ ரா லந்	து கொம் .	. .	ம னி	நா .	ய ந் து
2.	கா கா ; கா	; மா கா மா	கம பத	பத பம	கம பம	கா ரீ
	வ ரா லந்	து கொம் .	. . . .	ம . னி .	நா . . .	ய ந் து
3.	கா கா ; கா	; மா கம பா	மப தா	பத நீ	பத பம	கரி ஸரி
	வ ரா லந்	து கொம் . .	. . .	ம . னி	நா . . .	யந் து .
4.	கரி ஸரி கரி ரிக	மா மா கமபத	நிஸ் தநீ	பத ம	தத பம	கரி ஸரி
	வ . ரா . . லந் .	. து கொம் . .	. . ம .	னி . .	நா . . .	யந் . து .
1.	கம பத பா மா	காரீ ஸாரீ	கா மா	கா ரீ	ஸா ;	; ;
	வஞ் . . . சன	ஸே . . ய	ந்யா .	. ய	மா	
2.	கம பத பா மா	காரீ ஸாரீ	கம பத	நிஸ் தநி	பத பம	கரி ஸரி
	வஞ் . . சன	ஸே . . ய	ந்யா . .	. . ய .	மா . . .	. . . .

அனுபல்லவி

1.	பா தா ; நீ	ஸ்ா தா தா நீ	ஸ்ா ;	ஸ்ா ஸ்ா	தா நீ	பா மா
	ஸு ரா ஸு	ர வி னு த	ரா	ம நா	. ம	ன ஸு
2.	பா தா ; நீ	ஸ்ா தா தா நீ	ஸ்ரி க்ா	ரிஸ் ஸ்ா	தா நீ	பா மா
	ஸு ரா ஸு	ர வி னு த	ரா .	ம . நா	. ம	ன ஸு
3.	பா தா ; நீ	ஸ்ா தா தா நீ	ஸ்ரி க்ா	ரிஸ் ஸ்ா	தா தா	நீ ஸ்ா
	ஸு ரா ஸு	ர வி னு த	ரா . .	ம . நா	. ம	ன ஸு
1.	ஸ்ா ஸ்ா ; ஸ்ா	தா நீ பா பா	மா தா	பா மா	கா மா	கா ரீ
	ஸு பக் தி	னி . கோ .	ரி யுண்	. .	ட க	ந னு
2.	ஸ்ரிக்மாக்ரீ	ஸ்ா தா நீ மா	பா கம	பத நீ	பத பம	கம கரி
	ஸு . பக் . . தி .	னி . கோ .	ரி யுண்	. . .	ட . க .	நன் . னு .

சரணம்

1.	பா பா ; பா	பா ; பா மா	பம பத	பம மா	மக பம	கரி கம
	ச ரா ச	ராத ம க	ஸு . ர .	பூ . .	ஜி . த .	இ . க .
2.	பா பா ; பா	பதநீ பத பம	கா மா	பத பம	கம பம	கரி ரீ
	ச ரா ச	ராத் . . ம . க .	ஸு ர	பூ . . .	ஜி . த .	இ . க
	ஸா தா ; நீ	ஸா ; ரீ கா	; க மா	ப மா	கா ;	ரீ ஸா
	ப ரா கு	லே க னு	ஸ த	த மு	நீ	. த
	பா தா ; நீ	ஸ்ா தா தா நீ	ஸ்ா ;	ஸ்ா ஸ்ா	தா தா	நீ ஸ்ா
	ய ரா வ	லெ ன னு சு	கோ	ரி ன	ஸ்ரீ .	த்யா .
1.	ஸ்ா ஸ்ா ; ஸ்ா	தா நீ பா மா	மா தா	பா மா	கா மா	கா ரீ
	க ரா ஜு	னி . பை .	க் ரு ப	லே .	க .	ந னு
2.	ஸ்ரிக்மாக்ரீ	ஸ்ா தா நீ மா	பா கம	ப த நீ	பத பம	கம கரி
	க . ரா . . ஜு	னி . பை	. க்ரு .	ப . லே	க . . .	ந . னு .

(ஸங்கீத வித்வான் உமையாள்புரம் எஸ். வெங்கடராமையர் இந்தக் கீர்த்தனத்தின் வர்ணமெட்டை உதவினார்)

Coffee
Ours for Quality

RAW, ROAST OR GROUND
GANESH & Co
39 THAMBU CHETTY ST. MADRAS
RETAIL BRANCH 285 CHINA BAZAR RD.

பயஸ்யா

தாய்மார்களே!
குழந்தைகளுக்கு
தாய்ப்பால்
தவிர மற்ற எந்த உணவும் ஏற்றதல்ல.

உங்கள் பாலை விருத்தி செய்து கொண்டு குழந்தைகளை நீங்களே ஆரோக்கியமாய் வளருங்கள்.

தாய்ப்பாலினால் வளர்ப்பது ஆரோக்கியம் மட்டுமல்ல. மிகச் சிக்கனம்கூட.

பயஸ்யா (Regd)
தாய்ப்பாலை மிகுதியாய் உண்டு பண்ணும் உத்தம ரஸாயனம்.
விலை ரூ. 2—8—0
(Packing & Postage Extra.)
எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.
அல்லது நேரில்:—
ஆத்ரேய ஆயுர்வேதிக் ஒர்க்ஸ்,
தென்னூர்ரோடு, திருச்சினாப்பள்ளி.
Prop. V. B. Nataraja Sastri,
Ayurvedacharya.
(தாய்மாருக்கு உபயோகமுள்ள பயஸ்யா புஸ்தகம் இனும்.)

நினைவிருக்கட்டும்

தேகாரோக்கியம் கெடாமலிருப்பதற்கு எப்படி கலப்பற்ற சுத்தமான உணவு உட்கொள்ளுகிறோமோ அதுபோலவே, கண்களுக்கும், மூளைக்கும் கெடுதல் நேரிடாது. ஞாபக சக்தியும் சுறு சுறுப்பும் அடைவதற்கு கலப்பற்ற பொடியே அவசியமென்பதை பொடி உபயோகிக்கும் சகோதரர்கள் அறிதல் வேண்டும். இவ்வித கலப்பற்ற பொடிக்கு மதராஸ் ஸ்ரீ அம்பாள் அண்டு கம்பெனி, யார் 35 ஆண்டுகளாக் புகழ் பெற்றவர்களென்பது யாவரும் அறிந்ததே. பொடி வாங்கும் போது ஸ்ரீ அம்பாள் பட்டணம் பொடியையே கவனித்து வாங்க நினைவிருக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

நவநாகரீகம்

★

ஒரு விருந்து

★

காசினி எழுதியது

* * * '**மா**மி! மாமி ஆத்தில் இல்லையா?' என்று கேட்டுக்கொண்டே லேடி சுந்திராசாரியின் பெண் உள்ளே வந்தாள்.

'இருக்காளே! என்ன விசேஷம்?' என்று என் அத்தை பதில் சொன்னதும் என் காதில் கேட்டது. நான் ஒரு நவீனத்தில் ஆழ்ந்திருந்தேன்: கதை முடிய இன்னும் இரண்டே பக்கங்கள் தான் இருந்தன. கதாநாயகன் தான் காதலித்த ஏழைப் பெண்ணை யார் தடுத்தும் கேட்காமல் மணந்து, காதலின் வெற்றிக்கொடியைப் பறக்க விடுவானு. அல்லது குலமும், பணமும், அந்தஸ்துமே வாழ்க்கையில் நிரந்தரமானது என்று தீர்மானித்து, காதலியை திரஸ்கரித்து பக்கத்து ஊர் ஜமீன்தார் மகளை மணப்பானு என்பது அடுத்த பக்கத்தில் தெரிந்துவிடும். நான் பக்கத்து அறையில் இருப்பதை வெளிக்காட்டிக் கொள்ளாமல், ஒரு காதால் இவர்கள் சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டே படித்தேன்.

'விசேஷம் ஒன்னும் இல்லை; அம்மா நாலு சிநேகிதிகளை இன்று சாப்பிடக் கூப்பிட்டு இருக்காள். இதுக்கு மாமியை ஏதோ கேட்க வேணுமாம்! கட்டாயமாகக் கையுடன் அழைத்து வரச் சொன்னுள்!' என்றுள் லேடி சுந்திராசாரி மகள்.

இதற்குள் கதையின் முடிவைத் தெரிந்துகொண்ட நான், எழுந்து வெளியே வந்து அவளுடன் லேடி சுந்திராசாரி வீட்டுக்குப் போனேன்,

'ரங்கூனில் இருந்து இரண்டு சிநேகிதிகள் வந்திருக்கா; நாளைக்கே அவா சொந்த ஊருக்குப் போருள். இவாளுக்கு மேஜையில் சாப்பிடடு வழக்கம், உங்களைச் சேர்த்து இன்னும் நாலு பேர்கள்தான் கூப்பிட்டு இருக்கேன். சமையல் என்ன பண்ணலாம்; சொல்லுங்கோளேன்!' என்றுள் லேடி சுந்திராசாரி.

சமையல் இந்திய முறையில் இருக்க வேண்டும்; மேஜையில் பரிமார சௌகரியமாகவும் இருக்க வேண்டும், கடைசியில் முதலாவதாக சப்பாத்தியும், பல காய்கறி சேர்ந்த கூட்டும், இரண்டாவதாக தேங்காய்ச் சாதம் தக்காளி, குடமிளகாய் கட்லெட், உருளை வருவல், மூன்ருவது சேமியாப் பாயசம், நாலாவது கெட்டித் தயிர், என்று தீர்மானித்தோம். பிறகு பழங்கள், ஐஸ்-க்ரீம் காபி இருந்தன. இதை எல்லாம் ரொம்பவும் நாசூக்காய் பண்ணி பரிமாறினுர்கள். இவர்கள் வீட்டில் அன்று நடந்த விருந்து, ஆடம்பரமே இல்லாமல், நாகரீகமாகவும், ருசியாகவும் இருந்தது. விருந்தாளிகளில் ஒருத்தியான லேடி சின்னையாவின் பெண் மட்டும் 'எனக்கு சாப்பிட்டாப்லேயே இல்லை. உள்ளங்கை அகலம் ஒரு சப்பாத்தி; இதற்கு ஒரு ஸ்பூன் கூட்டு; ஒரு பிடி தேங்காய்ச் சாதம், நாலு வருவல், கட்லெட் தினுசில் ஒன்ருவது போடக்கூடாதோ; ஏதாவது ஒன்னு என்று பரிமாறினுர்களே ஒரு வாய் பாயசம்; ஒரு வாய் தயிர்! வீட்டுக்குப் போவதற்குள் பசி எடுத்து விட்டது!' என்றுள்.

'இப்படி சாப்பாட்டு ராமியாக இருந்தால் என்ன செய்யலாம்? வேணுமாஞல் சாப்பிடுகிறது தானே? எல்லாம் இரண்டு தரம் கேட்டார்களே?' என்றேன்.

'அந்த ரங்கூனில் இருந்து வந்திருக்கும் பெண்களுக்கு பயம் இன்னும் தெளியவில்லைபோலிருக்கு! அவாளுக்கு எதிலும் உற்சாகமில்லையே?' என்றுள் நளினுதேவி.

'அதுதான் அவா போட்டதையும் சரியாகச் சாப்பிடவில்லை. ஏதோ முதலில் உட்கார்ந்து இருந்தாலும் தேவலை! முதலில் அவா வேண்டாம் என்க, அப்புறம் வரிசையாக நீங்கள் மூனு பேர் வேண்டாம் என்க, எனக்கு இன்னும் கொஞ்சம் வேணும் என்று கேட்க எப்படி தைரியம் இருக்கும்?' என்றுள் லேடி சின்னையாவின் மகள் நாங்கள் எல்லாரும் சிரித்தோம். விருந்து நான் முதலில் சொன்னபடி நாசூக்கான விருந்து; இதில் நிறையச் சாப்பிடுவதும் ஒருவித அநாகரீகம்தான் என்று வைத்துக் கொள்ளேன், ஆனல், செய்து, பரிமாறின முறை அலங்காரமாக இருந்தது.

ஒரு புடவை

இந்த விருந்துக்கு வந்திருந்தவளில் ஒருத்தி ஒரு புடவை கட்டிக்கொண்டு வந்திருந்தாள், சாதாப் புடவைதான்; இருந்தாலும் பார்க்க நன்ருக இருந்தது. கறுப்புப் புடவை, இதன உடலில் மங்களான வெளுப்புக் கோடுகளில் வேலுதரிமாதிரிப் போட்டிருந்தது. இதை சற்றே தூரம் விட்டு, விட்டுப் போட்டிருந்தது. ஐந்து விரல் அகலத்துக்கு ப்ளிச்சென்று மஞ்சள் கரை போட்டிருந்தது, இதிலும் சுமாருக்கு ஆரணிச் சீர் தினுசில் வெளுப்புக் கோடுகள் போட்டிருந்தது. முக்கால் முழ மஞ்சள் தலைப்பு. சரிகை என்ற பேச்சை கிடையாது. இருந்தாலும் புடவை ஒருவித கம்பீரமான தோற்றத்துடன் விளங்கிற்று.

மடி வடாம்

'**நா**ன் இன்னும் ஐந்தாறு நாட்களுக்குக் கிளப்புக்கு வரமாட்டேன்!' என்றுள் பங்கஜம்.

'ஏன்? எங்கேயாவது ஊருக்குப் போகப்போகிருயா?' என்று மாலினி கேட்டாள்.

'இல்லை; எங்க மாமியார் இப்போவே வருஷாந்திரத்துக்கு வத்தல் வடாம் போட்டு வைக்க வேண்டும், குண்டு விழும் என்கிறுளே? எப்படி இருக்குமோ,

டில்லி இந்திரப்ரஸ்தா சிறுமிகள் கலாசாலை மாணவிகள் சிலர் வேடிக்கை வேஷம் தரித்துக் காட்சியளித்தனர்.
(என். என். பி. எஸ்.)

என்னமோ என்கிருள்!' என்றுள் பங்கஜம்.

'ஆமாம்; அப்படி ஒரு நெருக்கடி ஏற்பட்டால் வருஷாந்திர வத்தல், வடாத்தையும் தூக்கிக் கொண்டு ஓடுவீர்களோ?' என்றுள் சுலோசனு.

'நாங்கள் தான் எங்கும் போகப் போகிறதில்லையே? மாமியார் சொல்லருர்—அப்புறம் சௌகரியம் எப்படி இருக்குமோ, இப்போவே போட்டு வைச்சு விடலாம் என்று, நாளைக்கு பிரண்டை வடாம் போடப் போகிறோம்!' என்றுள் பங்கஜம்.

'அதுதான் பத்து ஆச்சே? உங்காத்தில்தான் மடி பிடிப்பீர்களே? என்று மாலினி ஆக்ஷேபித்தாள்.

'நாங்கள் பத்து இல்லாமல் மடிவடாம் போடுவோம்?' என்று சொல்லி பங்கஜம் முறையையும் சொன்னுள்.

ஒரு படி அரிசிக்கு, இலைகணு முதலியவற்றை நீக்கி, பொடியாக நறுக்கப்பட்ட பிரண்டை அரைப்படிக்குத் தாழ்வாக எடுத்துக் கொள்ள வேண்டும். பிரண்டையைத் தண்ணீரில் நன்ருக வேக வைத்து அரிசியை முத்துபோல் களைந்து கொதிக்கும் பிரண்டையில் கொட்டி, இறக்க வேண்டும். இது ஜில் என்று ஆறினதும் திட்டமாக உப்புக் காரம் போட்டு உரலில் நன்ருக அரைக்க வேண்டும். இந்த மொத்தையை முள்ளுத் தேன்குழல் நாழியில் பிழியலாம்; அல்லது தட்டை வடாமாக இடலாம். ருசியாக, நன்ருக இருக்குமாம். 'இதைச் சொல்லி விட்டு, வீட்டில்வேலை இருக்கு' என்று பங்கஜம் போய்விட்டாள்.

'இப்படியும் மனுஷாள் இருப்பாளோ? எது என்ன ஆனலும் தான் மட்டும் சாசுவதமாக, வடாம் சாப்பிட ஜீவித்திருக்கப் போவதாக இவள் மாமியார் நினைக்கிருளா?' என்று மாலினி சிரித்துக் கொண்டே கேட்டாள்.

'என்னமோ பாவம்! கர்நாடக மனுஷி. இதெல்லாம் எதைக் கண்டாள். மேலும் வாழ்க்கை அநித்தியம் என்பது தெரிஞ்சும் நாம் சாஸ்வதம் என்று நினைப்பதே பெரிய அதிசயம் என்று தர்மபுத்திரர் சொல்லவில்லையோ?' என்றுள் என் அத்தை.

அறிக்கை

Dr, பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதரின்

ஓர் புதிய பிராஞ்சு

குமபகோணம்

நெ. 7 சாரங்கபாணி கோவில் கீழ வீதியில்
ஸ்தாபிக்கப்பட்டிக்கிறது

வைத்ய நிபுணர் குழந்தைகளை பரீக்ஷிப்பார்

பாத்ருடுவின்

"பால சஞ்சீவினி"

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டியை குணப்படுத்தும்

11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ். போன்: 86257.

திருச்சி பிராஞ்சு: 81, ஆண்டார் தெரு, தெப்பகுளம்.

சித்திரமும் சிருங்காரமும்

★

'பக்தாத் திருடன்'—ஸாபு நடிக்கும் படம் — அராபிக் கதைகளின் ஒரு பகுதி — மற்றும் சில காதல் சம்பவங்கள்.

மன நிம்மதி

"பக்தாத் திருடன்" என்ற யுனைடட் ஆர்டிஸ்ட் படத்தில் நடிக்கும் ஜூன் டுப்ரேயும், ஜான் ஜஸ்டினும்

'பக்தாத் திருடன்'

அராபித் தலை நகரான பக்தாத்தில் ஆபு என்ற சிறுவன் தன்புத்தி சாதுர்யத்தினுல் வாழ்க்கையை நடத்திவருகிருன். ஏதாவது ஒரு பெரிய மதிற்சுவர் மேல் ஏறி படுத்துக்கொள்வது அவனுடைய வழக்கம். அவ்வழியே ஒட்டகைகள் மீதும் கழுதைகள் மீதும் ஏற்றிச் செல்லப்படும் பழக் கூடைகளிலிருந்து பழங்களை தன் கையை நீட்டி அவன் அபகரித்துக்கொள்வான். இவ்வாறு கொண்டு போகப்படும் கூடைகளில், ஏதாவது ஒன்று காலியாயிருந்தால் அவன் அந்த கூடைக்குள் ஒளிந்து கொண்டு அதில் பொத்தல் பண்ணி, மார்க்கட் பக்கமாகப் போகும்போது, திருடுவதுண்டு. கூடை தவறி கீழே விழுந்துவிட்டால் ஆபு என்ன செய்வான் என்று கேட்கலாம்? கடைக்காரன் கையில் சிக்குபவன் அவனு? அதிவேகமாக ஆபு தப்பியோடிவிடுவான். இவ்வாறு பல நாள் அவன் காலம் கழித்தான்.

பல நாள் திருடன் ஒரு நாள் அகப்பட்டான்! ஆபுவை சிறைப்படுத்திவிட்டனர் அதிகாரிகள். மரண தண்டனையும் அவனுக்கு விதிக்கப்பட்டது, தன் தலைக்கே விபரீதம் ஏற்பட்டதையும் அவன் லக்ஷியம் பண்ணவில்லை. எப்படியாவது தப்பிவிடலாம் என்பதே அவன் நம்பிக்கை. சிறைக்காவலாளியிடமிருந்து சிறைச் சாவியைத் திருடிவிட்டான். தனக்கு மட்டுமல்ல, காவலில் வைக்கப்பட்டு; மறுநாள் மரண தண்டனையடைய விருந்த நிபராதியான ஆமத் உன்ற ரூபவானின் விடுதலைக்கும் ஆபு வழி தேடிவிட்டான். பக்தாத் பட்டதிற்கு வர வேண்டியவன் ஆமத் தான். க்ரூர புத்தி படைத்த மந்திரி ஜபார் தான் இந்த சூழ்ச்சிக்குக் காரணம். இவை யாவும் பின்னர் தான் ஆபுவுக்கு தெரிய வந்தன: ஆயினும் திருட்டுச் சாவியின் உதவியினுல் அஸ்தமனுதிற்கப்புறம் இருவரும் காராக்ருஹத்தை விட்டு வெளிக்கிளம்பினர் அவசரம் அவசரமாக நதி தீரத்திற்குப்போய், ஒரு படகில் ஏறி பாஸ்ராவுக்குப் பிரயாணமானுர்கள் அவர்கள்.

பாஸ்ரா சுல்தான் வயது முதிர்ந்தவன். அவன் குமாரி அழகு மிகுந்தவள்: ஆகவே அவளை நேரில் உற்று நோக்குபவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு வந்தது: பாஸ்ரா வந்த பின் ஒரு நாள் ஆமத்தும் ஆபுவும் ஒரு ஊர்வலத்தைக் கண்டனர்: ராஜாக்னையையும் பொருட்படுத்தாமல் ஆமத் வெளியே எட்டிப் பார்த்த போது ராஜ குமாரியின் சௌந்தர்யத்தைக் கண்டுவிட்டான். எப்படியாவது அவளையே மணக்க வேண்டும் என்ற ஆசை உதயமாகி விட்டது. இதற்கு எப்படி வழி தேடுவது? இது அவ்வளவு சுலப சாத்தியமானதா?

ஒரு நாள் ராஜகுமாரி தனது தோழிமாருடன் தோட்டத்தில் உல்லாஸமாக விளையாடிக்கொண்டிருக்கையில், அங்கிருந்த தடாகத்திலிருந்து ஒரு உருவம் மேலே கிளம்புவதைக் கண்டனர் ஏதோ பூதம் வந்து விட்டது என்று அலறிக்கொண்டு, தோழிகள் அங்குமிங்கும் ஓடத் தலைப்பட்டனர். ஆனல் ராஜகுமாரிமட்டும் ஆவல்மேலீட்டால் இடத்தை விட்டு நகரவில்லை. அந்த ரூபம் தன்னை பார்க்கவே வந்திருப்பதாகக் கூறுவது அவள் காதில் விழுந்தது. பிறகு ஆமத் தரைக்கு வந்து ராஜகுமாரியிடம் தன் வரலாறு பூராவையும் விவரிக்கிருன்: தனது காதலையும் ஒளிக்கவில்லை. ராஜகுமாரியும் தனது ஆசையை அவனிடம் வெளியிடுகிருள்: தோட்டத்தில் தாங்கள் சந்திக்க அவர்கள் ஏற்பாடு செய்து கொள்கின்றனர்.

இதே தினம் பாஸ்ரா சுல்தானின் அதிதியாக பக்தாத் மந்திரி வந்து சேர்ந்தான். சுல்தானுக்கு ஆச்சர்யமான பொருள்களைச் சேகரிப்பதில் அதிக ஆவல் உண்டு: இதை யறிந்த மந்திரி ஜபார், சுல்தானுக்காக ஆகாயத்தில் பறக்கும் குதிரையொன்றைக் கொண்டு வந்திருந்தான். ராஜகுமாரியைத் தனக்கு மணம் புரிவித்தால் தான் இந்தக் குதிரையைக் கொடுக்கத் தயாராயிருந்தான் ஜபார்.

சீக்கிரமே
வெளிவருகிறது

உமா பிக்சர்ஸ்

தமிழறியும் பெருமாள்

M.R. சந்தானலக்ஷ்மி.
M.S. தேவசேனு.
K.L. ராஜம்.
குமாரி மங்களம்:
C.T. ராஜகாந்தம்.
T.S. ஜெயா.
V.A. செல்லப்பா.
R. பாலசுப்ரமணியம்.
T.S. துரைராஜ்.
காளி.ல. ரத்தினம்.
ராமச்சந்திரன்.
நடராஜ ஐயர்.
முதலியோர் நடித்தது

டைரக்ஷன்
டி. ஆர். ரகுநாத்
கதை, வசனம்
"இளங்கோவன்"
ஸ்டுடியோ
நியூடோன்

இப்படத்தின் இனிமையான பாடல்களை "கோலம்பியா" ரிகார்டுகளில் கேட்டானந்தியுங்கள்.

பூரண உரிமையாளர்:

தியாகராஜ் பிலிம்ஸ் லிமிடெட்.,

81; பெரிய செட்டித் தெரு, திருச்சினுப்பள்ளி.

தந்தி. "தியாகராஜ்" .... போன்: 102



தியாகராஜா பிலிம்ஸாரின் "தமிழறியும் பெருமாள்" என்ற படத்தில் நடிக்கும் எம். ஆர் சந்தான லக்ஷ்மி.

இவ்விஷயத்தை ஒளிவிலிருந்து கேட்ட ராஜகுமாரி இதிலிருந்து தப்பி யோடத் தீர்மானிக்கிறாள். புருஷவேஷம் பூண்டு அந்த குதிரைமீதேறி சமுத்திரக்கரை பக்கமாகப் புறப்படுகிறாள் அவள்.

ராஜகுமாரியின் ஓட்டம் மறுநாள் தான் வெளியாகியது. பல இடங்களிலும் தேடிப் பார்த்தனர்: ராஜகுமாரி அகப்படவில்லை: ஆனால் தோட்டத்தில் ஆமத்தையும் ஆபுவையும் மட்டும் கண்டு பிடிக்கின்றனர். இருவரையும் சுல்தான் முன்பும் ஜபார் முன்பும் கொண்டு வந்து நிறுத்துகின்றனர். ஆமத் ஜபாரைப் பார்த்ததும் தன்னுடன் கத்திச் சண்டைக்கு அழைக்கிறான். ஜபாருக்குக் கத்தி எதற்கு? அவனுக்குத் தான் மந்திர ஜாலம் தெரியுமே! தனது மந்திர சக்தியால் ஆமத்தைக் குருடனாக்குகிறான்: ஆபுவை ஒரு நாயாக மாற்றி விடுகிறான்: ராஜகுமாரியை ஆமத் எப்போது கை பிடிக்கிறானோ, அன்றுதான் பழைய உருவம் கிடைக்குமென்றும் ஜபார் விதிக்கிறான்.

பல வாரங்கள் போயின: பல மாதங்களும் மறைந்தன. தப்பியோடிய ராஜகுமாரி இருந்த கப்பலை, அடிமை வர்த்தகம் புரியும் சில கொள்ளைக் கூட்டத்தார் பிடிக்கின்றனர்: ராஜகுமாரியையும் அடிமைப் படுத்திய அவர்கள் பாஸ்ரா வருகின்றனர்: அங்கு ஜபாரிடம் அவளை விற்று விடுகின்றனர்: ஜபார் மனோரதம் ஒருவாறு நிறைவேறியதாயினும், அதனால் பலன் இல்லை: ராஜகுமாரி மயக்கமாக வீழ்ந்து கிடக்கிறாள். தனது கனவிலும் ஆமத்தைப் பற்றியே அவள் சிந்திப்பதால், ஆமத் வந்தால் தான் அவள் விழிப்பாள் என்பது ஜபாருக்குத் தெரியும். எப்படியாவது தன் காரியத்தை ஆமத் மூலம் நிறைவேற்றிக் கொள்ள வெண்டும் என்று நிச்சயித்தான் ஜபார்.

தன் நாய் ஆபுவுடன் குருட்டு ஆமத் தெருக்களில் பிச்சை யெடுக்கிறான். ராஜகுமாரியின் தோழி திருட்டுத் தனமாக ஆமத்தை ராஜகுமாரியிடம் அழைத்துப் போகிறாள்: காதலர் சந்திப்பு மிகவும் பரிதாபகரமாக இருக்கிறது. ஆமத் குரலைக் கேட்டு ராஜகுமாரி விழித்துக் கொள்கிறாள்: ஆனால் ஆமத் கண் இழந்திருப்பதையும் அவள் காண்கிறாள்: ஆனால் இருவரது காதல் மட்டும் பங்கமாகவில்லை: மறுபடியும் ஒன்று சேரமுடியும் என்ற நம்பிக்கையுடன் அவர்கள் இருவரும் பிரிகின்றனர்.

இதற்குப் பின்னர் ஜபார் போட்ட திட்டம் வேறு. ராஜகுமாரியை ஏமாற்றி ஒரு கப்பலில் அவன் அழைத்துக் கொண்டு போகிறான். உடன் சென்ற நாய் ஆபுவை சமுத்திரத்தில் தள்ளிவிட, அது கரைக்கு நீந்திக் கொண்டே வந்து சேருகிறது: கப்பலில் ஜபார் பலவந்தம் பண்ண முயற்சித்த போது, தனது காதலனுக்குக் கண் பார்வை வந்தால் ஜபாரைத் தான் ஏற்பதாக அவள் கூறுகிறாள்: இதனால் ஆமத் பார்வையை மறுபடியும் பெறுகிறான்: நகரில் தவித்துக்கொண்டிருக்கும் சமயம் ஆபுவுக்கு திருஷ்டி ஏற்படுகிறது. கரையேற தத்தளிக்கும் நாயும் பழையபடி சிறுவனாக மாறி விடுகிறது.

பலவானான ஜபாரை எதிர்த்து நின்ற ராஜகுமாரியை எப்படி மீட்பது என்ற கவலையே ஆமத்தை வாட்டுகிறது. இது எதற்கும் பின்வாங்கக் கூடாது என்ற முடிவுக்கு வருகிறான்: ஆபுவும் இச் சமயம் வந்து சேர, இருவரும் படகிலேறி ஜபார் கப்பலைத் துரத்திக் கொண்டு கிளம்புகின்றனர்.

ஜபாரின் மாய சக்தி இங்கும் விட்டபாடில்லை. ஆமத் இருந்த கப்பலைத் தவிக்க வைக்க பெரும் புயலை ஜபார் கிளப்பி விடுகிறான்: ஆமத்தும் ஆபுவும் மிகவும் கஷ்டப்படுகின்றனர்: ஆமத் மட்டும் ராஜகுமாரியிடமே மனதை வைத்திருக்கிறான்: இது அசைக்க முடியாதது என்றறிந்த ஜபார், தன் கப்பலைத் திருப்பிக்கொண்டு வருகிறான்.

கடும் காற்று காரணமாக ஆபு ஒரு பாலைவனத்தில் போய் கிடக்கிறான்: அங்கு அவன் முன்பு மர்ம புட்டி ஒன்று மூடப்பட்டு கிடக்கிறது: அதை அவன் திறக்கிறான்: எதிரே ஒரு பூதம் வியாபித்து நிற்கிறது. அந்த பூதம் ஆபுவைக் கொல்ல முயற்சிக்கும்போது, ஆபுவின் புத்தி சாதுர்யமே அவனுக்கு உதவுகிறது. அந்த பூதம் எவ்வளவு சக்தி வாய்ந்ததாயினும், மீண்டும் பழயபடி அந்த சீசாவுக்குள் போக முடியாது என்று ஆபு கூறுகிறான்.

மனோஹரமான காட்சி!

ஜான் பெய்ன்—ஸோஞ்ஜா ஹேனி பனிச்சரிவின்மீது உல்லாஸமாக உட்கார்ந்திருக்கும் காட்சி. "ஸன்வேலி ஸிரனேட்" என்ற 20-ம் நூற்றாண்டு பாக்ஸ் படத்தில் இவர்கள் நடிக்கின்றனர்.

மகத்தான ஆரம்பம்
28-3-42 சனிக்கிழமை முதல்
எல்பின்ஸ்டன்
தினசரி மாலை 3-15, 6-15, & 9-30 மணிக்கு
ஞாயிறு காலைக்காட்சி 10 மணிக்கு
ஒரு வெள்ளித்திரை அற்புதம் !
இதுவரை பார்த்திராத ஒரு அருமையான, வசீகரமான மயிர்க்கூச்செறியும் படம்
அலெக்ஸாண்டர் கோர்டா அளிப்பதும் ஸாபு நடிப்பதுமான
THIEF of BAGDAD



மற்ற நடிகர்கள்:
கான்ராட் வீட் — ஜூன் டூப்ரே — ஜான் ஜஸ்டின்
இப்படம் திரையிடப்படும் நாட்களில் இலவச டிக்கட்டுகளும் குறைந்த கட்டணங்களும் நிறுத்தப்பட்டுள்ளன.

அட்டைப் படம்.

ஜீன் டர்னி

பிரபல தேன் அமெரிக்கச் சிற்பி ஆன்டன் மார்டின் "மிஸ் பான மெரிக்கா" என்கிறார் மிஸ் ஜீன் டர்னியைப் பற்றி: மிஸ் டர்னி நல்ல ரூபவதி: "அமெரிக்காவில் இருக்கும் பல ரூபவதிகளின் அணிவகுப்பில் மிஸ் டர்னி முன் நின்றார்: வடக்கு, மத்திய, தேன் அமெரிக்க ஸ்திரீகளுக்குரிய லக்ஷணங்கள் பூராவும் இவரிடம் அமைந்திருக்கின்றன. கருத்த மயிரும் ரோஷ புத்தியும் தேன் அமெரிக்கரின் லக்ஷணம்: பசுமையான கண்களும் வலியுள்ள தேகமும் வட அமெரிக்கரின் லக்ஷணம்: இவை யாவும் அவரிடம் அமைந்திருப்பதால் தான் அவருக்குச் சிறந்த ஸ்தானத்தை அளித்திருக்கிறோம்" என்கிறார் மார்டின். இருபதாம் நூற்றாண்டு பாக்ஸ் கம்பெனியார் படங்களில் நடிக்கும் இவரது உருவச் சிலையை அந்த சிற்பி செய்யப் போகிறாராம். இவருக்கு 20 வயதாகிறது.

இதை மறுக்க அந்த பூதம் சீசாவுக்குள் நுழைகிறது: அப்போது அதை ஆபு அடைத்து விடுகிறான். ஆபுவின் சக்தியை பூதம் கண்டு கொண்டது. ஆபுவின் மூன்று கோரிக்கைகளை, நிறைவேற்றி வைப்பதாகவும் பூதம் உறுதியளிக்கிறது. முதல் கோரிக்கை பூர்த்தியாகிறது.

அடுத்தபடியாக ஒரு மஹத்தான விக்ரஹத்தில் இருக்கும் "எல்லாவற்றையும் பார்க்கவல்ல நேத்ரம்" என்றழைக்கப்படும் பெரிய சிகப்புக்கல்லை அபகரிக்கிறான் அவன் பூதத்தின் சகாயத்தினால். இதற்காக அவன் படும் கஷ்டங்கள் பல. மஹத்தான ஆபத்து அவனுக்கு எதிராக இருக்கிறது. அந்தப் பெரிய சிலை மீதேறி நேத்ரத்தை அபகரிக்கும்போது அம்பு மழை அவன் மீது பொழியப்படுகிறது. சிகப்புக் கல்லை எடுத்துக் கொண்டு ஆபு பூதத்திடம் திரும்புகிறான். பூதம் அவனைத் தூக்கிக்கொண்டு ஆமத்தினிடம் சேர்க்கிறது. இந்த கல் மூலம் அவர்கள் ஜபார் செய்யவிருக்கும் சூழ்ச்சிகளைக் கண்டு பிடிக்கின்றனர். ஆமத்தை ராஜகுமாரி மறந்து விடவேண்டும் என்ற நோக்கத்துடன், வாசனை ரோஜாப்பூக்களினால் அவளை மயக்க முயற்சிப்பதை அவர்கள் அறிகின்றனர். இந்த சமயத்தில் "நீ பாக்தாத்தில் இப்போது இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!" என்கிறான் ஆபு ஆமத்தைப் பார்த்து. அவ்வளவு தான்! பூதம் ஆமத்தை ஆகாயத்தில் தூக்கிக்கொண்டு போகிறது. ஆபுவின் கடைசி கோரிக்கையை இவ்விதம் பூதம் நிறைவேற்றி வைக்கிறது. இதற்கப்புறம்தான், விடுதலை பெற்றுவிட்டதாகவும் கூறிக்கொண்டே பூதம் மடைந்து போகிறது.

ஜபாரின் காதலுக்கு ராஜகுமாரி இணங்கும் சமயம்: அப்போது ஆமத் அந்த இடத்தில் கொண்டு வந்து விடப்படுகிறான்: ஆமத்தைப் பார்த்ததுமே மந்திர ஜால சக்தி மாள்கிறது: ராஜகுமாரி ஆமத்தைத் தழுவுகிறாள். உடனே இந்தக் காதலர்களைக் கைப்பற்றும்படி ஜபார் உத்திரவிட்டு, ஆமத் விஷயத்தில் மறுபடியும் தன் மந்திர சக்தியை ஜபார் பிரயோகிக்கிறான். ஆமத் ஒரு பாதாள குகையில் மரண தண்டனை விதிக்கப்பட்டு அடைப்பட்டுக் கிடக்கிறான்.

சிகப்புக்கல் உதவியினால் இதையெல்லாம் பார்த்து வந்த ஆபுவுக்குக் கோபம் தாங்க முடியவில்லை: தான் உதவி பண்ண முடியாதது ஒரு புறம் உள்ளத்தை வாட்டுகிறது: கோபத்தினால் அந்தக் கல்லை ஒரு பாறைமீது எறிய அது பல துண்டாகிறது: இதற்கப்புறம் அவன் தேவதைகள் இருக்கும் நாட்டில் தான் இருப்பதைக் காண்கிறான்: அந்த ஸ்தலத்து அதிபதி, ஆபுவிடம் மாய வில்லையும் மாய அம்புகளையும் கொடுத்து உதவுகிறான்: விரும்பியபோது ராணுவ வீரர்களாக மாறவல்ல கூழாங்கற்கள் கொண்ட பெட்டியையும் ஆபுவிடம் அவன் சமர்ப்பிக்கிறான். அந்த ராஜாவிடம் பறக்கும் ஜமக்காளம் ஒன்றும் இருந்தது. அதை ஆபுவுக்கு அவன் கொடுக்க மறுக்கிறான்: ஆபு அன்றிரவு அதைத் திருடிக் கொண்டு பாக்தாத்துக்கு பறந்து போகிறான்.

மந்திர அம்பை ஏய்தி ஆமத்தைக் கொலை செய்வதை ஆபு தடுக்கிறான்: பிறகு கூழாங்கற்களை எறிந்து, ஆமத்தைச் சுற்றி பல வீரர்களை நிறுத்துகிறான் அவன்: பறக்கும் குதிரையில் ஏறி தப்பியோடும் ஜபாரைத் தனது மாய வில்லில் மாய அம்பை வைத்து ஆபு சுட்டு கீழே வீழ்த்துகிறான்: ஜபார் உயிர் இழக்கிறான்.

பாக்தாத் மக்கள் ஆமத்தையும் ராஜகுமாரியையும் மிகுந்த குதூஹலத்துடன் வரவேற்கின்றனர். ஆபுவுக்கு பிரதம மந்திரி பதவியை அளிக்க, அவன் அதை ஏற்க சம்மதிக்கவில்லை. தனது பறக்கும் ஜமக்காளத்தில் ஏறிக்கொண்டு அவன் எங்கோ கிளம்புகிறான்.

யுனைடட் ஆர்டிஸ்ட் கம்பெனியார் வினியோகிக்கும் "பாக்தாத் திருடன்" என்ற இந்த ஆங்கில இயற்கை வர்ணப் படம் பார்ப்பதற்கு மிகவும் ஏற்றது. இதில் ஆபுவாக ஸாபுவும், ஆமத்தாக ஜான் ஜஸ்டினும், ஜபாராக கான்ரட் வீட்டும், ராஜகுமாரியாக ஜூன் டுப்ரேயும் நன்கு நடித்திருக்கின்றனர். நகரில் எல்பின்ஸ்டன் தியேட்டரில் 28-ம் தேதி முதல்.

* * * *

பிரபல ஜோதிஷர்

மஹாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர் ஒரு ஜாதகம் கணிக்க ரூ.2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ.5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ.5. ஆரூடம்3கேள்விகளுக்கு ரூ. 1 மேல் கேள்வி 1-க்கு

அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், 58, லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர், மதராஸ்.

ஏஜண்டுகள் தேவை

உயர்ந்த 80, 100 செ. நூல் புடவைகள், ஜரிகை துப்பட்டாக்கள், ஷர்ட்டிங், கர்ச்சீப், துவாலை, துண்டுகள் முதலிய பல தினுசுகள், சகாய விலைக்கு விற்பனை செய்ய நாணயமுள்ள ஏஜண்டுகளும் வியாபாரிகளும் உடனே தேவை.

ஸ்ரீ கிருஷ்ண வீவிங் பாக்டரி, கோட்டார். (திருவாங்கூர்)

சென்றவார நிகழ்ச்சிகள்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மிஸ்டர் கேஸி இதுவரை வாஷிங்டனில் ஆஸ்திரேலிய ஸ்தானீகராக இருந்தார்.

மிஸ்டர் கேஸி மத்தியக் கிழக்கில் பிரிட்டிஷ் யுத்த சபையின் பிரதிநிதியாயிருப்பாரென்றும் அங்கு யுத்தத்தை நடத்துவதற்கு அவசியமான ஏற்பாடுகளை அவர் செய்வாரென்றும் மிஸ்டர் சர்ச்சில் கூறினார்.

மிஸடர் கர்டின் புகார்

கெய்ரோவில் பிரிட்டிஷ் மந்திரியாக நியமிப்பதுபற்றி மிஸ்டர் கர்டின் கீழ்க்கண்ட அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்:—

பிரிட்டிஷ் யுத்த சபையில் ஸ்தானத்தோடு மத்தியக் கிழக்கில் மந்திரி வேலைக்கு மிஸ்டர் கேஸியை மிஸ்டர் சர்ச்சில் அழைத்திருப்பதாக எனக்கு மார்ச் 16-ம் தேதி தகவல் கிடைத்தது. இவ்வழைப்பு அதிகார முறையிலில்லையெனவும் தனிப்பட்ட மனிதர் என்ற ஹோதாவில் தான் அனுப்பப்பட்டதென்று எனக்குக் கூறப்பட்டது. தனிப்பட்ட நபர் என்ற ஹோதாவென்றால் இது பற்றிய முடிவு மிஸ்டர் சர்ச்சிலையும் மிஸ்டர் கேஸியையும் பொறுத்ததென உடனே மிஸ்டர் கேஸிக்கு நான் தந்தியடித்தேன். மிஸ்டர் கேஸி கெய்ரோ பதவியேற்றுக்கொள்வதில் ஆஸ்திரேலிய ஸர்க்கார் தடைசெய்யாது: இருப்பினும் இந்நெருக்கடியில் வாஷிங்டன் வேலையை வேறொருவரிடம் மாற்றுவது ஆஸ்திரேலிய சர்க்காருக்குக் கஷ்டமாயிருக்குமென்று அறிவித்தேன். சென்ற இரண்டரை வருஷங்களாக அவர் வாஷிங்டனில் பெற்ற அனுபவம் உபயோகப்படாமல் போகுமென பயப்படுவதாகவும், தெரிவித்தேன். ஆதலால் மிஸ்டர் கேஸி வாஷிங்டனிலேயே இருப்பது தான் ஆஸ்திரேலிய சர்க்காரின் விருப்பம்! ஆனால் இது ஓர் உத்தரவல்ல எனவும் கூறினேன்.

மிஸ்டர் கேஸி கீழ்க்கண்ட அறிக்கையை விடுத்திருக்கிறார்.

நான் மிஸ்டர் சர்ச்சில் நியமனத்தை அங்கீகரித்ததற்கான பல காரணங்களைப் பற்றி விவாதிப்பது பொது நலனுக்கானதல்லவென்று நான் கருதுகிறேன். நியமனம் ஒப்புக்கொள்வதைப்பற்றி உபயோகமான கருத்தைக் கூறக்கூடியவர்களிடமெல்லாம் கலந்தாலோசித்தேன். நியமனத்தை ஒப்புக் கொள்வதே நல்லது என்று அவர்கள் கூறினர். ஆஸ்திரேலிய நன்மைக்குப் பாதகமென்று நான் நினைத்திருந்தால், நியமன யோசனையையே ஒப்புக்கொண்டிருக்க மாட்டேன். யுத்தம் நடத்துவது சம்பந்தமாக என் கடமை, ஆஸ்திரேலியாவினுடையவும்—பொதுவாக பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தினுடையவும் நன்மை- இவைகளையே நான் முக்கியமாக யோசித்தேன்.

ஜப்பானின் நோக்கங்கள்

"டைம்ஸ்" பத்திரிகை ஜப்பானின் நோக்கங்களைப் பற்றி எழுதுவதாவது:—

ஜப்பானின் நோக்கங்கள் மூன்று. முதலாவது, பஸிபிக்கில் பிரிட்டிஷ், அமெரிக்க கடற்படை பலத்தைப் பிரிப்பது; இரண்டாவது தென் மேற்கு பஸிபிக்கிலுள்ள யுத்த சாதனங்களைக் கைப்பற்றுவது; மூன்றாவதாக அச்சு தேச வெற்றியிலும் ஒருதலைப்பட்சமான சமாதான உடன்படிக்கையிலும் லாபகரமான பங்கு பெறுவது. ஜெனரல் ராமலின் படைகள் எகிப்து, ஸூயஸ் கால்வாயை நோக்கிப் பாயும் சமயத்தில் ஜப்பானியர் அராபியக் கடலை நோக்கி முன்னேறக்கூடும். அதே சமயத்தில் ஜெர்மன் படைகள் காகஸஸ்ஸையும், லிபியா, இராக், பெர்ஷியா இவைகளையும் நோக்கி முன்னேறக் கூடும்,

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்து கொண்டார்: தம் மனதுக் குகந்த் தேசத்திற்கு அருந் தொண்டாற்ற முடியும் எனவும் அவர் நிச்சயமாக நம்பினார்' அவர் மனதில் இருந்த நல்லெண்ணத்திற்குக் குறைவில்லை: இந்தியா அடைந்த ஏமாற்றத்திற்கும் குறைவில்லை. "யுத்தம் மிகவும் நெருக்கடியாக இருந்த காலத்தில் . இந்தியாவில் ஆறு மாத காலம் அமைதியை நிலவ நான் உதவினேன்" என்றார் மிஸ்டர் மாண்டேகு தமது புத்தகத்தில். இது மிகவும் உண்மையே.

ஸர் க்ரிப்ஸ் திட்டம்

இப்போது ஸர் க்ரிப்ஸ் வந்திருக்கும் தற்சமயத்தில் இது தான் ஞாபகத்திற்கு வருகிறது. டில்லி வந்து சேர்ந்ததுமே ஸர் க்ரிப்ஸ் தமது உத்தேசத்தை பத்திரிகைக்காரர்களிடம் தெரிவித்து விட்டார்: இரண்டு வாரம் தான் தங்கியிருக்கப் போவதாகவும், அதற்குள் முக்கியமானவர்களை யெல்லாம் கலந்து பேசப் போவதாகவும், பிரிட்டிஷ் மந்திரி சபை ஏகோபித்து தயாரித்த திட்டத்தைத் தான் தாம் கொண்டு வந்திருப்பதாகவும், நிர்ப்பந்தம் ஏற்பட்டால் சில சிறு மாறுதல்கள் தான் அதில் செய்யப்படலாம் என்றும் அவர் திட்டமாகச் சொல்லி விட்டார். ஆனால் மிஸ்டர் மாண்டேகு இந்தியாவில் போய்ப் பார்க்காத இடமே கிடையாது: அவர் இங்கு வெகு உல்லாஸமாகப் பிரயாணம் செய்தார்: ஸர் க்ரிப்ஸ் இந்தியாவுக்கு முன்பே வந்து நிலைமையை நேரில் கண்டறிந்தவர்! மிஸ்டர் மாண்டேகு வந்த போது வைஸ்ராய் கவுன்ஸிலில் ஸர் சங்கரன் நாயர் ஒருவர் தான் இந்திய மெம்பர்; தற்சமயம் எட்டு இந்திய அங்கத்தினர்கள் அந்த சபையை அலங்கரிக்கின்றனர்.

எங்கும் ஒரே கேள்வி!

இவ்வளவும் காலம் மாறி வருவதையே சூசிப்பிக்கிறது! தமது கருத்துக் கேற்ப ஸர் க்ரிப்ஸ் காரியத்தை நடத்துவாரா என்பதை யறியவே இந்நாட்டில் எல்லோரும் காத்திருக்கின்றனர். மிதம் மீறிய கோரிக்கைகளை வற்புறுத்தக்கூடாது; நாம் ஒன்றுபட இதுவே சமயம்: விட்டுக் கொடுத்து பரஸ்பர க்ஷேமத்தை நாடுவோம் என்கிறார் புனாவிலிருந்து மஹாகனம் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் இந்த விஜயம் யுத்த தந்திரம், ராணுவ நோக்கம்; நாம் ஒன்றுபட்டு தியாகத்திற்குத் தயாராக வேண்டும்: மக்களின் பூரண நம்பிக்கையையும் அபிமானத்தையும் பெற்ற தேசிய ஸர்க்கார் தான் நாம் வேண்டுவது என்கிறார் ஸ்ரீ சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார். ஸர் க்ரிப்ஸ் மேற்கொண்டிருக்கும் இந்த தூது மகத்தானது. பல வருஷங்களாக பல நிபுணர்களாலும் கைவிடப்பட்ட ஒரு பிரச்னையை அவர் தீர்த்து வைத்தால் சரித்திரத்தில் அவருக்கு சாஸ்வதமான ஸ்தானம் கிடைக்கும்: ருஷ்யாவில் எதிர்பாராததை நிறைவேற்றினார்: இந்தியாவிலும் அதே மாதிரி செய்வாரா என்பதே எங்கும் கேள்வி!

த்தி அச்சம்பவங்களில் பல கீர்த்தனங்கள் பாடியுள்ளார். அவைகளில் நம் கைக்குக் கிடைத்தது 25, 26 கீர்த்தனங்கள் தான். அவைகளெல்லாம் நம் மித்திரன் வாரப்பதிப்பில் ஏற்கனவே வெளி வந்துள்ளன. இது உத்ஸவ ஸம்பிரதாய மங்கள கீர்த்தனம்.

இக் கீர்த்தனத்தால் ஸ்வாமிகள் ஸ்ரீராமனுடைய ஸ்வரூபத்தில் ஈடுபட்டவராய் ஒவ்வொரு அவயவங்களின் நேர்மையை வாயாரச் சொல்லி மகிழ்ந்து பகவானுக்கு மங்கள ஹாரத்தி எடுக்கிருர்.

சுந்தரமுனகு:—

ரூபவான்சுபக:—ஸ்ரீமான் கந்தர்ப்ப இவ மூர்த்திமான் |
(வால்மீகி, ஸுந்தரகாண்டம். 30 ச்லோகம்)
என்ற ச்லோகம் இதற்கு ஆதாரமாகும்.

பாலமுனகு:—தொரகுனு இடுவண்டி என்ற கீர்த்தனத்தின் 2—வது சரணத்தில்.

சிருநவ்வுலுகல வத நம்பு ந முங்—
குருலத்ல புசு போலமு முத்து
குரிபுதிவ்ய பாலம்பு நதிலகமு
மெரெயு புவி லாவண்ய நிதிநி

என்று ஸ்ரீ ராமனின் அழகு வர்ணிக்கப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

மாடலகு:—'மானஸ ஸஞ்சரரே' என்ற கீர்த்தனத்தில், ஸ்வரஜித கன ரவமாதுர்யே' என்று பகவானின் பேச்சுவன்மையைக் குறித்துக் கூறப்பட்டுள்ளது.

ரத்னல க்ரீட:—

ராமம் ரத்னக்ரீட குண்டலயுதம்கே யூரஹாரான்விதம்
ஸீதாலம் கிருதவாம பாகம மலம் ஸிம்ஹாஸனஸ்தம்விபும்—
ஸுக்ரீவாதி ஹரீச்வரை: ஸுரகணை: ஸம் ஸேவ்யமானம்
ஸதா விஸ்வாமித்ர பராசராதி மூனிபி: ஸம்ஸ்தூயமானம் ப்ரபும்||
என்ற ச்லோகத்தைப் பார்க்கவும்.

'நாடக ஸுத்ரதார:—'பரிபாலயதாசரதே' என்ற கீர்த்தனத்தின் முதல் சரணத்தில் இதே மஹாப்ரயோகம் காணப்படுகிறது.

பாணமுனகு:—ஒகமாட, ராம, ராம, வாசாம, கொசரமே, எவரிச்சிரிரா முதலான கீர்த்தனங்களில் ஸ்ரீராமன் கையிலுள்ள பாணத்தின் சக்தியைக் குறித்துக் குறிப்பிட்டுள்ளார்.

ஜாணதனமுனகு:—

நியதாத்மா மஹாவீர்யோ
த்யுதிமான் த்ருதிமான்வசீ
புத்திமான் நீதிமான் வாக்மீ
ஸ்ரீமான் சத்ரு நிபர்ஹன: |

என்ற வால்மீகி வாக்யம் இதற்கு ஆதாரமாகும்.

பொங்குசு:—பகவான் மாபலியை நிக்ரஹிப்பதின் பொருட்டு பூமியை ஓரடியால் அளந்து ஆகாயத்தை ஓரடியால் அளந்த தருணத்தில் புண்ய நதியான கங்கை பகவத் சரணாரவிந்தத்தின் ஸம்மந்த மடைந்து விளங்கிய ஸந்தர்ப்பத்தை குறிப்பிடுகிருர்.

IV

ராகம் தன்யாஸி — ஆதி தாளம்

(8-வது மேள ஜன்யம்: ஆ. ஸகமபநிஸ. அவ. ஸம்பூர்ணம்)

பல்லவி

கா, ம பஞ பா	பா நீ தா பா	பா நீ	ஸ்ா நீ	ஸ்ா ;	பா நீ
ஜா ன கி நா	ய க நீ கு	ஜய	மங்க	ளம்	ந் ரு ப
ஸ் ரிஸ் ஸ்நி தப	மகமா பநிதப	மகமா	பநிதப	பபமக	ரிஸா
ஸ . ன ஸுந் த .	ர . மு ன . கு	ஜ . ய	மங் க .	ளம் .	.

சரணம்

பதாப மகமா	ஸா பா நீ நிப	பா, நி	ஸ்ா ஸ்ா	ரி நி ஸ்ா	ஸ்ா ஸ்ா
பா . ல மு . ன	கு நீ து க .	போ ல	மு ன	கு . மங்	க ளம்
ஸ்க்ம்க்ரீஸ்ா	ஸ்ாரிநி ஸ்ாஸ்ா	பா, நி	ஸ்நிதப	மகதப	மகரிஸ
நீ . . ல வர்ண்	. நீ ப . லு வஜ	ரா ல	மு . ன .	கு . மங்	க . ளம் .

(மற்ற சரணங்களையும் இது போன்றே பாடவும்.)

நினைவிருக்கட்டும்

தேகாரோக்கியம் கெடாமலிருப்பதற்கு எப்படி கலப்பற்ற சுத்தமான உணவு உட்கொள்ளுகிருேமோ அதுபோலவே, கண்களுக்கும், மூளைக்கும் கெடுதல் நேரிடாது. ஞாபக சக்தியும் சுறுசுறுப்பும் அடைவதற்கு கலப்பற்ற பொடியே அவசியமென்பதை பொடி உபயோகிக்கும் சகோதரர்கள் அறிதல் வேண்டும். இவ்வித கலப்பற்ற பொடிக்கு மதராஸ் ஸ்ரீ அம்பாள் அண்டு கம்பெனி, யார் 35 ஆண்டுகளாக புகழ் பெற்றவர்களென்பது யாவரும் அறிந்ததே. பொடி வாங்கும் போது **ஸ்ரீ அம்பாள் பட்டணம் பொடியை**யே கவனித்து வாங்க நினைவிருக்கும்படி கேட்டுக் கொள்ளுகிருேம்.

உங்களுக்கு
மலச்சிக்கலோ அல்லது
ரத்தக்கொதிப்போ அல்லது
மண்டை கனமோ அல்லது
தலைவலியோ அல்லது
மயக்கமோ அல்லது
வாய்துர்நாற்றமோ அல்லது
சருமப்படுவனே இருந்தாலும்
உடனே பரீக்ஷியுங்கள்

காஸ்டபீன்

ருசி மிகுந்த சாக்லட் மல விரோசனி. மலச்சிக்கலை ஒழிக்க பத்திரமும் நிச்சயமுமான வழி.

குழந்தைகள், நடுவயதினருக்கும், ஆரோக்யம், பலத்தை அளித்திருக்கின்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் 2 சாக்லட் உள்ள பாகெட் ஒரு அணு. ஒவ்வொன்றும் 25, 50, 100 கொண்ட பாட்டில்களிலும் கிடைக்கும்.

CASTOPHENE
CASTOR OIL CHOCOLATES
ஏஜண்டுகள் :—
மெஸர்ஸ்:
சிவராம் & ஸ்வாமி லிமிடெட்.
154, நைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி., மதராஸ்.

பாத்ருடுவின் "பால்சஞ்சீவினி"
குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டிகளை குணப்படுத்தும்
Dr பிள்ளா பாப்பய்ய பாத்ருடு & Bros.,
11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர். போன் 86257. :: திருச்சி பிராஞ்சு: 81, ஆண்டார் தெரு, தெப்பக்குளம்.

வீதிகளிலும் நம்பிக்கையற்ற கடைகளிலும் வாங்காதீர்கள்.
நஞ்சன்கூட பல்பொடி
பல வியாதிகளைத் தடுக்கவும், குணப்படுத்தவும்
ஜீரண கூலாயில்
அஜீரண பித்த சமனி — உஷ்ண சமனி — ஸ்நான தைலம்
கவனிக்க போலிகளால் பற்களுக்கே அபாயம்
சோல் ஏஜண்ட்ஸ்: யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, மதருஸ்
(உதவி வைத்தியர் Dr. P. S. C. மணி) (தபால் மூலம் சிகிச்சை பெறுக)

சென்ற வாரம் சௌந்தர்ய மஹாலில் மாஜி மந்திரி ஸ்ரீ டி. பிரகாசம் தலைமையில் காங்கிரஸ் ஊழியர் கூட்டம் நடந்தது. 'சமாதானப்படை' அன்று ஆரம்பிக்கப்பட்டது. (பி. பி. பி.)

பிரிட்டிஷ் உள் நாட்டுப் படைத் தலைவர் ஜனரல் ஸர் ஆலன் ப்ருக் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் திட்டங்களையும் நேரில் தாமே கவனிக்கிருர்.



(வலது)

சுதேச மன்னர் சபைக் கூட்டம் சமீபத்தில் நடந்தது. நாவர்நகர் ஜாம் ஸாஹேப் அக்ராசனம் வஹித்தார். ராஜப்பிரதிநிதி மே. த. லின்லித்கோ பிரபு இக் கூட்டத்தைத் திறந்து வைத்தார்.